# தொல்காப்பியம்
## உரைவளம்
# சொல்லதிகாரம்

# விளிமரபு

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:
ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

## (உரைவளம்)

## விளிமரபு

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

## BIBLIOGRAPHICAL DATA



| | |
|---|---|
| Title of the book | Tolkāppiyam Viḷimarapu |
| Author | A. SIVALINGANAR<br>International Institute of Tamil Studies, Madras-600 113 |
| Publisher | International Institute of Tamil Studies, T.T.T.I., Tharamani, Madras-600 113 |
| Publication Number | 92 |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | May, 1984 |
| Paper used | 14.2 kg. D/Demy Royalaseema |
| Size of the Book | 21 × 14cms |
| Printing types used | 10 point |
| Number of copies printed | 2200 |
| Number of pages | xii + 104 |
| Price | Rs. 6/- (Rupees Six only) |
| Printer | SRI GOMATHY ACHAGAM,<br>7, Chinnappa Rowther Street,<br>Triplicane, Madras-600 005 |
| Binding | Card board |
| Artist | Eswari |
| Subject | Grammar |
| Summary | Commentaries on Tolkāppiyam Viḷimarapu |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600113.

# முன்னுரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின்மூலம் 15 ஆம் நூலாகத் தொல்காப்பியச் சொல்லதிகார 'விளி மரபு உரைவளம்' வெளியிடுகிறது.

முன்னைய உரைவள நூல்களிற் போலவே இதனகத்தும் தொல்காப்பியச் சொல்லதிகார உரையாளர் உரைகளும், தற்கால அறிஞர் உரைகளும், கருத்துகளும், சூத்திரங்களுக்கு டாக்டர் இலக்குவனாரின் ஆங்கில மொழி பெயர்ப்பும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும் அடங்கியுள்ளன.

இந்நூலையும் சிறப்புறப் பதிப்பித்த ஆ. சிவலிங்கனாரையும் அவர்க்கு உதவிய டாக்டர் சீதாலட்சுமியையும் பாராட்டுகிறேன்.

வழக்கம் போல ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் எங்கள் நிறுவனத் தலைவரும் தமிழகக் கல்வியமைச்சரும் ஆம் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு என்றென்றும் நன்றியுடையேன்.

நல்ல முறையில் அச்சிட்டுதவிய கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்கட்கும் நன்றி.

சென்னை
1-6-1984

ச. வே. சுப்பிரமணியன்

# பதிப்புரை

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் 'விளிமரபு உரைவள' மாகியஇந்நூல் மிகக்குறைந்த பக்கங்களுடன் வெளிவருகின்றது. தொல் காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்களுள் விளிமரபுச் சூத்திரங்களின் உரைகள் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் அதிகம் இல்லாமையும், பெயரறியப்படா ஒருவர் உரை விளி மரபுக்கு இன்மையும், தற்கால அறிஞர்களிடையேயும் விளிமரபு பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்மையும் பக்கக் குறைவுக்குக் காரணமாம்.

விளிமரபுச் சூத்திரங்களுக்கு டாக்டர் சி. இலக்குவனாரின் ஆங்கில மொழி பெயர்ப்பும், பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமைச் சூத்திரங்களும் அமைந்த இந்நூலில், இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாட னார் உரைகளும், வெள்ளைவாரணனார் ஆதித்தர் உரைகளும், சுப்பிரமணிய சாஸ்திரியார் பதிப்பாசிரியர் கருத்துரைகளும் அடங்கியுள்ளன.

இந்நூல் வெளிவரத்துணைபுரிந்தோர் டாக்டர் சீதாலட்சுமி, டாக்டர் வை. இரத்தின சபாபதி, க. வா. சச்சிதானந்தம் ஆகி யோர்; இவர்கட்கு நன்றி.

தரமான நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் கொண்டுள்ள நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கும் நிறுவனத் தலைவரும் தமிழகக் கல்வியமைச்சரும் ஆம் மாண்பு மிகு செ. அரங்க நாயகம் அவர்கட்கும் நன்றியுடையேன்.

சிறப்புற அச்சிட்ட ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்கட்கும் நன்றியுடையேன்.

ஆ. சி.
1-6-1984

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | iii |
| பதிப்புரை | iv |
| பொருளடக்கம் | v—vi |
| System of Transliteration | vii |
| சுருக்க விளக்கம் | viii |
| விளிமரபு—தொடக்கம் | 1 |
| விளியின் பொது இலக்கணம் | 2—10 |
| உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமாறு | |
| விளியேற்கும் உயிரீறுகள் | 10—18 |
| இகர ஐகார வீறுகள் | 18—19 |
| ஓகார உகர வீறுகள் | 19—22 |
| உயிரீறுகளில் விளியேலாதன | 22—25 |
| அளபெடைப் பெயர் | 25—29 |
| முறைப் பெயர் | 29—32 |
| அண்மைவிளி | 32—34 |
| புள்ளியீறுகள் விளியேற்பன | 35—40 |
| னகார வீறு | 41—44 |
| ஆன் | 44—46 |
| ஆன் இறுதி வினையாலணையும் பெயர் | 46—49 |
| ஆன் இறுதி—பண்புப் பெயர் | 49—51 |
| அளபெடைப் பெயர் | 51—53 |
| முறைப் பெயர் | 53—55 |
| னகர வீற்றுள் விளியேலாதன | 55—57 |

| | |
|---|---|
| ரகர வீறு—அர் ஆர் | 57—59 |
| ரகரவீறு—வினையாலணையும் பெயர் | 59—61 |
| ரகரவீறு—பண்புப் பெயர் | 61—63 |
| அளபெடைப் பெயர் | 63—64 |
| ரகரவீறு—விளியேலாதன | 64—68 |
| லகர ளகர வீற்றுப் பெயா | 68—72 |
| ளகர வீற்று வினையாலணையும் பெயரும் பண்புப் பெயரும் | 72—74 |
| ளகர வீற்று முறைப் பெயர் | 74—70 |
| ளகர வீற்றுள் விளியேலாதன | 76—77 |
| லகர ளகர வீற்று அளபெடைப் பெயர் | 77—79 |
| விரவுப் பெயர் விளியேற்குமாறு | 80—83 |
| அஃறிணைப் பெயர் விளியேற்குமாறு | 83—87 |
| புறனடை | 87—96 |
| அம்ம விளியேற்குமாறு | 90—93 |
| உயர்திணைப் பெயருள் விளியேலாதன | 93—98 |
| பயன்படுத்தப் பெற்ற நூல்கள் | 99—100 |
| சொல், தொடர் அகராதி | 101—103 |
| சூத்திர முதற் குறிப்பகராதி | 104 |

## System of Transliteration

### உயிரெழுத்துகள்—Vowels

அ—a
ஆ—ā
இ—i
ஈ—ī
உ—u
ஊ—ū
எ—e
ஏ—ē
ஐ—ai
ஒ—o
ஓ—ō
ஔ—au

### மெய்யெழுத்துகள்—Consonants

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க்—k | ங்—ṅ | ய்—y |
| ச்—s | ஞ்—ñ | ர்—r |
| ட்—t | ண்—ṇ | ல்—l |
| த்—th | ந்—n | வ்—v |
| ப்—p | ம்—m | ழ்—l̲ |
| ற்—r̤ | ன்—n̲ | ள்—ḷ |

## சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆதி—ஆதித்தர்
ஆ. மொ—ஆங்கில மொழி பெயர்ப்பு
இல. வி. — இலக்கண விளக்கம்
இ-ள்—இதன் பொருள்
உ-ம்—உதாரணம்
எழு, எழுத்—எழுத்ததிகாரம்
எ-று—என்றவாறு
ஒரு—ஒருவர்
கலி—கலித் தொகை
சிவ—சிவலிங்கனார்
சுப்—சுப்பிரமணிய சாஸ்திரியார்
சூ—சூத்திரம்
சொல்—சொல்லதிகாரம்
தொல்—தொல்காப்பியம்
நச்—நச்சினார்க்கினியர்
நற்—நற்றிணை
நன்—நன்னூல்
நேமி—நேமிநாதம்
பி. இ. நூ.—பிற்கால இலக்கண நூல்கள்
பி. கு.—பிற்குறிப்பு
புண—புணரியல்
புறம்—புறநானூறு
பெய—பெயரியல்
பெரும்—பெரும்பாணாற்றுப்படை
பொருள்—பொருளதிகாரம்
முத்து—முத்துவீரியம்
முத்தொள்—முத்தொள்ளாயிரம்
விளி—விளிமரபு
வினை—வினையியல்
வீர—வீரசோழியம்
வெள்—வெள்ளைவாரணனார்
வேற்.—வேற்றுமையியல்
வேற்.ம, —வேற்றுமை மயங்கியல்

## விளிமரபு—பொருட் சுருக்கம்

**விளி.**

விளிவேற்றுமை என்பது, மற்றைய வேற்றுமைகளுக்கு ஐ முதலிய உருபு தனித்து இருப்பது போல் தனியுருபாக இல்லாமல் அதனையேற்றுக் கொள்ளக்கூடிய பெயரிலே அமைந்து இடப்பதாம். (1) அவ்விளிவேற்றுமையின் அமைப்பு பலவகைப்படும். அவை இவையென அறிதற்கு இனி விதந்து கூறப்படும். (2)

**உயர்திணைப் பெயர்கள்—செய்மைவிளி**

**உயிரீறு.**

அப்பெயர்களுள் உயர்திணைப் பெயர்களுள் இ உ ஐ ஓ என்னும் நான்கு உயிர்களையிறுதியாகவுடைய பெயர்களே விளியேற்கும். (3)

அவ்வீறுகளுள் இகர ஈறு ஈகார ஈறாகும். உ-ம்: நம்பி—நம்பீ. ஐகார ஈறு ஆய் எனத் திரியும். உ-ம்: நங்கை—நங்காய். (4)

கோ—கோவே, வேந்து—வேந்தே என ஓகரமும் உகரமும் ஏகாரம் பெறும். (5) இவற்றுள் உகரம் குற்றியலுகரமாகும். சிறுபான்மை முற்றியலுகரமும் ஏகாரம் பெற்று விளியாகும். திரு—திருவே என வரும். (6)

மேற்கூறிய நான்கு உயிர்களன்றிப் பிற உயிர்கள் உயர்திணைப் பெயர் ஈற்றில் நின்று விளிகொள்ளா. இகர ஈறு ஈகாரமாகும் என்றாலும் அவ்வாறன்றிக் கணி—கணியே என ஏகாரம் பெறுதலும் உண்டு. மக என்னும் அகரவீறும் மகவே என விளியில் வரும். (7)

அளபெடைப் பெயரில் வரும் இகரம் மேலும் அளபெடை மிக்கு இயல்பாக வரும். தொழி என்பது வேலைக்காரியையுணர்த்தும் இகர ஈற்றுப்பெயர். அது தொழிஇ என அளபெடைப் பெயராக வரும். அது மேலும் தொழிஇஇ என மிக்குவரும். அவ்வாறு மிக்குவரும் அப்பெயர் இறுதி இகரம் யாதோர் திரிபும் இல்லாமல் இயல்பாக வரும். தொழிஇஇ எனக் காண்க. (8)

---

பிறைக்கோட்டில் உள்ள எண் விளிமரபுச் சூத்திர எண்

முறைப் பெயரிடத்து வரும் ஐகார இறுதி ஆ எனத் திரியும், உ-ம்: அன்னை—அன்னா. (9)

**அண்மை விளி.**

நான்கீற்றுப் பெயர்களும் அண்மை விளியாயின் யாதோர் திரிபும் இன்றி இயல்பாய் வரும்.

உ-ம்: நம்பி வேந்து, நங்கை, கோ—வாழி எனக்காண்க. (10)

**உயர்திணைப் பெயர்கள்—சேய்மைவிளி.**
**மெய்யீறு.**

விளியேற்கும் உயர்திணைப் பெயர்களுள் மெய்யீறாக வருவன நான்கு. அவை ன் ர் ல் ள் என்பனவற்றையீறாகவுடையன. (11) பிற புள்ளியீற்றுப் பெயர்கள் விளி கொள்ளா (12)

அந்நான்கனுள் னகர வீற்றுள் அன் இறுதிப் பெயர்களின் அன் என்பது ஆ எனவாகும். உ-ம்: சோழன்—சோழா (13) அன் என்பது அண்மை விளியில் வரின் ஆவாகாமல் அகரமாகும். உ-ம்: சோழன்—சோழ. (14)

ஆன் இறுதிப் பெயர் திரிபின்றி இயல்பாக வரும். சேரமான் மலையமான் எனக் காண்க. (15)

ஆன் ஈற்று வினையாலணையும் பெயர். விளியேற்பதாயின் அவ்வீறு ஆய் எனத்திரியும். உ-ம்: வந்தான்—வந்தாய்.(16)

ஆன் ஈற்றுப் பண்புப் பெயரும் கரியான்—கரியாய் என ஆன் ஆய் ஆகும் (17)

உழாஅஅன் என்பதுபோலும் அளபெடைப் பெயர்களின் அன் ஈறு திரிபின்றி இயல்பாயே நிற்கும். (18)

மகன்—மகனே என முறைப் பெயரின் அன் ஈறு ஏகாரம் பெற்று வருதல் உண்டு.(19)

ரகர வீற்று உயர்திணைப் பெயர்களுள் ஆர் ஈறும் அர் ஈறும் ஈர் எனத்திரியும். உ-ம்: பார்ப்பார்—பார்ப்பீர், கூத்தர்—கூத்தீர் (21)

ரகரவீற்று வினையாலணையும் பெயராயின் ஆர் ஈறு ஈர் ஆதலோடு ஏகாரமும் பெற்றுவரும். வந்தார்—வந்தீரே.(22)

ரகரவீற்றுப் பண்புப் பெயரும் கரியார்—கரியீர், கரியீரே என ஈர் ஈறாதலேயன்றி, அதனுடன் ஏகாரம் பெறுதலும் உண்டு. (23)

சிறாஅஅரி என்பது போலும் அளபெடைப் பெயர்கள் திரி பின்றி இயல்பாகவே விளியில் வரும். (24)

நும் திரிந்து வரும் நீயிர், யாவர் இவைகளும் விளி கொள்ளா (26)

லகர ளகர வீற்றுப் பெயர்கள் விளி கொள்வதாயின் அவ்வெ ழுத்துகளின் அயல் எழுத்து குறிலாயின் நெடிலாக மாறி விளி கொள்ளும். உ-ம் : குரிசில்—குரிசீல், மக்கள்—மக்காள் எனக் காண்க. (25) லகர ளகரங்களின் அயல் எழுத்து இயல்பாகவே நெடிலாயின் பெண்பால், கோமாள் என்பனவாக யாதோர் திரிபும் இன்றி இயற்கையாகவே விளியேற்கும். (28)

தெரிநிலை வினையாலணையும் பெயராயின் ஆள் என்னும் இறுதி ஆய் எனத் திரியும். நின்றாள்—நின்றாய். அதுவே பண்புப் பெயராயினும் அவ்வாறாம். கரியாள்—கரியாய்.

ளகர வீற்று முறைப் பெயர் மகள்—மகளே என ஏகாரம் பெறும். (30)

மாஅஅல் என்னும் அளபெடை ஏற்ற லகரவீறு யாதோர் திரிபும் இன்றி இயற்கையாய் விளியேற்கும் (32)

**விரவுப் பெயர்கள்**

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் நிற்கும் பெயர்கள் விரவுப் பெயர்களாம். பொதுவாய் நின்று ஒருகால் உயர்திணையில் விரவி வருவதும், ஒருகால் அஃறிணையில் விரவி வருவதும் ஆகிய இரு நிலையையும் விரவுப் பெயர் அடையும். பொதுவாயிருந்து உயர்திணையில் வரும் விரவுப் பெயர்கள், மேலே உயர்திணைப் பெயர்களில் வரும் என்று கூறப்பட்ட இ உ ஐ ஒ ன் ர் ல் ள் என்னும் எழுத்துக்களையீற்றிற் கொண்டன வாகவே வரும். அப்பெயர்களெல்லாம் உயர்திணையீறுகளா மாறு கூறிய முறையிலேயே விளியேற்கும்.

இ. சாத்தி—சாத்தீ—இ—ஈயாயிற்று.
உ. பூண்டு—பூண்டே—உகரம் ஏகாரம் ஏற்றது.
ஐ. தந்தை—தந்தாய்—ஐ ஆய் ஆயிற்று.
ன். சாத்தன்—சாத்தா—ன் கெட்டு ஆகாரமாயிற்று.
ல். கூந்தல்—கூந்தால்—ஈற்று அயல் நீண்டது.
ள். மக்கள்—மக்காள் ஈற்றயல் நீண்டது.
ஓகார ஈறும் ரகர வீறும் கிடைக்கப் பெறவில்லை.

**அஃறிணைப்பெயர்.**

உயிரீற்று அஃறிணைப் பெயர்களும் புள்ளியீற்று அஃறிணைப் பெயர்களும் விளியேற்கும்போது ஏகாரம் பெற்று வரும். உ-ம்: நரி-நரியே மரம்-மரமே (34)

உயர்திணை அஃறிணைப் பெயர்கள் யாவும்—(எல்லா ஈறுகளும்) சேய்மை விளியாங்கால் எழுத்துகளின் மாத்திரைமிக்கு (அளபு இறந்து) வரலாம் உ-ம்: நம்பி-நம்பீ-நம்பீஇ

சாத்தன்—சாத்தா—சாத்தா அ (35)

அம்ம என்பது உரையசைக்கிளவி இது விளிகொள்ள நேர்தலும் உண்டு. அப்போது அது அம்மா என நீண்டுவரும். (36)

**விளிகொள்ளாப் பெயர்கள்.**

பின்வருவன விளிகொள்ளாதன.
தான், அவன், இவன், உவன், யான், யாவன் (20)
அவர், இவர், உவர் (25)
அவள், இவள், உவள், யாவள் (31)

தமன், தமள், தமர்;
நமன், நமள், நமர்;
நுமன், நுமள், நுமர்;
எமன், எமள், எமர். } இவைபோல் வனவும் (37)

# தொல்காப்பியம்—சொல்லதிகாரம்

## (உரைவளம்)

## விளிமரபு

இளம்பூரணர்.

இவ்வோத்து என்னபெயர்த்தோ வெனின், விளி வேற்றுமை யது இலக்கணம் உணர்த்தினமையின் 'விளிமரபு' என்னும் பெயர்த்து.

சேனாவரையர்.

நிறுத்தமுறையானே விளிவேற்றுமை யுணர்த்திய எடுத்துக் கொண்டார்; அதனான் இவ்வோத்து விளிமரபு என்னும் பெயர்த் தாயிற்று.

தெய்வச்சிலையார்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், 'விளிமரபு' என் னும் பெயர்த்து. நிறுத்த முறையானே எழுவகை வேற்றுமை யும், அவ்வாறு மயக்கமும் உணர்த்திய பின் எட்டாவதாகிய விளி யிலக்கணம் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்.

நச்சினார்க்கினியர்.

இது நிறுத்த முறையானே விளி உணர்த்துதலின், இவ் வோத்து 'விளிமரபு' என்னும் பெயர்த்தாயிற்று.

கல்லாடனார்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், விளிமரபு என் னும் பெயர்த்து. மேலோத்தினோ டிவ்வோத்தினிடை யியை பென்னோவெனின், மேல் வேற்றுமை விளியோ டெட்டே' என நிறுத்தார் அந்நிறுத்த முறையானே விளியொழித்து அவ்வேழும் உணர்த்தி, இனியொழிந்து நின்ற விளியையுணர்த்துகின்றார் என்பது.

ஆதித்தர்.

'விளி கொள்வதன்கண் வேற்றுமை எட்டே' (வேற். 2) என்று விளியைத் தனித்துக் கூறினமையால் ஈண்டும் 'விளிமரபு' எனத் தனியாகக் கூறுகிறார். விளி—கூப்பிடுதல்; படர்க்கையில் உள்ளாரை அழைத்தல். அதற்குரிய முறைமை யிங்குக் கூறப் படுகின்றது.

## 1. விளியின் பொது விலக்கணம்

*115. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்று மியற்கைய வென்ப (1)*

(விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப).

ஆங்கில மொழி பெயர்ப்பு

இலக்குவனார்.

The vocative is said to be clear in its nature with the nouns which have it.

பிற்கால இலக்கண நூல்கள்:

**நேமிநாதம். சொல். 23**

*ஈறு திரிதலும் ஈற்றயல் நீடலும்
வேறு வருதலும் மெய்யியல்பும்—கூறும்
இரண்டொடு மூவகைப்பேர் முன்னிலைக்கண் என்றும்
திரண்டுவிளி யேற்கும் திறம்.*

**நன்னூல் 303.**

*எட்டன் உருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.*

**பிரயோக விவேகம். 17**

*..............பன்மை யொருமை விளி
துற்றிய சம்புத்தி சம்போ தனமெனத் தோற்றிடுமே.*

---

* சூத்திரத்தின் முன்னர் உள்ள எண் சொல் லதிகாரத் தொடர் எண்; பின்னர் உள்ள எண் விளிமரபுத் தொடர் எண்.

**இலக்கண விளக்கம். 205**

*எட்டன் உருபே எய்துபெய ரீற்றின்*
*திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்*
*திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்*
*தன்முக மாகத் தானழைப் பதுவே*

**முத்துவீரியம் பெயரியல்.98**

*விளியெனப் படுப ஏற்கும் பெயரொடு*
*விளங்கத் தோன்றும் இயற்கைய வென்ப.*

**இளம்.**

என்பது சூத்திரம்.

இனி இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், விளி வேற்றுமையது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: விளியென்பன தம்மையேற்கும் பொருளொடு யாப் புறத்தோன்றும் தன்மைய என்றவாறு.

'தன்மைய' என்றான். [1]விளி பெயரொடு கொள்ளும் என்பதூஉம், கொள்ளுங்கால் ஏற்கும் என்பதூஉம், [2]பெயரொடு கொள்ளா என்பதூஉம் சொல்லப்பட்டதாம்.

'தெளியத் தோன்றும்' என்றது, விளியை வேற்றுமை யன்றென்பாரும் உளர், அது மறுத்து வேற்றுமையே என்றற்கு என்பது.

[3]'எனப்படுப' என்று பன்மை கூறினார், ஈறுதிரிதல், ஈற்றயல் நீடல், பிறிதுவந்தடைதல், இயல்பாதல் என நான்கு பகுதிய வாகலான் என்பது.

---

1. விளிபெயரொடு பொருந்தும் என்பதூஉம், பொருந்த வரின் பெயர் அதை ஏற்கும் என்பதூஉம் எனப் பொருள் கொள்க.

2. சில பெயரொடு கொள்ளா என்றிருப்பின் நன்று. நீயிர் முதலியன விளி கொள்ளாவாதலின்.

3. எனப்படுவது என ஒருமையில் கூறல்வேண்டும். விளிப் பொருள் பெயர் இறுதி திரிதல் முதலிய நான்கு வகை யில் வருதலின் 'எனப்படுப' எனப்பன்மையாற் கூறி னார். சாத்தன்—இயல்பு, சாத்த—இறுதி (கெடுதல்) திரிதல், சாத்தா—ஈற்றயல் நீடல், சாத்தனே—பிறிது வந்தடைதல்.

சேனா.

இதன் பொருள்: விளியென்று சொல்லப்படுவன தம்மை ஏற்கும் பெயரொடு விளங்கத் தோன்றும் இயல்புடையவென்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

[1]விளிவேற்றுமை எதிர்முகமாக்குதற் பொருட்டாதல் பெயரானே விளங்குதலிற் கூறாராயினார்.

ஈறுதிரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதலும் என்னும் வேறுபாடுடைமையான் 'விளியெனப் படுப' என்றார்.

'கொள்ளும் பெயரொடு' எனவே, கொள்ளாப் பெயரும் உள என்பதாம்.

இயல்பு விளிக்கண், திரியாது நின்ற பெயர் ஈறே விளியெனப் படுதலின், ஆண்டுந் தெற்றென விளங்கும் என்பார், 'தெளியத் தோன்றும்' என்றார்.

தெய்.

இதன் முதற் சூத்திரம் என்னுதலிற்றோவெனின் விளியிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: விளியென்று சொல்லப்படுவன தம்மையேற்கும் பெயரொடு விளங்கத் தோன்றும் இயற்கையினையுடைய என்று சொல்லுவர், எ-று.

ஏனை வேற்றுமைபோல உருபு பிரிந்து வாரா; [2]பெரும்பான்மையும் பெயரோடு ஒற்றுமைப்பட்டு வரும் என்பதூஉம், 'கொள்ளும் பெயரொடு' என்றமையாற் கொள்ளாப் பெயரும் உள என்பதூஉம் பெறுதும்.

---

1. எதிர்முகமாக்குதலாவது ஒருவனை ஒருவன் தான் கூறுவதனைக் கேட்குமாறு தன் எதிர்முகமாக்குதல். விளி என்பது அழைத்தல் எனப்பொருள்படும். ஒருவனை எதிர்முகமாக்கவே விளித்தல் வரும். அதனால் விளிவேற்றுமை என்றால் எதிர்முகமாக்கும் வேற்றுமை எனப் பொருள் படும். அதனால் விளிவேற்றுமை என்னும் பெயரே எதிர்முகமாக்கல் என்பது எட்டாம் வேற்றுமைப் பொருள் என்பதை உணர்த்தும்.
2. சாத்தனே என்பதில் சாத்தன்+ஏ எனப் பிரிக்கப்படுதலின் பெரும்பான்மையும் என்றார்.

'விளி' யென்றதனான் அவ்வேற்றுமை [1]விளித்தற் பொருண்மைக்கண் வரும் என்று கொள்க.

நச்.

இச்சூத்திரத்தான் விளியது பொது இலக்கணம் கூறுகின்றார்.

இ-ள்: விளிஎனப்படுப—விளி என்று சொல்லப்படுவன, கொள்ளும் பெயரொடு—தம்மையேற்கும் பெயரொடு, தெளியத் தோன்றும் இயற்கைய என்ப—விளங்கத் தோன்றும் இயல்பினையுடைய என்று கூறுவர் ஆசிரியர்; எ—று.

ஈறு திரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பு ஆதலும் என்னும் வேறுபாட்டால் 'படுப' என்றார். 'கொள்ளும் பெயர்' எனவே கொள்ளாப் பெயரும் உளவாயின.

இயல்பாய் விளியேற்பனவும் தெற்றென விளங்கும் என்பதற்குத் 'தெளியத் தோன்றும்' என்றார்.

கல்.

இம்முதற் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், விளி வேற்றுமையது பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: விளியென்று சொல்லப்படுவன தம்மையேற்கும் பெயரொடு யாப்புறத்தோன்றும் தன்மையவென்று சொல்லுவர் புலவர், எ-று.

'படுப' எனப்பன்மை கூறியவதனான் அவ்விளிதான் ஈறுதிரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிதுவந்து அடைதலும், இயல்பாதலும் என நான்கு வகைப்படும் என்பது பெறப்பட்டது.

'தெளிய' வென்றதனான் விளிதன்னை, எழுவாயின் வேறுபட்டதன்றி வேறோர் வேற்றுமை என்பாரும் உளர் என்பதூஉம் இவ்வாறு [2]ஓர் வேற்றுமையாக நேர்ந்தார் என்பதூஉம் பெறப்பட்டது.

ஆதி.

விளியென்று கூறப்படுவது, தான் கொண்ட பெயர் [3]எடுப்பாகத் தோன்றும் தன்மையாம்.

1. விளித்தற் பொருண்மை — எதிர் முகமாக்குதற் பொருண்மை.

2. ஓர் வேற்றுமையாக — தனியாக ஒரு (எட்டாம்) வேற்றுமையாக.

3. எடுப்பாக—தெளிவாக

அழைக்கும்போது ஒலி வன்மையும் விளக்கமும் பெறுவதால் 'தெளியத் தோன்றும் தன்மையாம்' என்றார்.

1. என் அம்மாள் இல்லத்தில் இருக்கிறார்.

2. அம்மா அன்னமிடுங்கள் இவற்றைக்கூறி ஒலி வேறுபாடு உணர்க, [1]என்ப—கவிமரபு இசைநிறை.

**116.** அவ்வே
யிவ்வென் வறிதற்கு மெய்பெறக் கிளப்ப. (2)

(அவ்வே
இவ் என அறிதற்கு மெய்பெறக் கிளப்ப)

ஆ. மொ: இல.

What those are will be explained in this chapter.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேற்சொல்லப் பட்டனவற்றை இனிச்சொல்லுப என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை: அவை இவையென அறிதற்கு [2]வழக்குப் பெற இனிச் சொல்லப்படும் என்றவாறு.

சேனா.

இ-ள் : விளி கொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும் இவையென மாணாக்கன் உணர்தற் பொருட்டு அவை யிவ்வோத்தினகத்துப் பொருள்படக் கிளக்கப்படும், எ-று.

இது கூறுவாம் என்னும் [3]தந்திரவுத்தி.

[4]அவ்வே யெனக் 'கொள்ளும் பெயரொடு தெளியத் தோன்றும்' (விளி. 1) எனப் பெயரான் உணர்த்தப்படுவதாய்

1. என்ப என்பதற்கு என்று சொல்லுவர் ஆசிரியர் எனப் பொருளாயினும் இங்கு சூத்திரத்தின் இசையை நிரப்ப வந்ததாதலின் இசைநிறை என்றும் இவ்வாறு இசை நிறை யமைத்தல் கவிஞர் வழிவழிக் கையாண்டு வரல் உண்டு ஆதலின் கவிமரபு என்றும் கொள்க, பிறவிடங் களிலும் இப்படியே காண்க—'கவிமரபு இசைநிறை' என்னும் ஆட்சி ஆதித்தருடையதாம்.
2. வழக்குப்பெற -இருவகை வழக்கிலும் பெறும்படி.
3. தந்திரம்—நூல். தந்திரவுத்தி—இலக்கண நூலார் கையாளும் உத்தி.
4. இப்பகுதியின் விளக்கத்தை உரையிறுதியில் சுந்தர மூர்த்தி விளக்கத்தில் காண்க.

நின்ற விளியைச் சுட்டிய பெயரைச் சுட்டுதல் இடர் உடைத்தெனின், விளிவேற்றுமையாவது கொள்ளும் பெயரின் வேறன்றி அவை தாமேயாய் நிற்றலின், அப்பெயரைச் சுட்டவே விளியும் சுட்டப்பட்டனவேயாம். அதனான் இடரின்றென்பது. இவ்வாறுரையாது அவ்வேயெனச் சுட்டப்பட்டன விளிவேற்றுமையெனின், வருஞ்சூத்திரத்தின் அவைதாம் எனப்பட்டனவும் விளிவேற்றுமையேயாய்'மெய்ப் பொருள் சுட்டிய விளிகொள் பெயர்' (விளி. 3) என்பதனோடு இயையாவாம் என்பது.

விளி கொள்ளும் பெயரும், கொள்ளாப் பெயரும் உயர்திணை விரவுப்பெயர் ஈண்டு உயர்திணைப் பெயருள்ளும் அடங்குதலும் நுண்ணுணர்வினார்க் கல்லது அறியலாகாமையின், ஏனோரும் அறிதற்கு அவை கிளக்கப்படும் என்பார் 'இவ்வென வறிதற்கு' என்றார்.

தெய்.

எய்தியதன் மேற்சிறப்பு விதி வகுத்தலை நுதலிற்று.

இ-ள் : சொல்லப்பட்ட விளிவேற்றுமைதாம் இவையென அறிதற்கு [1]உருபு பெறவும் கிளப்ப ஆசிரியர், எ-று.

[2]உம்மை யெஞ்சி நின்றது.

இவ்விரண்டு சூத்திரத்தானும் சொல்லியது, விளிவேற்றுமை வருவழி, அதனையேற்கும்பெயர் இயல்பாகியும் திரிந்தும் குறைந்தும் மிக்கும் வரும் என்றவாறு.

நச்.

இஃது அப்பெயர்களைக் கூறுவல் என்கின்றது.

இ-ள்: அவ்வே இவ் என அறிதற்கு—விளி கொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும் இவை என மாணாக்கன் உணர்தற் பொருட்டு, மெய் பெறக் கிளப்ப—பொருள் பெற எடுத்து ஓதுவர் ஆசிரியர், (அதனான் யானும் அம்முடிபே கூறுவல்) எ—று.

---

1. மெய்பெற என்பதற்குப் பிறர் 'பொருள் பெற' எனப் பொருள் கொள்ளத் தெய்வச் சிலையார் உருபு பெற எனக்கொண்டார். உருபு என்றது விளிப் பெயரின் ஈறு திரிதல் முதலியவற்றை.
2. மெய் பெறவும் என்பது மெய்பெற என நிற்றலின் 'உம்மை எஞ்சி நின்றது' என்றார்.

கல்.

என்னுதலிற்றோவெனின், மேற் சொல்லப்பட்டவற்றை இனிச் சொல்லுப என்ப துணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: மேல் விளியேற்பவும் ஏலாதனவும் எனச் சொல்லப் பட்டவற்றை இவையென அறியும்படி வழக்குக்குத் தழுவ எடுத்தோதுப ஆசிரியர்; அதனான் யானும் அம்முடிபே கூறுவல் என்பது.

இது மொழிவாம் என்னும் தந்திர வுத்தி.

மற்றஃதாமா றென்னை? 'கிளப்பல்' என்னாது 'கிளப்ப' என்றமையின் முன் நூலுள் அவ்வாறு கூறுமென்ப தன்றே பெறுவதெனின், [1]சொற்கிடை அதுவெனினும் ஆண்டுக் கூறிய வாறு போல யானும் ஈண்டுக் கூறுவல் என்பது கருத்தாதல் கொள்க.

[2]இனிக் 'கிளப்ப' என்பதனைப் பெயர்ப்படுத்துக் கூறலும் ஒன்று.

ஆதி.

அவ்விளி முறைகள் இவ்வாறு என அறியப் பொருள் தெளி வுறக் கூறப்படுகின்றன.

[3]அ=அவை: தனிநெடில் பலவின் பாலாக நிற்கிறது.

மெய் பெற—மெய்ப்பொருள் தெளிவுற.

சிவலிங்கனார்.

இச்சூத்திரத்தின்'அவ்வே'என்பது எதைச் சுட்டுகிறது என்பதில் இரண்டு கருத்துகள் உள. ஒன்று, முன் சூத்திரத்தில் உள்ள 'விளியெனப்படுப' என்பதைச் சுட்டுகிறது என்பது. இரண்டா வது, அச்சூத்திரத்தில் 'கொள்ளும் பெயர்' என்றதனால் கொள்ளாப் பெயரும் உள என்பது பெறப்பட்டமையின், விளி கொள்ளும் பெயர் விளி கொள்ளாப் பெயர் என்னும் இரண்டை

1. சொற் கிடையாது—பாடம் (தவறு)
2. பெயர்ப்படுத்துக் கூறலாவது "அதனால் யானும் அம்முடிபே கூறுவல்" என்பதனை ஒழித்துக் கிளப்ப என்பதற்கு முடிபாகக் 'கிளப்ப ஆசிரியர்' எனப் பெய ரொடு படுத்துக் கூறுதல்.
3. அ=அவை என்பது தவறு; அவ் என்பதே அவை என்னும் பொருளது. தனி நெடில் ஏகாரம் பலவின் பாலில் வருவதில்லை.

யும் சுட்டுகிறது என்பது. முன்னைய கருத்தினர் இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் ஆதித்தரும். பின்னைய கருத்தினர் சேனா வரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியோர்.

விளிமரபில் விளிவேற்றுமை பற்றியே கூறப்படுதலின் அதாவது விளியேற்கும் பெயர்கள் எவ்வெவ்வாறு விளியேற்கும் என்பது பற்றியே கூறப்படுதலின் முன்னையோர் கருத்தே ஏற்புடையதாம்.

விளியேலாப் பெயர்கள் யாவை என்பது பற்றி ஆங்காங்கும் இறுதிச் சூத்திரத்தும் கூறுதலால் விளி கொள்ளும் பெயர்கள் கொள்ளாப் பெயர்கள் கலந்தே கூறப்பட்டன எனக்கொண்டு, 'அவ்வே' என்பது விளிகொள்ளும் பெயர் கொள்ளாப் பெயர் என்பனவற்றைச் சுட்டுகிறது என்றனர் பின்னையோர்.

சேனாவரையர் தம் கொள்கையை வலியுறுத்த இரண்டு காரணம் காட்டுவர்.(1)பெயரே விளியாக வருதலினால் பெயரைச் சுட்டும் என்றால் விளியைச் சுட்டும் என்று கொள்ளலாம் என்பது ஒரு காரணம். அப்படியானால் விளியைச் சுட்டும் என்றாலும் பெயரைச் சுட்டும் என்று கொள்ளலாகாதோ என்னும் வினா எழும். அதனால் இரண்டாவது காரணம் அவர்க்குச் சிறப்பாக அமைந்தது.

(2) அடுத்த சூத்திரம் உயிர்திணைப் பெயர்களுள் எவ்வெவ் வெழுத்தீற்றுப் பெயர்கள் விளியேற்கும் என்பது கூறுவது. அதில் 'அவைதாம்' என்னும் சுட்டு வருகிறது. இச்சூத்திரத்து 'அவ்வே' என்பது விளிவேற்றுமையைச் சுட்டுமாயின் 'அவை தாம்' என்பதும் விளிவேற்றுமையையே சுட்டுவதாகும். (அவ்வே அவைதாம் இரண்டும் அவை என்னும் ஒரே பொருளன.) அதனால் 'அவைதாம்' தேவையற்றது. அன்றியும் அச்சூத்திரப் பொருள் கொள்ளுங்கால், "அவைகள் இ உ ஐ ஓ என்னும் இறுதியையுடைய நான்கு பெயரும் உயர்திணைப் பெயருள் விளி கொள்ளும் பெயர்" எனக் கொள்ளும்போது 'அவைதாம் உயர்திணைப் பெயருள் விளி கொள்ளும் பெயர்' என்பது பொருந்தவில்லை. அதாவது விளியே உயர்திணைப் பெயருள்தான் வரும் என்பது போல அமைந்துவிடுகின்றது. விளி கொள்ளும் பெயர் விளி கொள்ளாப் பெயரைச் சுட்டுவதாக 'அவ்வே' என்பதைக் கொண்டால், 'அவைதாம்' என்பது விளி கொள்ளும் பெயரைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். எனவே 'அவ்வே' என்பது விளியைச் சுட்டாமல் பெயரையே சுட்டும் என்க.

சேனாவரையரின் இரண்டாவது கருத்து ஏற்புடையதுபோல் தோன்றினாலும் 'அவைதாம்' என்பது 'அவ்வே' என்பதால் சுட்டப்பட்ட விளிகொள்ளும் பெயர், விளி கொள்ளாப்பெயர் என்னும் இரண்டனுள் விளி கொள்ளும் பெயர் என்பதை மட்டும் சுட்டும் என்பது எப்படிப் பொருந்தும்? எனவே அவர் கருத்து ஏற்பதற்கில்லை.

இளம்பூரணர் அவைதாம் என்பதற்கு 'விளியேற்பன தாம்' எனப் பெயர்களைச் சுட்டுவதாகக் கொண்டார். 'அவ்வே' என்பதற்கு விளிவேற்றுமைகள் எனக் கொண்டமையால் அவை தாம் என்பதற்கு விளியேற்கும் பெயர்களைக் கொண்டார். எனினும் முழுமையாகப் பொருள் விளக்கம் இல்லை.

இது கருதிப் போலும் தெய்வச் சிலையார் அவ்வே என்பது விளிவேற்றுமையைச் சுட்டுவதாகக் கொண்டவர், அவைதாம் என்பதைப் பாடம் கொள்ளாமல் 'அவற்றுள்' என்பதைப் பாடமாகக் கொண்டார். அவற்றுள் என்பதற்கு அவ்விளிவேற்றுமைகளுள் (விளிவேற்றுமைப் பெயர்களுள்) என்பது பொருள். 'அவற்றுள் உயர்திணை மருங்கின் விளி கொள் பெயர் அப்பால் நான்கே' என முறையாக முடிபு கொண்டு அமைவதை அச் சூத்திரத்திற் காணலாம். எனவே தெய்வச்சிலையார் பாடம் சிறக்கும் என்னலாம்.

### 2. உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமாறு விளியேற்கும் உயிர்ஈறுகள்

**117.** *அவைதா
மிவ்வுவ் வையோ வென்னு மிறுதி
யப்பா னான்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே (3)

(அவைதாம்
இ உ ஐ ஓ என்னும் இறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே)

ஆ. மொ: இல.

Those are four ending in i, u, ai and ō which are the nouns of vocative case belonging to High class.

---

* அவற்றுள்—தெய்வச்சிலையார் பாடம்.

பி.இ.நூ:

'ஏனைப் புள்ளி, (126) என்னும் சூத்திரத்திற் காண்க.

நன். 304

இ உ ஊவோடு ஐ ஓ.........
............உயர்திணை...........விளிப்பன.

இல. வி. 206

இ உ ஊவோடு ஐ ஓ.........
.........உயர்திணை......விளிப்பன
ஒல்வழி யறிதல் வழக்கத் தான.

முத்து. பெ. 100

அவை தாம்
இ உ ஐ ஓ இறுதிக் கிளவி
உயர்திணை மருங்கின் விளியேற் கும்மே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், விளி என்பன தாம் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை : உயிரெழுத்தினுள் உயர்திணைப் பெயர்க்கு விளி யேற்கும் எழுத்தாவன இவை, எ-று.

'உயர்திணை மருங்கின் மெய்ப் பொருள் சுட்டிய' எனவே மற்றைத் திணைக் கண்ணும் உள ; சிறுவரவின எனக் கொள்க.

அவை வருமாறு : 'குறையறப் பூத்த கொடி முல்லாய்' என்புழி முல்லை-முல்லாய் எனவும்,

'செங்கால் நாராய்' என்புழிச் செங்கால் நாரை—செங்கால் நாராய் எனவும் வரும். பிறவும் அன்ன.

சேனா.

இ-ள் : கிளக்கப் படுவனவாகிய பெயர்தாம் இஉஐஓ என்னும் இறுதியையுடைய அக்கூற்று நான்கு பெயரும் உயர்திணைப் பெயருள் விளி கொள்ளும் பெயர், எ-று.

*அஃறிணைப் பெயர் ஆகு பெயராய் உயர்திணைக்கண் வந்துழியும், விரவுப் பெயர் உயர்திணைக்கண் வருங்காலும் அவை விளியேற்கு மிடத்து உயர்திணைப் பெயராம் என்றற்கு 'உயர்திணைமருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய' என்றார்.

---

* அஃறிணைப் பெயராயும் உயர்—பாடம் (சிறப்பின்று)

உ—ம்: 'சுடர்த் [1]தொடீஇ கேளாய்' (கலி. 51) எனவும், சாத்தீ எனவும் அவை உயர்திணைப் பெயராய் விளியேற்றவாறு கண்டுகொள்க.

[2] 'மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள்பெயர்', 'அப்பால் நான்கு' என்பன எழுவாயும் பயனிலையுமாய் இயைந்து ஒரு சொல்நீர்மையவாய் 'அவைதாம்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின.

[3] அஃதேல் உயர்திணை விரவுப் பெயரைப் பொருள் பற்றி உயர்திணைப் பெயர்க்கண் அடக்கினாரால் எனின் முன்னர் 'விளம்பிய நெறிய விளிக்குங் காலை' (விளி. 33) எனல் வேண்டா வாம் பிற வெனின், நன்று சொன்னாய்; 'விளம்பிய நெறிய விளிக்குங் காலை' என்புழி, விரவுப் பெயர் 'என்னாது அஃறிணை விரவுப் பெயர்' என அஃறிணைக்கண் வருவனவற்றை விதந்தோ துதலான், உயர்திணைக்கண் வருவன உயர்திணைப் பெயருள் அடங்கும் என்பதற்கு அச்சூத்திரமே கரியாயிற்றென்பது.

அல்லதூஉம் புள்ளியீற் றுயர்திணைப் பெயர்க்கண் அவ்வீற் றுயர்திணை விரவுப்பெயரும் அடங்கி விளிகோடல் எய்துதலா னன்றே, தான் நீயிர் என்பன விளி கொள்ளாவென எய்தியது விலக்குவாராயிற்று. அதனானும் அடங்குதல் பெறுதும் என்பது.

அல்லதூஉம் உயர்திணை யதிகாரத்து முறைப்பெயர் விளி யேற்குமாறு கூறினமையானும் பெறப்படும்.

விரவுப்பெயரை உயர்திணைப் பெயரோடு மாட்டெறிய வாகலின், மாட்டேற்றான் முறைப்பெயர் ஆகாரமும் ஏகாரமும்

---

1. தொடி—அஃறிணை; அது தொடியணிந்தவளை உணர்த்தலின் ஆகு பெயராய் உயர்திணையாகி விளி யேற்றது. சுடர்த்தொடி—அன்மொழி என்பர் நச்சினார்க்கினியர். சாத்தி என்பது விரவுத்திணை; அஃது உயர்திணையாகி விளியேற்றது.
2. விளிகொள் பெயர் — எழுவாய், அப்பால் நான்கு— பயனிலை. இவை விளிகொள் பெயர் அப்பால் நான்கு என ஒரே தொடராகி 'அவைதாம்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின.
3. உரையிறுதியில் சுந்தர மூர்த்தி விளக்கம் பார்க்க.

பெற்று விளியேற்றல் எய்தாமையின் [1] ஈண்டுக் கூறினார் என்றா ரால் உரையாசிரியர் எனின், அக்கருத்தினராயின் அஃறிணை என் னும் சொல்லொழித்துக்.

*கிளந்த விறுதி விரவுப் பெயரே*

*விளம்பிய நெறிய விளிக்குங் காலை* (விளி. 33) எனவும், இதன்பின்,

*முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி*

*ஆவோடு வருதற்குரியவு முளவே* (விளி. 9) எனவும், இதன் பின் னகார ளகார வீற்றிருவகை முறைப் பெயரு மடங்கப்

[2] *புள்ளி யிறுதி ஏயொடு வருமே* (விளி. 34) எனவும் ஓதுவார் மன் ஆசிரியர். என்னை? மயங்கக் கூறல் என்னும் குற்றமும் நீங்கிச் சூத்திரமும் சுருங்குமாதலான். அவ்வாறோதாமை யானும், முறைப்பெயரேயன்றித் தான், நீயிர் என்பனவும் ஈண்டுக் கூறப்பட்டமையானும் உரையாசிரியர்க்கு அது கருத்தன் றென்க.

தெய்.

உயர்திணைப் பெயருள் உயரீறாகி விளியேற்கும் பெயரை வகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உயர்திணை இடத்துள்ள பொருளைச் சுட்டிய விளி யேற்கும் பெயர் இ, உ, ஐ, ஓ என்னும் ஈற்றினையுடைய அக் கூற்று நான்கு, எ-று.

உயர்திணை மருங்கினுள்ள பொருள் சுட்டிய என்றமையான் உயர்திணைப் பெயரென வகுத்தோதப் படுவனவும், விரவுப் பெயருள் உயர்திணை குறித்தனவும் கொள்ளப்படும்.

நச்.

இஃது உயர்திணைப் பெயருள் விளியேற்பன இவை என் கின்றது.

இ-ள்: அவைதாம்—கிளக்கப் படுவனவாகிய பெயர்தாம் எண்வகைய அவற்றுள், உயர்திணை மருங்கில் மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயர்—உயர்திணையிடத்து மெய்ப் பொருளைக் கருதின விளிகொள்ளும் உயிர் ஈற்றுப் பெயர்கள், இ உ ஐ ஓ என்னும் இறுதி அப்பால் நான்கே—இ உ ஐ ஓ என்னும் இறுதியையுடைய அக்கூற்று நான்கு பெயரும், எ-று.

---

1. விளிமரபு சூ. 19 ல்—பார்க்க.
2. இது சூத்திரமன்று சூத்திரப் பொருளாகும்.

'மெய்ப்பொருள்' என்றதனான் அஃறிணைப்பெயர் அன்மொழியாய் உயர்திணைக்கண் வந்துழி உயர்திணைப் பெயராய் விளியேற்றலும், அவ்வீற்று அஃறிணைப் பெயர்களும் உயர்திணைப் பெயர்கள் போல விளியேற்றலும் கொள்க.

'சுடர்த் தொடீஇ கேளாய்' (கலி. 51) எனவும் 'தும்பி' (குறுந். 2) எனவும் [1]'சிறு மீன் கவுட் கொண்ட செந்தூவி நாராய்' (ஐங். எழு. 68) [2]'கொன்றாய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர் நின்றீர் அறிந்தேன் நெடுங்கணாள் சென்றாளுக்கு (திணைமாலை நூற்றைம்பது 81) எனவும் வரும்.

கல்.

என்-எனின் உயிரீற்று உயர்திணைப் பெயருள் விளியேற்பன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேல் விளியேற்கும் எனப்பட்டவைதாம் இ உ ஐ ஓ என்று சொல்லப்பட்ட ஈறுகளையுடைய அக்கூற்று நான்கு பெயரே உயர்திணையிடத்து மெய்ப்பொருளினைச் சுட்டிய விளியினைக் கொள்ளும் பெயராவன, எ-று.

உயிரீற்று உயர்திணைப் பெயர்களுள் விளியேற்பன இந்நான்கும் எனவே ஒழிந்த உயிரீறு விளியேலா என்பதூஉம் இதனாற்பெற்றாம். உயிரீறு பன்னிரண்டும் உயர்திணைப் பெயர்க்கு ஈறாமோஎனின் அஃது ஈண்டு ஆராய்ச்சியன்று; ஈறாவனவற்றுள் விளியேற்பன இவை யென்றவாறு.

'மக' என்னும் அகரவீறும், ஆடூஉ மகடூஉ என்னும் உகரவீறும் இந்நிகரன விளியேலாதன எனக் கொள்க.

மெய்ப்பொருள் சுட்டிய என்றதனான் இவ்வீற்று அஃறிணைப் பெயர்களும் இவ்வுயர்திணைப் பெயர்போல விளியேற்பன என்பது கொள்ளப்படும். அவை தும்பி தும்பீ எனவும், முல்லை முல்லாய் எனவும் வரும்.

ஆதி.

ஈற்றில் இ உ ஐ ஓ எனக்கொண்ட உயர்திணைப் பெயர்கள் நான்குவகையும் பொருள்விளங்க விளியாகநிற்பனவாம். தம்பி-இ,

---

1. பொருள்: சிறிய மீனை வாயில்கொண்ட சிவந்த தூவிகளையுடைய நாரையே. தூவி—பெருஞ்சிறகில் சேர்ந்துள்ள சிறிய சிறகுகள்.
2. பொருள்: நெடிய கண்ணளாகிய இப்பாலை வழிச் சென்ற என் மகளுக்காக ஏ குருந்தமரமே கொன்றை மரமே. கொடிமுல்லையே நீங்கள் வாடி நின்றீர்கள் என்பதனை அறிந்தேன்.

வேந்து—உ, அன்னை—ஐ, கோ—ஓ. †மாதா—மாதாவே—ஆ விளிபெறுகிறது தற்கால இலக்கணம்.

சு. சுந்தரமூர்த்தி

உயர்திணைப் பெயர், உயர்திணை விரவுப் பெயர், அஃறிணைப்பெயர், அஃறிணை விரவுப் பெயர் என்ற நான்கனுள்.உயர்திணை விரவுப் பெயரை மட்டும் உயர்திணைக்கண் அடக்கி, ஏனையிரண்டையும் தனித்தனியே கூறி முடிப்பர். இங்ஙனம் மூன்று பிரிவாக விளிமரபில் வகுத்துக் கொண்டு விளியேற்பனவற்றையும் விளியேலாதனவற்றையும் கூறுகின்றார் ஆசிரியர் என்பது முன்னர்க் கூறப்பட்டது. ஈண்டு அங்ஙனம் உயர்திணை விரவுப் பெயரை உயர்திணைக்கண் அடக்கினார் என்பதற்கு மூன்று காரணங்கள் கூறுகின்றார் சேனாவரையர். அவை வருமாறு:-

1. ஆசிரியர் தொல்காப்பியர் அஃறிணைப் பெயரின் வேறாக அஃறிணை விரவுப் பெயர் (விளி.33) என்ற ஒன்றைக் கூறுவதால், உயர்திணைப் பெயரின் வேறாக உயர்திணை விரவுப் பெயர் என்ற ஒன்றும் உளதாக வேண்டும் என்பது.

2. உயர்திணைப் பெயர்களில் விளியேற்பன இவை விளியேலாதன இவையென்பதை விளி மரபு நூற்பா 3 முதல் 32 நூற்பா வரை ஆசிரியர் கூறுகின்றார். இவற்றிடையே 9 ஆம் நூற்பாவில் அன்னை, அத்தை என்ற சொற்களும், 19ஆம் நூற்பாவில் மகன், மருமகன் என்ற சொற்களும், 30ஆம் நூற்பாவில் மகள், மருமகள் என்ற சொற்களும் விளியேற்குமாறு கூறுகின்றார். இவையெல்லாம் முறைப் பெயர்கள். முறைப் பெயர்கள் எல்லாம் விரவுப் பெயர்களாகும் என்பது பெயரியல் 20 ஆம் நூற்பாவால் அறியப்படும். இவ்விரவுப் பெயர்கள் உயர்திணையைக் குறித்து வருங்கால் உயர்திணை விரவுப் பெயராம் என்பது சேனாவரையர் கருத்து. ஆதலின் உயர்திணையதிகாரத்து (3 முதல் 32 ஆம் நூற்பாவரை) இவ்வுயர்திணை விரவுப் பெயர்களையும் (9,19,30 ஆம் நூற்பாக்களில்) கூறியிருப்பதால், உயர்திணைப் பெயரில் உயர்திணை விரவுப் பெயரும் அடங்கும் என்பது ஆசிரியர் கருத்தாயிற்று என்பர்.

3. உயர்திணைப் பெயர்களில் விளியேலாதன இவையென்பதை ஆசிரியர் 20, 25, 26, 31 ஆகிய நூற்பாக்களில் கூறுகின்றார். இவற்றில் 20 ஆம் நூற்பாவில் கூறப்படும் தான் என்னும்

† மாதா—உயர்திணைப் பெயரன்று; விரவுப்பெயர் ஆதலின் இங்குக் காட்டலாகாது.

பெயரும் 26ஆம் நூற்பாவில் கூறப்படும் நீயிர் என்னும் பெயரும் விரவுப் பெயர்கள். அஃதாவது உயர்திணை விரவுப் பெயர்கள். விளியேலாத உயர்திணைப் பெயர்களிடையே விளியேலாத இவ்வுயர்திணை விரவுப் பெயர்களையும் ஆசிரியர் கூறியிருத்தலின், உயர்திணைப் பெயருள் உயர்திணை விரவுப் பெயரையும் அடக்கிக் கூறுதல்ஆசிரியர் கருத்து என்பதும் நன்கு விளங்கும்.

இங்ஙனம் உயர்திணை விரவுப் பெயரை உயர்திணைக்கண் அடக்கிக் கூறும் ஆசிரியர் அஃறிணை விரவுப் பெயரையும் அஃறிணைக்கண் அடக்கிக் கூறாது தனித்துக் கூறியது என்னையெனின் கூறுதும். உயர்திணைக்கண் எவ்வெவ் வீறுகள் எவ்வெவ்வாறு விளியேற்கின்றனவோ அங்ஙனமே உயர்திணை விரவுப் பெயர்க்கண் உள்ள ஈறுகளும் விளியேற்றலின், உயர்திணை விரவுப் பெயரை உயர்திணைக்கண் அடக்க முடிந்தது. ஆனால் அஃறிணைப் பெயர் விளியேற்கு மாறுபோல அஃறிணை விரவுப் பெயர் விளியேற்காமையின், அதனை அதன்கண் அடக்கிக் கூறவில்லை. இக்கருத்தினால்தான் உயர்திணைப் பெயர் விளியேற்பதையடுத்துக் 'கிளந்தவிறுதி அஃறிணை விரவுப் பெயர்,விளம்பிய நெறியே விளிக்குங்காலை' என மாட்டேறு பெற நூற்பாயாத்ததும், இதனையடுத்து இந்நெறியின் வேறாக விளியேற்கும் அஃறிணைப் பெயரை இறுதிக்கண் கூறியதும் ஆகும்.

எனவே, உயர்திணையதிகாரத்தில் ஆசிரியர் முறைப்பெயர்கள் விளியேற்குமாறு (9, 19, 30) கூறியிருப்பதற்கும் தான் (20) நீயிர் (26) என்ற பெயர்கள் விளியேலாஎன்று கூறியிருப்பதற்கும் காரணம், உயர்திணை விரவுப் பெயரை உயர்திணைக்கண் அடக்கிக் கூறலே ஆசிரியர் கருத்தாதல் பற்றியாம். இது சேனாவரையரின் முடிந்த கருத்து.

ஆனால் இளம்பூரணர், ஆசிரியர் உயர்திணை யதிகாரத்தில் முறைப் பெயர் விளியேற்குமாறு கூறியிருத்தற்குக் காரணம் வேறு என்பர். அவர் கருத்து வருமாறு:-

உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமாறு கூறிய ஆசிரியர், அடுத்து விரவுப் பெயர்கள் விளியேற்குமாறு கூறுகின்றார். அங்ஙனம் கூறுகின்றவர் விரவுப் பெயர்கள் எல்லாம், உயர்திணைப் பெயர்கள் எங்ஙனம் விளியேற்குமோ அங்ஙனமே விளியேற்கும் (33) எனக் கூறுகின்றார். இங்ஙனம் கூறினும் விரவுப் பெயர்களில், எல்லாப் பெயர்களும் உயர்திணைப் பெயர்கள் போன்று விளியேற்பன இல்லை எனக் கண்டு 33 ஆம் நூற்பாவில் மாட்டெறிதற்கு ஏற்காத அன்னை, மகன், மகள்

முதலிய சொற்களை மட்டும் உயர்திணையதிகாரத்திலேயே கூறிவிட்டு, இவை நீங்கலாக மற்றெல்லா விரவுப்பெயர்களையும் 33 ஆம் நூற்பாவில் உயர்திணைப்பெயர்கள் போன்றே இவையும் விளியேற்கும் எனக் கூறுகிறார். ஆதலின், உயர்திணையதிகாரத்து முறைப் பெயர் விளியேற்குமாறு கூறியதற்குக் காரணம் ஏனைய பெயர்கள் போல இம்முறைப் பெயர்கள் மாட்டேறு பெறுவதற்கு ஒவ்வாதிருப்பதேயாகும் என்பது இவர் கருத்து.

இங்ஙனம் கூறவே 33 ஆம் நூற்பாவில் கூறும் 'கிளந்த விறுதி அஃறிணைப் பெயர்' என்பது விரவுப் பெயரையே குறிக்கும் என்பது இவர் கருத்தெனத் தெளியலாம். எனவே இவ்வதிகாரத்தில் விளியேற்கும் பெயர்கள் உயர்திணைப் பெயர், விரவுப் பெயர், அஃறிணைப்பெயர் எனமூன்றே என்பதும், உயர்திணைப் பெயர் விளியேற்கு மாற்றை முதல் நூற்பாவிலும், விரவுப் பெயர் விளியேற்கு மாற்றை 33ஆம் நூற்பாவிலும், அஃறிணைப் பெயர் விளியேற்குமாற்றை 34ஆம் நூற்பாவிலும் ஆசிரியர் கூறுகின்றார் என்பதும் இவர் கருத்தாதல் பெறப்படும்.

இதனைச் சேனாவரையர் அழகாக மூன்று காரணங்களால் மறுக்கின்றார். அம்மறுப்பு வருமாறு:—

1. இளம்பூரணர் கருத்தே ஆசிரியர்க்கும் கருத்தாய் இருப்பின் 33ஆம் நூற்பாவில் 'அஃறிணை' என்னுஞ் சொல்லை எடுத்து விட்டுக் 'கிளந்த இறுதி விரவுப் பெயர்' என்றே கூறியிருப்பர். அவ்வாறன்றி 'கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்' என்று விளங்கக் கூறியிருப்பதால் இவை அஃறிணை விரவுப் பெயர் என்பது நன்கு விளங்கும்.

(2) முறைப் பெயர்கள் விளியேற்குமாறு கூறும் மூன்று நூற்பாக்களில் 9 ஆம் நூற்பா ஐகார ஈற்றிலும் 19ஆம் நூற்பா னகர ஈற்றிலும் 30 ஆம் நூற்பா ளகர ஈற்றிலும் இருப்பவை. இம் மூன்றீற்று விரவுப் பெயர்களும் விளியேற்பது போன்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்பதில்லை. ஆதலின் பின்னர்க் கூறும் (33) மாட்டேற்றிற்கு ஏலாமையால்தான் இங்கு (உயர்திணையதிகாரத்துக்) கூறினர் எனின், இச்சிறப்பு விதிகளைப் பொதுவிதிக்கு (33)ப் பின்னர்க் கூறுவதே தெளிவும் சிறப்பும் ஆகுமேயன்றி, இச்சிறப்பு விதிகளை முன்னர்க் கூறிப் பொதுவிதியைப் பின்னர்க் கூறுவது மயக்கத்திற் கேதுவாகும். அன்றியும். இச்சிறப்பு விதிகளைப் பின் கூறுவதால், ஐகார ஈற்றிற்கு மட்டும் தனி நூற்பா கூறி, னகர ளகரமாகிய இரு ஈறுகளுக்கும் தனித்தனியே விதி கூறாது இரண்டையும் இணைத்துப் 'புள்ளியிறுதி ஏ யொடு வருமே' என நூற்பாவையும் சுருக்கியிருக்க

லாம். இங்ஙனம் கூறாமையால் அவர் கருத்து வலிமையுடைய தன்று என விளங்கும்.

(3) இளம்பூரணர் உயர்திணையதிகாரத்தில் முறைப் பெயர்கள் விளியேற்பதற்கு மட்டும் இத்தகைய காரணத்தைக் கூறினரேயன்றி, இவ்வதிகாரத்தில், தான், நீயிர் என்ற பெயர்கள் விளியேலா எனக் கூறியிருப்பதற்குக் காரணம் கூறவில்லை. ஆதலின் இதுவும் அவர்கருத்து வலிமையற்றது என்பதைக் காட்டுகின்றது.

### இகர ஐகார ஈறுகள்

**118.** அவற்று
ளிய்யீ யாகு மையா யாகும் (4)

(அவற்றுள்
இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும்)

ஆ மொ: இல.
Of them, 'i' will change into 'ī' and 'ai' into 'āy'.

பி. இ. நூ:

நேமி. சொ. 24
இகரம் ஈகாரமாம் ஐ ஆயாம்.

நன். 306
ஐயிறு பொதுப் பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபாம் அல்லவற் றாயு மாகும்.

இல. வி. 208
ஷை ஷை ஷை

தொன்னூல் விளக்கம் 71
ஷை ஷை ஷை

முத்து. பெ. 101
அவற்றுள்
இ ஈயாகும் ஐ ஆய் ஆகும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இகர ஐகாரங்கள் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நம்பி—நம்பீ என இ ஈயாய் விளியேற்றது.

நங்கை—நங்காய் என ஐ ஆயாய் விளியேற்றது. இங்ஙனமாதல் ஈறு திரிதல்.

சேனா.

மேற்கூறப்பட்ட நான்கீறும் விளியேற்குமாறு கூறுகின்றார்.

இ-ள் : அவற்றுள் என்பது அந்நான்கீற்றினுள் என்றவாறு. நம்பி நம்பீ என இகரம் ஈகாரமாயும், நங்கை நங்காய் என ஐகாரம் ஆயாயும் ஈறு திரிந்து விளியேற்கும், எ-று.

தெய்.

இகர ஐகார வீற்றுப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : இகரம் ஈகாரமாய்த் திரிந்தும் ஐகாரம் ஆய் எனத் திரிந்தும் விளியேற்கும், எ-று.

உ-ம்: நம்பி, [1]சாத்தி என்பன நம்பீசாத்தீ என விளியேற்கும். நங்கை நங்காய் எனவும் [2] தந்தை தந்தாய் எனவும் வரும்.

நச்.

இஃது இகரவீறும் ஐகார வீறும் விளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள் : அவற்றுள்—முற்கூறிய நான்கு ஈற்றுப் பெயருள், இ ஈ ஆகும்—இகர வீற்றுப் பெயர் ஈகாரமாயும், ஐ ஆய் ஆகும்—ஐகார வீற்றுப் பெயர் ஆய் ஆயும் ஈறுத் திரிந்து விளியேற்கும், எ-று

உ-ம் : நம்பி நம்பீ, நங்கை நங்காய் என வரும்.

கல்.

என்-எனின். மேற் சொல்லப்பட்ட நான்கனுள்ளும் இகர வீறும் ஐகார வீறும் விளியேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள் : மேற் சொல்லப்பட்ட நான்கீற்றுப் பெயருள்ளும் இகர வீற்றுப் பெயர் ஈகாரமாய் விளியேற்கும் ; ஐகார வீற்றுப் பெயர் [1]ஆயாய் விளியேற்கும், எ-று.

உ-ம் : நம்பி நம்பீ, நங்கை நங்காய் என வரும். இவை ஈறுதிரிதல்.

ஒகார உகர வீறுகள்

**119.** ஓவு முவ்வு மேயொடு சிவணும் (5)

(ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்)

ஆ. மொ: இல.

'ō' and 'ū' join with 'ē'.

---

1, 2 : சாத்தி, தந்தை—இவை விரவுப் பெயர்கள்.

1. ஆயாயும்—பாடம்

பி.இ. நூ:

நேமி. சொ. 24

ஏயாம் உகர ஓகார உயிர்கள்.

முத்து. பெ. 102

உகரம் ஓகாரம் ஏயொடு சிவணும்.

இளம்

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஓகார ஈறும் உகர ஈறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கோ—கோவே என ஓகார வீறு ஏகாரமொடு சிவணிற்று.

வேந்து—வேந்தே என உகரம் ஏயொடு சிவணிற்று. இம் முடிபு [1]பிறிது வந்தடைதலாம்

சேனா.

இ-ள்: கோ கோவே எனவும், வேந்து வேந்தே எனவும் ஓகாரமும் உகரமும் ஏகாரம் பெற்று விளியேற்கும், எ-று.

தெய்.

(இச்சூத்திரத்தையும் அடுத்த சூத்திரத்தையும் சேர்த்து ஒரே சூத்திரமாகக் கொண்டமையின் இதன் உரையை அடுத்த சூத்திரத்தில் காண்க.)

நச்.

இஃது ஒழிந்தன விளியேற்குமாறு கூறுகின்றது.

இ—ள்: ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்—ஓகார வீற்றுப் பெயரும் உகரவீற்றுப் பெயரும் ஏகாரத்தோடு பொருந்திப் பிறிது வந்தடைதலாய் விளியேற்கும் எ—று.

உ—ம்: கோ—கோவே, வேந்து—வேந்தே எனவரும்.

கல்.

என்—எனின், ஒழிந்த இரண்டு ஈறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஓகார வீற்றுப் பெயரும் உகரவீற்றுப் பெயரும் ஏகாரத்தோடு பொருந்தி விளியேற்கும், எ—று.

உ—ம்: கோ—கோவே எனவும், வேந்து—வேந்தே எனவும் வரும். இவை பிறிதுவந்தடைதல்.

---

1. பிறிது வந்தடைதல்-பிறிது ஓர் எழுத்து வந்து சேர்தல்.

120. உகரந் தானே குற்றிய லுகரம் (6)

ஆ. மொ: இல.
'U' is the shortened 'U'

பி. இ. நூ:

முத்து. பெ. 103

உகரந் தானே குற்றிய லுகரம்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், [1] ஐயமறுத்தல் நுதலிற்று; மேலதற்கோர் புறனடையெனினும் அமையும்.

உரை: கூறப்பட்ட நான்கினுள் உகரம் குற்றிய லுகரம் என்பது அறியாது நின்ற வழி, முற்றுகரமன்று; குற்றுகரம் என்பது கருத்து, எ—று.

சேனா.

மேற் கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம், எ—று. திரு திருவே எனச் சிறுபான்மை முற்றுகர வீறும் உளவேனும் ஓதிய முறையானே விளியேற்பன குற்றுகர வீறே யாகலின் 'குற்றிய லுகரம்' என்றார்.

தெய்.

(ஓவும் உவ்வும்...குற்றியலுகரம்)

உகரம் ஓகார வீற்றுப்பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஓகாரமும் உகரமும் ஏகாரம் பெற்று விளியேற்கும்; ஆண்டுக் குற்றியலுகரமே ஈறாகுவது, எ—று.

உ-ம்: கோ—கோவே, வேந்து—வேந்தே என வரும். பிறவும் அன்ன.

நச்.

இஃது ஐயம் அறுக்கின்றது.

இ-ள்: உகரந்தானே குற்றியலுகரம்—மேற் கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம், எ—று.

---

1. ஐயம்—குற்றுகரம், முற்றுகரம் இரண்டற்கும் இவ்விதி யுண்டோ என்னும் ஐயம். கல்லாடனார், "என்—எனின் ...ஐயந்தீர்த்தமையின் என்பது" என எழுதியது காண்க.

திரு—திருவே (சீவக. 2121) எனச் சிறுபான்மை முற்றியலுகரமும் விளியேற்கும்.

கல்.

என்—எனின், ஐயமறுத்தல் நுதலிறு. என்னை ? மேல் இ உ ஐ ஓ என்புழி இன்ன உகரம் என்று தெரித்துக் கூறாமையானும், உடன் ஓதப்பட்ட எழுத்துக்கள் முற்று இயல்பினவாதலாலும் இன்ன உகரம் என்பது அறியாது ஐயுற்றான் ஐயந் தீர்த்தமையின் என்பது.

இ-ள்: மேற்கூறப்பட்ட உகரந்தான் முற்றியலுகரம் அன்று; குற்றியலுகரமாம், எ—று.

ஆதி.

விளியேற்கும் உகரம் குற்றியலுகரச் சொற்களே.
வேந்து—து குற்றியலுகரம். வேந்தே—விளி.
*மறுப்பு: முற்றுகரமும் ஏ பெற்று விளியாகின்றது.
திருவே, அருவே, உருவே, குருவே.

உயிரீறுகளில் விளி ஏலாதன

121 *ஏனை யுயிரே யுயர்திணை மருங்கின்
றாம்விளி கொள்ளா வென்மனார் புலவர் (7)

(ஏனை உயிரே உயர்திணை மருங்கின்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்)

ஆ. மொ: இல.

Scholars say that the other vowels will not
have vocative in high class

பி இ நூ:

முத்து. பெ. 104

உயர்திணை மருங்கின் ஏனையுயிர் விளியா.

---

* இப்படி வருவது சிறுபான்மை என உரையாளர் கூறியவாறு கூறுதல் நன்று.

$ இச்சூத்திரம் இடம் பிறழ்ந்திருக்கலாம் என்று எண்ணுமாறு உள்ளது. புள்ளியீற்றுள் விளிகொள்வனவற்றைக் கூறுகிற 'ணரலள வென்னும்' என்ற சூத்திரத்தையடுத்து இது போன்ற ''ஏனைப்புள்ளியீது விளிகொள்ளா'' என்ற சூத்திரத்தைக் கூறினர். அதுபோல இச்சூத்திரத்தையும் 'அவைதாம் இ உ ஐ ஓ' என்ற சூத்திரத்தையடுத்துக் கூறுதல் பொருத்தமாகும்—பூவராகம்பிள்ளை.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று ஐயமறுத்தது எனினும் அமையும்.

உரை: சொல்லப்பட்ட நான்கு உயிரெழுத்து மல்லால் மற்றையன உயர்திணைக்கண் விளியேலா எ-று.

மற்று, கொள்வன இவையெனவே ஒழிந்தன கொள்ளா வென்பது. யானே உணரேனோ? இது சொல்லவேண்டியது என்னையெனின், ஏனை உயர்திணைக்கண் விளி கொள்ளா என இன்னும் மேற் சொல்லப்பட்டனமேல் ஓதியவாறன்றிப் பிறவாற்றானும் விளியேற்கும் என்றற்குச் சொல்லப்பட்டது என்றவாறு.

*கணி—கணியே என இகரவீறு ஈகாரப் பேறின்றி ஏகாரமும் பெற்று விளியேற்கும் என்பது.

சேனா.

இ-ள்: மேற் கூறப்பட்ட நான்கீறுமல்லா உயிரீறு உயர்திணைக்கண் விளிகொள்ளாவென்று சொல்லுவர் புலவர் எ-று.

கொள்வன இவையென வரையறுத்துணர்த்தலே, ஏனைய கொள்ளாவென்ப துணரப்படும்; வரையறைக்குப் பயன் அது வாகலான். அதனான் இச்சூத்திரம் வேண்டாவெனின், அஃதொக்கும்; வரையறையாற் பெறப்படுவதனையே ஒருபயன் நோக்கிக் கூறினார். யாதோ பயன் எனின், ஏனையுயிர் விளிகொள்ளா வென, மேற்கூறப்பட்ட உயிர் கூறியவாறன்றிப் பிறவாற்றானும் விளிகொள்வனவும் உள என்பதுணர்த்துதற் கென்பது.

உ-ம்: கணி—கணியே, கரி—கரியே என வரும். பிறவும் அன்ன.

தாம் என்றதனான் ஏனையுயிர் தம்மியல்பாற் கொள்ளா வாயினும் சொல்லுவான் குறிப்பு வகையாற் கொள்வனவும் உள என்பதாம்.

உ-ம் 'மக' என்பது விளிபெறாதாயினும் சொல்லுவான் குறிப்பால் 'மகவே' என விளியேற்றவாறு கண்டு கொள்க.

தெய்.

ஐயந்தீர்த்தல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட உயிரல்லாத உயிர்கள் உயர்திணையிடத்து வரின் விளியேலா, எ-று.

உ-ம்: அவையாவன: ஆடூஉ மகடூஉ நீ என்பன.

---

* கணி—சோதிடன்.

நச்.

இது வேண்டா கூறி வேண்டியது முடிக்கின்றது.

இ-ள் : ஏனை உயிரே—மேற் கூறப்பட்ட நான்கு ஈறும் அல்லாத உயிர் ஈறு, உயர்திணை மருங்கில் தாம் விளிகொள்ளா என்மனார் புலவர்—உயர்திணைக்கண் விளிகொள்ளா என்று கூறுவர் புலவர், எ-று.

இதனாற் பயன்: கணி—கணியே, கரி—கரியே என முற்கூறிய உயிர்கள் பிறவாறாயும் விளியேற்கும் என்றல்.

தாம் என்றதனால் 'மக' என்றது 'மகவே' எனப் பிறிது வந்தும், 'சான்றோர் ஈன்ற தகாத் தகா மகா' என ஆகாரமாயும், ஆடூஉ என்றது 'ஆடூஉ கூறாய்' என இயல்பாயும், 'ஆடூஉவே' எனப் பிறிது வந்தும் விளியேற்றவாறு கொள்க.

கல்

என்-எனின், வேண்டா கூறி வேண்டியது முடித்தலை உணர்த்தல் நுதலிற்று. என்னை வேண்டா கூறியவாறு எனின், அவைதாம் இ உ ஐ ஓ என்புழி இந்நான்கு ஈறும் விளியேற்கும்; ஒழிந்த உயிரீறு விளியேவார் என்பது பெற்றமையின் என்பது. இனி வேண்டியது முடித்தவாறு என்னையெனின், ஒழிந்த உயிரீறு வேற்றுமையேலா என்று இன்னும் மேற்சொல்லிய உயிரீறு விளியேற்கும் என்றமையின்.

இ-ள் : மேற் கூறிய நான்கு உயிறே யன்றி ஒழிந்த உயிரீறுகள் உயர்திணைப் பெயரிடத்துத் தாம் விளித்தலைக் கொள்ளா என்று சொல்லுவர் புலவர், எ—று.

இவ்விதி மேலே பெற்றா மன்றோ வெனின், மேற்கூறியவா றன்றி விளியேற்கும் என்பது கருத்தெனக் கொள்க.

கணி-கணியே, என இகரவீறு ஏகாரம் பெற்றது. பிறவும் வந்த வழிக் கண்டு கொள்க.

ஆதி.

இ உ ஐ ஓ நீங்கிய மற்ற உயிர்கள் உயர்திணைப்பெயர்களில் விளியேற்பதில்லை.

மற்ற உயிரெழுத்தில் பெயர் இருப்பது அரிது. *தற்காலத்தில் ஆ ஈறு நடிகையரிடம் பரவுகிறது; சாந்தா அமுதா சீலா

---

* சாந்தா முதலிய பெயர்கள் வடமொழிப் பெயர்கள். அவற்றை இங்குக் காட்டல் பொருந்தாது. அமுது என்பது அமுதா என வருவது மட்டில் பொருந்தும். அதுவும் அமிழ்து என்பதன் திரிபேயாகும்.—சிவ.

வனிதா சுதா கமலா விமலா சுபா சுரதா. என்மனார் புலவர் இசைநிறை.

சிவ,

இச்சூத்திரம் ஐயம் அறுத்தல் நுதலிற்று என இளம்பூரணரும், தெய்வச்சிலையாரும் கொண்டனர். உயர்திணையில் இ உ ஐ ஓ ஈற்றுப் பெயர்கள் விளிகொள்ளும் என்ற அளவில் நிறுத்தினால், பிற உயிரீற்றுப் பெயர்கள் விளிகொள்ளா என்பது பெறப்படுமாயினும் ஒருகால் அவைகளும் விளிகொள்ளுமோ என மாணாக்கன் ஐயப்படும் ஆகலின் ஐயமறுத்தல் வேண்டுவதாயிற்று.

இச்சூத்திரம் எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று என முன்னர்க்கூறிப் பின்னரே ஐயமறுத்தது எனினும் ஆம் என்றார் இளம்பூரணர். எய்தாதது எய்து வித்தலாவது ஓரிலக்கணம் ஒன்றற்கோ பலவற்றுக்கோ சொல்லி வருங்கால் இதுவரை சொல்லி வந்தனபோகச் சொல்லாத ஒன்றைச் சொல்லி எய்துவித்தலாம். அந்நிலையில் இச்சூத்திரம் அமையவில்லை. விளியேற்கும் ஈற்றுப் பெயர்களைக் கூறி வந்தவர் விளியேலாப் பெயர்களைக் கூறினார். இது சொல்லிவரும் முறையே சொல்லப்பட்டது. இச்சூத்திரம் இல்லையொன்றாலும் இச்சூத்திரப் பொருள்தானே பெறப்படும். ஆதலின் எய்தாதது எய்து வித்தது என்பதனினும் ஐயமறுத்தது என்பதே சிறக்கும்.

இச்சூத்திரம் வேண்டா கூறி வேண்டியது முடித்தது என்பார் நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும். இது ஒரு வகையில் பொருத்தமாகவே அமையும். விளியேற்கும் பெயர் கூறியதாலேயே விளியேலாப் பெயர்கள் இவை என்பது பெறப் படுமாதலின் இச்சூத்திரம் வேண்டா கூறியதாகும். எனினும் பிறகருத்துகளும் இதில் செறிக்கவேண்டியிருத்தலின் இச்சூத்திரம் வேண்டியதை முடித்தற்கு இடம் தருகிறது.

அளபெடைப் பெயர்

**122.** அளபெடை மிகூஉ மிகர விறுபெய
ரியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப (8)

(அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய ஆகும் செயற்கைய என்ப)

ஆ. மொ: இல·

The words of lengthened nature which end in 'i' will stand without change in vocative,

பி. இ. நூ:

முத்து. பெ. 106

அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகும் என்மனார் புலவர்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தியது விலக்கல் நுதலிற்று.

உரை: அளபெடை இகரம் ஈறாயின் இயல்பாயே விளியேற்கும், எ—று

வரலாறு.: தொழீஇ எனவரும் பெயர் நிலையும் விளி நிலையும் அதுவே நிற்குமாறு.

இனிச் 'செயற்கைய' என்றதனால் இரண்டு மூன்று மாத்திரை பெற எழுதுவாரும், ஐந்து மாத்திரை பெற எழுதுவாரும் என இருதிறத்தார் ஆசிரியர் என உணர்க.

சேனா.

இ-ள்: அளபெடை தன் இயல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும் இகர வீற்றுப் பெயர் இ ஈயாகாது இயல்பாய் விளியேற்கும் செயற்கையை யுடையவாம், எ-று

'அளபெடை மிக்கு இயற்கைய வாகும் செயற்கைய' என்னாது 'மிகூஉம் இகர விறு பெயர்' என *அநுவதித்தாரேனும் மாத்திரை மிக்கு இயல்பாம் என்பது அதனாற் பெறப்படும்.

உ-ம்: தொழீஇஇ எனவும், தொழீஇஇஇ எனவும் வரும். இ ஈயாகாமையின் 'இயற்கையவாகும்' என்றும், மாத்திரை மிகுதலாகிய செயற்கையுடைமையாற் 'செயற்கைய' என்றும் கூறினார். இகர இறு பெயர் என்பது இகரத்தான் இற்ற பெயர் என விரியும்.

---

* அநுவதித்தல்—முன்னர்க் கூறியதைப் பின்னும் கூறுதல். அளபெடை தனக்குரிய மாத்திரையின் மிக்கு வரும் என்பது முன்னர்க் கூறப்பட்டது போல அமைந்துளது 'அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்' என்பது. அதனால் அநுவதித்தார் என்றார். ஆனால் முன்னர் யாண்டும் கூறவில்லை. அதனால் அநுவதித்தல் என்பதற்கு இங்கு முன்னர்க் கூறாதிருக்கவும் கூறியது போலப் பின்னர்க் கூறுதல் எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

தெய்.

இகர வீற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : அளபெடை மிக்க இகர வீற்றுப் பெயர் இயற்கைய வாகிய செய்தியையுடைய, எ-று

உ-ம்: தோழீஇ என்பது விளிக்கண்ணும் அவ்வாறே வரும். செயற்கை என்றதனான் விளிக்கண் வரும் ஓசை வேறுபாடு அறிந்து கொள்க.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள் : அளபெடை மிகூஉம் இகர இறு பெயர்—அளபெடை தன் இயல்பு மாத்திரையின் மிக்கு நான்கு மாத்திரை பெற்று நிற்கும் இகர ஈற்றுப் பெயர், இயற்கைய ஆகும் செயற்கைய என்ப- இ ஈயாகாது இயல்பாய் விளியேற்கும் [1]செயற்கையை யுடையவென்று கூறுவர் ஆசிரியர், எ-று.

உ-ம்: [2]தொழீஇஇ (கலி. 103 104) எனவரும். தொழீஇஇ என ஐந்தெழுத்தும் இட்டெழுதுப.

இகர வீற்றுப் பெயர் எனவே நெட்டெழுத்து அளபெடுத் தன்று. குற்றெழுத்தே நின்று மாத்திரை பெற்றதென்று உணர்க. இது, 'தொழில் செய்கின்றவளே' என்னும் பொருள்தந்து நிற்ப தோர் சொல்.

கல்.

என்-எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுத லிற்று. என்னை? ஈகாரமாதல் விலக்கி இயல்பாய் விளியேற்கும் என்றமையின்.

இ-ள்: அளபெடுத்தலான் மிகுகின்ற இகரமாய இறுதியை யுடைய பெயர் இயல்பாய் விளியேற்கும் செய்தியையுடைய, எ-று.

உ-ம்: தொழீஇஇ, தொழீஇ என்பது பெயர். விளியும் அஃதே எனக்கொள்க.

இஃது இயல்பு.

1. செய்கையை—பாடம்.
2. தோழீஇஇ, தோழீஇஇஇ—பாடம்.

'இயற்கைய' என்று பன்மை கூறிய அதனான் இவ்வளபெடை மூன்று மாத்திரையில் நிமிர்ந்து நிற்கும் என்று கொள்ளப்படும். 'செயற்கைய' என்றதனான் இவ்வளபெடைப் பெயர் எழுதும் வழி ஐந்தெழுத்திட்டு எழுதுக என்று கொள்ளப்பட்டது.

வெள்ளைவாரணனார்

இ-ள்: தன்னியல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்றுவரும் இகரவீற்று அளபெடைப் பெயர் இயல் பாய் விளியேற்குஞ் செயற்கையை யுடையனவாகும், எ-று.

உ-ம்: செவிலீஇஇ, தோழீஇஇஇ எனவரும்.
இகர இறுபெயர்—இகரத்தால் முடிந்த பெயர்.
இயற்கைய வாதல்—வேறுதிரிபினைப் பெறாமை.
செயற்கையவாதல்—அளபெடைக்குரிய மூன்று மாத்திரை யாகி மிக்கொலித்தல்.

ஆதி.

இ ஈற்றுப் பெயர்கள் அளபெடுத்து விளியாவது இயல்பு செயற்கைமுறையுண்டு.

வல்லி—வல்லீ இஇஇ
வள்ளி—வள்ளீ இஇஇ
தம்பி—தம்பீ இஇஇஇ
பேய்ச்சி—பேய்ச்சீ இஇஇஇ

வள்ளியே, பொன்னியே எனப் பிற எழுத்து சேர்வது செயற்கை யாம்.

சுப்.

அளபெடை கொண்ட பெயர் விளியில் இயல்பாய் இருக்கும் என்ற கருத்து உரைகாரர் நால்வருக்கும் (இள. சேனா. தெய். நச்.) ஒன்றாயினும் 'அளபெடை மிகூஉம் என்பதற்கு உரையாசிரி யரும் தெய்வச்சிலையாரும் 'அளபெடையைக் கொள்ளும்' என்றும், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "அளபெடை தன்னியல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும்" என்றும் பொருள் கூறினர். உரையாசிரியர் தெய்வச்சிலையார் இவர்கள் கூறிய பொருளைக் கொள்ளின் 'இயற்கையவாகும்' என்பதன் பொருள் மிகப் பொருந்தும். சூத்திரப் போக்கும் இதுவே ஏற்கும்.

அவ்வாறன்றிச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் இருவரும் கூறும் பொருளில் இரண்டு குற்றங்கள் உள—(1) இயல்பிலேயே ஓர் அளபெடை பெற்ற 'தொழீஇ' முதலிய இகர வீற்றுச் சொற்கள் எவ்வாறு விளிபெறும் என்பது கூறப்படவில்லை.

(2) அளபெடையின் இயல்பு மாத்திரை மூன்றெனக் கருதி ஆஅ, ஈஇ முதலியவற்றை ஓர் ஒலி எழுத்தாகக் கொண்டனர். ஆனால் 'மூவள பிசைத்தல் ஓர் எழுத்து இன்றே' (நூன். 5) "நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய, கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்" (நூன். 6) "குறிய தன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும் அறியத் தோன்றும் அகரக் கிளவி" (உயிர்ம.) "குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும், நிற்றல் வேண்டும் உகரக் கிளவி" (உயிர்ம.) "ஏயென் இறுதிக்கு எகரம் வருமே" (உயிர்ம.) "வேற்றுமைக்கண்ணு மதனோ ரற்றே ஏகாரம் வருதல் ஆவயி னான" (உயிர்ம.) முதலிய சூத்திரங்களை நோக்குமிடத்து ஆ அ, ஈஇ முதலியவற்றின் இறுதியிலுள்ள அ, இ இவற்றையே அள பெடையாக ஆசிரியர் கொண்டனர் என்று தோன்றுவதால் அள பெடைக்கு இயல்பு மாத்திரை மூன்று என்பது ஆசிரியர் கொள் கைக்கு மாறுபட்டது.

சிவ.

இகரம் ஈகாரமாகும் என இகரவீற்று விளிப்பெயர்க்கு விதி கூறப்பட்டது. (விளி. 3) அவ்வாறு ஆகாது என்பது இச்சூத்தி ரத்திற் கூறப்படுதலின் இச்சூத்திரம் எய்தியது விலக்கியதாம். இகரம் ஈகாரமாகாது எனின், வேறெவ்வாறாம் என்னும் வினா எழுமாகலின் இயற்கையாகும் என்பது கூற வேண்டுவதாயிற்று. அதனால் பிறிது விதி வகுத்ததாம் இச்சூத்திரம். அதனால் இளம் பூரணர் எய்தியது விலக்கியதாகக் கூறியதினும் பிறர் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்ததாகக் கூறியது சிறக்கும். தெய்வச் சிலையார் இகரவீற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துவ தாகப் பொதுவில் கூறிச் சென்றார்.

### முறைப் பெயர்

123. முறைப்பெயர் மருங்கி னையெ னிறுதி
யாவொடு வருதற் குரியவு முளவே (9)

(முறைப்பெயர் மருங்கின் ஐ என் இறுதி
ஆவொடு வருதற்கு உரியவும் உளவே)

ஆ.மொ:இல.

The ending of 'ai' in the nouns of relation may change into 'ā'.

பி.இ.நூ:

முத்து. பெ. 106

*ஐகான் இறுதி முறைப்பெயர் மருங்கின்*
*ஆவொடு வருதற்கு உரித்து மாகும்.*

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், இஃது இறந்தது காத்தல் நுதலிற்று.

உரை: மேல் ஐ ஆய் ஆகும் என்றார்; இனி முறைப் பெயர்க் கண்ணாயின் ஐ ஈறு ஆவோடு வருவனவும் உள, எ-று.

வ-று: அன்னை—அன்னா என்றும், அத்தை—அத்தா என்றும் [1]ஆகும் என்பது.

சேனா.

இ-ள்: முறைப் பெயரிடத்து ஐ என்னும் முடிபு ஆய் ஆகாது ஆவோடு வருதற்கும் உரியனவுள, எ-று.

உ-ம்: அன்னை-அன்னா எனவும், அத்தை—அத்தா எனவும் வரும்.

உம்மையான் அன்னாய் அத்தாய் என ஆய் ஆதலும் உடைய என்பதாம். [1]உம்மை பிரிந்து நின்றது.

தெய்.

ஐகார வீற்று முறைப் பெயர்க்கண் வரும் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்; முறைப் பெயர்க்கண் வரும் ஐகார வீறு ஆய் ஆகி வருதலன்றி ஆவோடு வருதற்கு உரிய பெயரும் உள, எ-று.

---

1. ஆக என்பது—பாடம்
1. உரியவும் என்பதில் உள்ள உம்மை பிரிந்து வருதற்கு என்பதிற் சேர்ந்து வருதற்கும் என நின்றது. வருதற்கும் என உம்மைதரின் முன்கூறிய ஐ ஆய் ஆதலைத்தழுவும். (விளி-4) உரியவும் என உம்மைவரின் முறைப் பெயரிடத்து ஐ ஆவாதலேயன்றி ஆகாமையும் உண்டு எனப் பொருள்பட்டு மாறுபடும். அதனால் உம்மை பிரிந்து நின்றது என்றார். பிற உரையாளர் 'ஆவொடு வருதற்கு உரியவும்' என்றே கொண்டு உம்மையால் ஆய் ஆதலேயன்றி என இறந்தது தழீஇயதாகக் கொண்டனர்.

உ-ம் : அன்னை என்பது அன்னாய் என வருதலேயன்றி அன்னா எனவும் வரும். உம்மை இறந்தது தழீஇயிற்று.

நச்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி.

இ-ள் : முறைப் பெயர் மருங்கின் ஐ என் இறுதி—முறைப் பெயரிடத்து ஐகார வீறு, ஆவொடு வருதற்கு உரியவும் உள—ஆய் ஆகாது ஆகாரத்தோடு வருதற்கு உரியனவும் உள, எ-று.

உ—ம் : அன்னை அன்னா, அத்தை அத்தா எனவரும். உம்மை மறுத்து நிற்றலின் அன்னாய், அத்தாய் என்று வருதலே சிறப்பிற்று.

இவை விரவுப் பெயரேனும் ஈண்டு உயர்திணைப் பெயரிடை வைத்தார், மேல் விரவுப் பெயரை இவற்றோடு மாட்டெறிதலின் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப விளியேற்பன உயர்திணைப் பெயர் களுள் வேறு இன்மையான்.

கல்.

என்—எனின், மேற் சிறப்பு விதி வகுத்தலை [1]நுதலிற்று ; முறைப் பெயரிடத்து ஐகார வீறு ஆயாய் விளியுரு பேற்று வரு தலேயன்றி ஆவாயும் விளியேற்கின்றமையின்.

இ—ள் : முறைப் பெயரிடத்து ஐ என்னும் ஈறு ஆயொடு வருதலேயன்றி ஆவோடு வருதற்கு உரியனவும் உள[2], எ—று.

உ—ம் : அன்னை—அன்னா என்றும், அத்தை—அத்தா என்றும் வரும். உம்மை எதிர்மறை; அதனால் ஆவாதலே பெரும் பான்மைத்து.

[3]மற்றிவை விரவுப் பெயர்களை உயர்திணைப் பெயர்க ளோடு மாட்டெறியும் ஆதலானும் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப உயர்திணைப் பெயர்களுள் இவ்வாறு விளியேற்பன இன்மையா னும் ஆண்டுக் கூறற் பாலதனை ஈண்டுக் கூறியது எனக்கொள்க.

---

1. உணர்த்தல் நுதலிற்று—பாடம்.
2. என்னுதல் நுதலிற்று — உரைக்கோவைப்பாடம் — இது தேவையில்லை.
3. "மற்றிவை விரவுப்பெயர் அன்றோ வெனின், பெயர் விரவுப்"—உரைக் கோவைப்பாடம்.

வெள்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி.

............................ . ......................

உயிரீற்றன வாகிய உயர்திணைப் பெயர்க்கும் அவ்வீற்று முறைப் பெயராகிய விரவுப் பெயர்க்கும் விளியேற்குந்திறத்தில் வேற்றுமையின்மையால் உயர்திணைப் பெயரோடு முறைப் பெயரையும் சார வைத்தார்......

ஆதி.

முறைப் பெயர்களின் ஐ என்னும் ஈறு ஆய் சேர்ந்து வருவதற்கும் உரியது.

உ—ம்: அன்னை—அன்னாய்
தந்தை—தந்தாய்
தங்கை—தங்காய்
எந்தை—எய்தாய்

சிவ.

மேல் (விளி. 4) ஐ ஆய் ஆகும் என்றார். இச்சூத்திரத்தில் ஆ என வருதற்கும் உரியது என்கின்றார் ஆதலின் முன் எய்தியதை விலக்காமல் மேலும் ஓர் விதி வகுக்கின்றார். ஆதலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று இச்சூத்திரம் என்றலே சிறப்புடையதாம். இறந்தது காத்தல் என இளம்பூரணர் கூறுவது சிறப்புடைத்தன்று. இறந்தது காத்தல் என்பது முன்னர்க் கூறப்பட்ட ஒரு விதி பின்னர்க்கூறப்படுவதோர் விதியால் விலக்கப்படவேண்டி வருமாயின் அவ்விடத்து அதனை மீளவும் கூறுவதே இறந்தது காத்தலாம். இச்சூத்திரத்தில் உரியவும் என்பதில் உள்ள உம்மை முன்னர்க் கூறப்பட்ட ஆய் ஆதலைத் தழுவி ஏற்றலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி வகுத்தது என்றலே ஏற்புடையதாம்.

அண்மை விளி

124. அண்மைச் சொல்லே யியற்கை யாகும் (10)

(அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்)

ஆ. மொ: இல.

words which are used as vocatives to call upon near ones will not change.

பி. இ. நூ.
முத்து. செ. 107

அண்மைப் பெயரியல் பாக விளிக்கும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், இதுவும் இறந்தது காத்தல் நுதலிற்று.

உரை: அணியாரைக் கூவுமிடத்து அவை இயல்பேயாய் விளியேற்கும், எ-று.

வ—று: நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி என வரும்.

சேனா.

இ-ள்: நான்கீற்று அண்மைச் சொல்லும் இயற்கையாய் விளியேற்கும், எ-று

அண்மைக்கண் விளிகொள்வதனை 'அண்மைச் சொல்' என்றார்.

உ—ம்: நம்பி வாழி, வேந்து வாழி, நங்கை வாழி, கோவாழி என வரும்.

தெய்.

இருதிணைக்கண்ணும் வரும் எல்லா வீற்றுப் பெயரும் அண்மைக்கண் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இச்சூத்திரம் [1]முன்னும் பின்னும் நோக்கி நிற்றலின் சிங்க நோக்காகிக் கிடந்ததென்று கொள்க.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட உயிரீற்றுப் பெயரும்அஃறிணைப் பெயரும் அண்மைக்கண் இயல்பாகி விளியேற்கும்; [2]னகர வீறு சிறப்பு விதி பெறுதலின் அஃதொழிந்த ஏனைய கொள்ளப்படும், எ-று.

---

1. முன்நோக்குதல் விளிமரபு சூ. 4—9 நோக்குதல். பின்னோக்குதல் சூ. 11—33 நோக்குதல்.
2. னகர வீற்றுக்கு 'அண்மைச் சொல்விற்கு அகரமாகும்' (விளி. 14) எனத் தனிச் சூத்திரத்தால் சிறப்பு விதி பெறுதலின் அதனைவிட்டு மற்றைய மெய்களுக்கே கொள்ளப்படும். அச்சூத்திரத்தின்படித் 'துறைவன்' என்பது 'துறைவ' எனவரும். இச்சூத்திரப்படித் 'துறைவன்' என்றே வரலாமாதலின் சேனாவரையர் கூறியது தேவையில்லை—சிவ.

உ-ம் : நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, கோவாழி, மாதர் கூறு, அண்ணல் கூறு, கடவுள் வாழி, தும்பி கூறு, அன்னங் கூறு, காவல் கூறு என வரும். பிறவும் அன்ன. [3]'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' என்பதும் அண்மை விளி. பிறவும் அன்ன.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள்: அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்—நான்கு ஈற்று அண்மைக்கண் விளியேற்கும் சொற்கள் இயற்கையாய் விளியேற்கும், எ-று.

உ—ம்: நம்பி வாழி, வேந்து வாழி, நங்கை வாழி, கோ வாழி என வரும்.

கல்.

என்—எனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று, மேற்கூறியவாறன்றி இன்னுழியியல்பாம் என்கின்றமையின்.

இ-ள் : மேற்கூறிய உயிரீறு நான்கினையும் உடைய அணியாரைக் கூவும் சொற்கள் மேற்கூறியவாறன்றி இயல்பாய் விளியேற்கும், எ—று.

உ-ம் : நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, கோ வாழி என வரும்.

ஆதி.

அருகிலுள்ளாரை விளிப்பது இயற்பெயரால் விளிப்பின் மாற்றம் இல்லை.

தம்பி இங்குவா, குழந்தை நன்றாய்ப்படி.

சிவ.

இச்சூத்திரம் இறந்தது காத்தல் நுதலிற்று என இளம்பூரணர் கூறுவது பொருந்தாது. உயர்திணையிடத்து இஉஐஓ ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும்போது அவ்வெழுத்துகள் எவ்வெவ்வாறு திரியும் என்பது முன்னர் உள்ள சூத்திரங்களால் கூறப்பட்டது. இச்சூத்திரம் அவ்வாறு திரியாமல் (அண்மை விளியாயின்) இயல்பாகவே நிற்கும் என்கின்றது. முன்னர்க் கூறப்பட்ட திரிபுகளும்

3. ஆவே, ஆனியற்பார்ப்பன மாக்களே என்பது பொருளாதலின் இவ்வாறு கூறினார்.

அண்மைக்கு வரும் என்ன வில்லை; வரா என விலக்குகின்றது. அதனால் இறந்தது காத்தலாகாது. எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது என நச்சினார்க்கினியர் கூறியதே பொருந்தும்.

புள்ளியீறுகள் விளியேற்பன

125. ணரலள வென்னு மந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே (11)

(ணரலள என்னும் அ நான்கு என்ப
புள்ளி இறுதி விளிகொள் பெயரே)

ஆ. மொ: இல.

The nouns of consonant endings are four which end in 'n' 'r' 'ḷ' and 'l' which have vocatives.

பி. இ நூ:

நன். 304.

..........................னளரல
யவ்வீற்று உயர்திணை......விளிப்பன

இல. வி. 206.

........................ ன ள ர ல
யவ்வீற்று உயர்திணை...விளிப்பன
ஒல்வழி யறிதல் வழக்கத் தான

முத்து. பெ. 108

உயர்திணை மருங்கின் ணர லள இறுதி
விளிக்கும் என்மனார் மெய்யுணர்ந் தோரே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் உயர்திணைக் கண் புள்ளியீறு விளியேற்பன இவையென உணர்த்துதல் நுதலிற்று.

வரலாறு முன்னர்க் காட்டுவதும்.

சேனா.

உயிரீற்றுயர் திணைப் பெயர் விளியேற்குமாறு உணர்த்தி, இனிப் புள்ளியீற் றுயர்திணைப் பெயர் விளியேற்குமா றுணர்த்து கின்றார்.

இ-ள்: புள்ளியீற் றுயர்திணைப் பெயர் ண ர ல ள என்னும் அந்நான்கீற்ற வென்று சொல்லுவர் ஆசிரியர், எ—று.

[1]ன ர ல ள என்னும் ஒற்றை ஈறாகவுடைய சொல்லை 'னரலள' வென்றார்.

தெய்.

உயர்திணைப் பெயருள் புள்ளியீறாகி விளி கொள்ளும் பெயர் வகுத்துரைத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: உயர்திணை மருங்கிற் புள்ளியீறாகி விளிகொள்ளும் பெயர் ன, ர, ல, ள என்னும் ஈற்றினையுடைய அந்நான்கு என்று சொல்லுவர் ஆசிரியர், எ—று.

உயர்திணை யென்பது அதிகாரத்தான் வந்தது. னரலள என்பன ஆகுபெயராய் அவ்வீற்றினையுடைய பெயர்க்குப் பெயராயின. உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும்.

நச்.

இது புள்ளியீற்றுள் விளியேற்பன கூறுகின்றது.

இ-ள்: புள்ளியிறுதி விளிகொள் பெயர்—புள்ளியீற்றினையுடைய விளித்தலைக் கொள்ளும் உயர்திணைப் பெயர், னரலள என்னும் அந்நான்கு என்ப—ன ர ல ள என்று கூறப்படும் அந்நான்கு ஈற்றுப் பெயரும் என்று கூறுவர் ஆசிரியர், எ—று.

கல்

என்-எனின், உயர்திணைக்கண் உயிரீறு விளியேற்பன இவை என்பது உணர்த்தி இனி இவ்வுயர் திணைக்கண் புள்ளியீறு விளியேற்பன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : ன ர ல ள என்று சொல்லப்பட்ட அந்நான்கு ஈற்றுப் பெயரும் என்று சொல்லுப ஆசிரியன், புள்ளியீற்றினை உடைய விளித்தலைக் கொள்ளும் உயர்திணைப் பெயராவன, எ-று.

புள்ளியீற்றுள் இவை கொள்ளும் எனவே ஒழிந்தன விளி கொள்ளா என்பதூஉம் பெற்றாம்.

[1]உ-ம் : பொருந, பாண எனவும்; எல்லாரும் எனவும் இவை முதலாயின விளியேலாதன எனக் கொள்க.

---

1. இப்படிக் கூறியதைத் தெய்வச்சிலையார் ஆகுபெயர் என்பர். பார்க்க.

1. இப்பகுதி தவறுடையது. பொருந, பாண புள்ளியீறல்ல. எல்லாரும் என்பதே விளியேலாதது. பொருநன் பாணன் என்பன பொருந பாண என விளியேற்றன. பொருந், பாண் என்று உரைக்கோவையிற் காணப்படுகின்றது. அதுபொருந்துமேனும் பொருந் பாண் என்பனவற்றுக்குப் பொருநன் பாணன் எனப் பொருளாயின் அவைகளும் பொருந பாண என விளிகொள்ளும் என்னலாம். ஆதலின் அவை நீங்க எல்லாரும் என்பதே இங்குப் பொருந்தும்.

ஆதி.

மெய்யெழுத்து ஈற்று உயர்திணைப் பெயர்களில் ன் ர் ல் ள் நான்கை ஈற்றில் கொண்டவையே விளியாக வரும்.

வேலன—வேலா, வேலனே
அரசர்—அரசே, அரசரே
தோன்றல்—தோன்றால், தோன்றலே
அண்ணல்—அண்ணால், அண்ணலே
திருமகள்—திருமகா, திருமகளே

ஆய்வு : ஆசிரியர் ண், ய், மெய்களைக் கூறாது விடுத்தது ஏன்? அறிகிலம்.

[2]ண்—"பெண்ணே வண்மைக் கேகயன் மகளே"
கண்ணே நன்றாய்ப் படி
ய்—"ஆயே எனக்கு இன்னும் அளிப்பாயாக
'தாயே யசோதா சற்றே கேள்'
பேயே அப்பால்போ.

126. ஏனைப் புள்ளி *யீறுவிளி கொள்ளா (12)

ஆ. மொ. இல.

The nouns which end in other consonants will not have vocative case.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று, ஐயமறுத்தது எனினும் அமையும்.

உரை : மேற்சொல்லப்பட்ட நான்கல்லாப் புள்ளியீறு விளி யேலா உயர்திணைக் கண் எ-று.

[1]மற்று ஆவன கூற அமையாதோவெனின், 'ஏனைப் புள்ளி யீறு விளிகொள்ளா' என, இன்னும் மேற்கூறிய புள்ளியீறு அவ் வாறன்றிப் பிறவாறு விளியேற்றலையுடைய என்றற்குக் கூறி னார் என்பது.

---

2. பெண், ஆய் (தாய்) என்பன உயர்திணையல்ல. விரவுத் திணை—சிவ.

* நறுவிளி என்பது இள்பூரணப் பாடம் (தவறு)

1. முன் சூத்திரத்தில் புள்ளியீறு விளியேற்க ஆவன கூறவே அதுவே அமையாதோ என்பது வினா.

வ-று : பெண்டிர்—பெண்டிரே எனவும், தம்முன்—தம்முனே எனவும் வரும். பிறவும் அன்ன. ஏனைப் புள்ளியும் ஆவதுண்டு.

[2] விளங்கு மணிக் கொடும்பூண் ஆய்' (புறம் 130)
என்பதும் பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

சேனா.

இள் : அந்நான்கு மல்லாத புள்ளியீற்றுப் பெயர் விளி கொள்ளா, எ—று.

ஈண்டும் 'விளிகொள்ளா' என்றதனாற் பயன், கூறப்பட்ட புள்ளியீறு பிறவாற்றான் விளிகொள்வன வுள என்பது உணர்த்த லாம்.

உ-ம் : பெண்டிர்—பெண்டிரே எனவும், தம்முன் - தம்முனா எனவும் வரும். பிறவு மன்ன.

'விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய்' என ஏனைப் புள்ளி சிறுபான்மை விளியேற்றலும் கொள்க.

தெய்.

ஐயமறுத்தலை நுதலிற்று.

இ—ள்: உயர்திணைப் பொருட்கண் மேற் சொல்லப்பட்ட நான் கீற்றுப்பெயரும் ஒழிய, ஏனை யீற்றுப் பெயர்கள் விளி யேலா. எ-று

உ-ம்: அவை: யான், யாம், நாம், எல்லாரும், எல்லீரும், தாம் என்பன.

நச்.

[1]இது வேண்டா கூறி வேண்டியது முடிக்கின்றது.

இ-ள்: ஏனைப் புள்ளி ஈறு விளி கொள்ளா—அந் நான்கும் அல்லாத புள்ளி யீற்றுப் பெயர் விளித்தலைக் கொள்ளா, எ-று.

இங்ஙனம் வேண்டா கூறிய அதனாற் பயன், மேற் கூறுகின்ற புள்ளியீறுகள் பிறவாற்றான் விளி கொள்வன உள என்பதூஉம், எடுத்தோதாப் புள்ளியீறுகளிலும் விளியேற்பனவுள என்பதூஉம் உணாத்துதலாம். முறைமை சுட்டா மகன், மகள் என்பன [2]படிவ

2. பொருள் ; விளங்குகின்ற மணிகள் அழுத்தப் பெற்ற வளைந்த அணிகளையுடைய ஆய்அண்டிரனே

1. இதற்குச் சூத்திரம் ஏழில் கூறியவாறு விளக்கம் கொள்க.

2. பொருள்: விரதத்துக்கேற்ப உணவு கொள்ளும் பார்ப் பனனே,

உண்டிப்பார்ப்பன மகனே' (குறுந். 156) அகவல் மகளே அகவல் மகளே (குறுந் 23) என ஏகாரம் பெற்று வருதலும்,(அகவல் மகன் முறைமை சுட்டிய தன்று; அகவல்—ஓசை)

கூந்தல்மா கொன்று குடமாடிக் கோவலனாய்
பூந்தொடியைப்புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பில் மறு (முத்தொள்ளாயிரம்.)

என 'அன்' ஈறு ஏகாரம் பெற்றுவருதலும் 'நம்பன் சிறிதே இடை தந்திது கேட்க' (சீவக. 1975) என் 'அன்' ஈறு இயல்பாய் வருதலும், 'நம்பான், எம்பெருமா' என அன் ஈறு ஈற்றயல் நீண்டு வருதலும், ஆன் ஈறு 'வாயிலோயே வாயிலோயே' (புறம் 206) என ஏகாரம் பெற்று வருதலும்; ரகர வீறு 'மாந்தர் கூறீர்' என இயல்பாயும், 'இறைவரே' என ஏகாரம் பெற்றும் வருதலும்; லகார வீறு 'சாஎல் கூறாய், குரிசில் கூறாய்' என இயல்பாயும், 'திருமாலே, தாழ்குழலே' என ஏகாரம் பெற்றும் வருதலும்; ளகாரவீறு 'கடவுள் வாழி' என இயல்பாயும், 'அடிகள்—அடிகேள்' என ஈற்றயல் அகரம் ஏகார மாயும் வருதலும்; இவையிற் பிறவா றாய் வருதலும் கொள்க.

இனி எடுத்து ஓதாதனவற்றுள் ஆகார வீறு 'துறந்துள்ளார் அவரெனத் துனி கொள்ளல் எல்லாநீ' (கலி 3:) என 'ஏ டீ' என் றும், 'எல்லா நீ முன்னத்தான் ஒன்று குறித்தாற் போற் காட் டினை' (கலி 61) என 'ஏடா' என்றும் இருபாற்கும் பொதுவாய் விளி ஏற்றலும். முன் ஈறு தம்முன்—தம்முனே என ஏகாரம் பெற் றும், நம்முன்—நம்முனா என ஆகாரம் பெற்றும்; இர் ஈறு 'பெண்டிர்—பெண்டிரோ' என ஓகாரம் பெற்றும்; 'என்னை கேளீர்' (சீவக. 1594) என ஈர் பெற்றும்; 'கேளிர் வாழியோ கேளிர் நாளும்' (குறுந் 280) என இயல்பாயும்; யகரவீறு 'விளங்கு மணிக்கொடும்பூண் ஆஅய்' (புறம் 130) என இயல்பா யும், 'ஆயே' யென ஏகாரம் பெற்றும் வருதலும் கொள்க.

இனி,

கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்
(தொல். பொருள், பொருளியல் 40)

என்றும்,

"கிழவோட்குவமம் ஈரிடத் துரித்தே" (உவம வியல் 29)
"கிழவோற் காயின் இடம் வரை வின்றே" (உவம வியல் 30)

என்றும் பிறாண்டும் உடம்பொடு புணர்த்துக் கூறிய 'ஓன்' என்னும் ஈறு 'தொழிலிற் கூறும் ஆன் என் இறுதி' (விளி.16) போல [1]அகரமாய் விளியேற்றலும் கொள்க. அது 'பெருங்கல் வைப்பின் நாடு கிழவோயே' (புறம்.302) 'மாஅயோய்' (பரிபா.3) என்றாற் போலச் செய்யுட்களுள்ளும் வருவனவும் கொள்க. ஓகாரம் அடுத்த ளகார வீறு விளியேற்குமேனும் உணர்க.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணி" (புறம்.9)

என்றாற்போலும் அண்மை விளியும் இதனாற் கொள்க.

கல்.

என்—எனின். வேண்டா கூறி வேண்டியது முடித்தலை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட நான்கும் அல்லாத புள்ளியீறு உயர்திணையிடத்து விளித்தலைக் கொள்ளா. எ-று.

மற்று இவ்விதி மேலே பெற்றாம் அன்றோவெனின், மேற் சொல்லிய நான்கு புள்ளியீறும் இனிக்கூறுமாறு போலாது விளி யேற்றலும் உடைய என்றற்கு மிகைபடக் கூறப்பட்டது எனக் கொள்க.

உ-ம் : னகரவீற்றுள் மேலோதுகின்ற அன்னீறும் ஆனீனும் அல்லாத னகரவீறு—தம்முன் தம் முன்னே எனவும், நம்முன்—நம்முன்னே எனவும் விளியேற்றது.

[1]ரகரவீற்றுள் ஓதுகின்ற 'அர்' ஈறும் 'ஆர்' ஈறும் அல்லாத 'இர்' ஈறு பெண்டிர்—பெண்டிரே என ஏகாரம் பெற்றும், கேளிர்-கேளிர் என இயல்பாயும் விளியேற்றது. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

இன்னும் இம்மிகையானே ஏனைய புள்ளியுள்ளும் சிறுபான்மை யாவனவுள. 'விளங்கு மணிக்கொடும் பூண் ஆஅய்' என யகர வீறு இயல்பாய் விளியேற்றது. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

ஆதி.

ண் ர் ல் ள் நீத்த மற்ற மெய்யெழுத்துப் பெயர் விளிக்கப் படா.

---

1. ஒய் ஆய் என்பதே நன்று. அகரமாய் என்பது தவறு.
1. ரகரவொற்றுள்—பாடம்

*மறுப்பு : இது பிழை; ண், ய் விளியாதலை மேல் கண்டோம்.

பிற குறிப்பு

இச்சூத்திரம் நுதலுதல் பற்றிய வேறுபாடுகளுக்கு, 'ஏனையுயிரே" (விளி. 7) என்னும் சூத்திர வுரையிறுதியில் சிவ. விளக்கம் போல் விளக்கம் கூறிக் கொள்க.

னகரவீறு

*அவற்றுள்

127. அன்னெ னிறுதி யாவா கும்மே. (13)

(அவற்றுள்

அன் என் இறுதி ஆ ஆகும் ஏ)

ஆ. மொ: இல.

of those

'an' ending may became 'ā'

பி. இ நூ:

நேமி சொ. 25

அன் இறுதி ஆவாகும்.

நன். 307

ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்

...ஈறு அழிவு அயல் நீட்சி...ஆகும்

இல. வி 209. ௸ ௸ ௸

தொன். வி. 72

ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்

...ஈறழிவு அயல்நீட்சி...ஆகும்.

முத்து. பெ. 110

அன் என் இறுதி ஆவா கும்மே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே னகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : அன் என்னும் பெயர் இறுதி ஆவாய் விளியேற்கும். எ-று.

வ—று : சோழன்—சோழா, சேர்ப்பன்—சேர்ப்பா என வரும்

---

* இது பிழை என்பதினினும் உரையாளர்கள்போல் மிகை முதலியவற்றால் கூறுதல் நன்று.

* அவற்றுள் என்பது இளம்பூரணத்தில் இல்லை,

சேனா.

இ-ள்: அவற்றுள் அன் என்னும் னகரவீறு ஆவாய் விளியேற்கும், எ—று.

உ-ம்: சோழன்—சோழா, சேர்பன்—சேர்ப்பா என வரும்.

தெய்.

நிறுத்த முறையானே னகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற் சொல்லப்பட்டவற்றுள், அன் என்னும் ஈற்றினையுடைய பெயர் ஆ என விளியேற்கும், எ—று.

ஈறு என்பது ஈற்றினையுடைய பெயரை.

உ-ம்: சோழன்—சோழா, வெற்பன்—வெற்பா, சாத்தன்—சாத்தா என வரும்.

நச்.

இது முறையானே னகார வீறுவிளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள்: அவற்றுள் அன்என் இறுதி ஆ ஆகும்மே—அந் நான்கு ஈற்றுப் பெயருள் 'அன்' என்னும் னகர வீற்றுப் பெயர் ஆவாய் விளியேற்கும் எ—று.

உ-ம்: துறைவன்—துறைவா, ஊரன்—ஊரா, சோழன்—சோழா [1] என வரும்.

கல்.

என்—எனின், மேல் நிறுத்த முறையானே, னகர வீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அந்நான்கு புள்ளியுள்ளும் னகர வீற்று [2]அன் என்னும் பெயரின் இறுதி ஆவாய் விளியேற்கும், எ—று.

உ-ம்: சோழன்-சோழா, சேர்ப்பன்-சேர்ப்பா எனவரும். [3]துறைவன்—துறைவா என்பதும் அது.

னகரவீறு—அண்மைவிளி.

**128. அண்மைச் சொல்லிற் *ககரமு மாகும். (14)**

(அண்மைச் சொல்லிற்கு அகரமும் ஆகும்)

1. சேர்ப்பன்—சேர்ப்பா என வரும்—பாடம்.
2. அன் என்னும் இறுதிப் பெயரிறுதி ஆவாய்—உரைக் கோவைப் பாடம்.
3. இவ்வுதாரணம் சிலபதிப்புகளில் இல்லை.

* ககரமாகும் என்ற பாடமே இளம்பூரணரை யொழிந்தோர் கொண்டனர்,

ஆ. மொ: இல.

In near vocative it may be 'a'

பி. இ. நூ:

நேமி. சொ. 25.

அன் இறுதி...அண்மைக்கு அகரமாம்.

நன். 307.

ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
.....................இறுதி யவ்வாதல்...உருபாகும்.

| | | | |
|---|---|---|---|
| இல. வி. 209 | ஷ்டி | ஷ்டி | ஷ்டி |
| தொன். வி. 72. | ஷ்டி | ஷ்டி | ஷ்டி |

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

உரை: அணியாரைக் கூவுமிடத்து அன் ஈறு திரிந்து அகரமாயும் விளியேற்கும், எ-று.

வ-று: ஊரன்—ஊர, சேர்ப்பன்—சேர்ப்ப எனவரும்.

சேனா.

இ-ள்: அண்மை விளிக்கண் அன் ஈறு அகரமாம். எ-று.

உ-ம்: துறைவன்—துறைவ, ஊரன்—ஊர என வரும்.

தெய்.

எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அன் என்னும் ஈறு அண்மைக்கண் அகரமாகி விளியேற்கும், எ—று.

அன் என்பது அதிகாரத்தான் வந்தது.

உ-ம்: சோழ, சாத்த, வெற்ப எனவரும்.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள்: அண்மைச் சொல்லிற்கு அகரமாகும் — அண்மை விளிக்கண் அன் ஈறு அகரமாகும், எ-று.

உ-ம்: துறைவன்—துறைவ, ஊரன்—ஊர, சோழன்—சோழ எனவரும்.

கல்.

என்—எனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: அவற்றுள் அன் ஈறு அணியாரை விளிக்குஞ் சொல்லிடத்து அகரமாகும், எ-று.

உ—ம்: சோழன்—சோழ, சேர்ப்பன்—சேர்ப்ப எனவரும்.

[1] துறைவன்—துறைவ என்பதும் அது

ஆதி.

அண்மை விளியின் அன் (ன்கெட்டு) அஎன நிற்கும்.
சோழ, சேர, முருக, கண்ண.

சிவ.

'இச்சூத்திரம் எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று' என்றார் இளம்பூரணர். னகரவீற்றுப் பெயர் விளி கொள்ளுங் கால் னகரம் ஆவாகும் என முன்னர்க் கூறப்பட்டது. அதில் சேய்மை விளிக்கென்றோ அண்மை விளிக்கென்றோ கூறப்பட வில்லை. இச்சூத்திரம் அண்மை விளிக்குக் கூறப்பட்டது. அண்மை விளிக்கு னகரம் அகரமாகத் திரியும் என்றது. சேய்மை அண்மை என்னும் இருமருங்கில் (இருபக்கத்தில்) அகரம் அண்மைக்காகும் எனச் சேய்மை மருங்கு மறுக்கப்பட்டது. அல்லது அண்மைக்கு னகரம் ஆ ஆகாது என மறுக்கப்பட்டது எனினும் ஆம்.

இவ்வாறு கூறுவதினும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது என்றலே சிறக்கும், சேய்மைக்கண் னகரவீறு ஆவாகத் திரியும் என்றது அண்மைக்கு விலக்கப்படுவதோடு அகரமாகும் எனப் பிறிதுவிதியும் வகுத்தலின் என்க. பிறிதுவிதியைப் புறனடையென்றார் தெய்வச்சிலையார். புறனடையென்றலின் பிறிதுவிதி என்றலே நன்று.

இளம்பூரணர் 'அகரமாகும்' என்பதை 'அகரமுமாகும்' எனப் பாடங் கொண்டமையால் 'உம்மை' னகரம் ஆவாகும் என்றதைத் தழுவியதாகக் கொண்டு அதை மறுத்தது இச்சூத்திரம் என ஒரு மருங்கு மறுத்தது என்றார்.

பிறரெல்லாரும் 'அகரம் ஆகும்' என்றே கொண்டமையின் எய்தியது விலக்கியதாகக் கொண்டனர்.

ஆன்

129. ஆனெ னிறுதி யியற்கை யாகும் (15)
(ஆன் என் இறுதி இயற்கை ஆகும்).

1. இவ்வுதாரணம் கழகப்பதிப்பில் இல்லை.

ஆ. மொ: இல.

The 'ān' ending will stand with out change.

பி.இ.நூ:

நேமி. சொ. 25

முன் இயல்பாம் ஆனும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின். இதுவும் னகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : ஆன் என்னும் னகரவீறு இயல்பாய் விளியேற்கும், எ-று.

வ-று : சேரமான் மலையமான் என இருநிலைமைக் கண்ணும் அதுவே நிற்குமாறு என்பது.

சேனா.

இ-ள் : ஆன் என்னும் னகரவீறு இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம் : சேரமான், மலையமான் என்பன கூவுதற் கண்ணும் அவ்வாறு நிற்றல் கண்டு கொள்க.

தெய்.

இதுவும் னகரவீற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : உயர்திணைப் பொருள் உணர்த்தும் னகார வீற்றுப் பெயருள் ஆன் என்னும் ஈற்றுப் பெயர் இயல்பாகி விளியேற்கும், எ-று.

உ-ம் : [1]சேரமான், மலையமான் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும்.

நச்.

இஃது 'ஆன்' என்பது விளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள் : ஆன் என் இறுதி இயற்கையாகும்—ஆன் என்னும் னகர வீற்றுப் பெயர் இயல்பாய் விளியேற்கும், எ-று.

சேரமான், மலையமான் எனக் கூவுதற்கண்ணும் அவ்வாறே நிற்றல் காண்க.

---

1. கோமான்—பாடம்.

கல்.

என்-எனின், னகர வீற்றுள் ஒருசாரன விளியேற்குமாறு [1]நுதலிற்று.

இ-ள் : ஆன் என்னும் னகர விறுதிப் பெயர் இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம் : சேரமான், மலையமான் என வரும்.

வெள்.

ஆன் என்னும் னகார வீறு இயல்பாய் விளியேற்கும்.

உ-ம் : சேரமான், மலையமான் என்பன சேய்மை விளிக்கண்ணும் இயல்பாய் நிற்றல் காணலாம்.

ஆதி.

ஆன் ஈற்றுப் பெயர் அவ்வாறே நிற்கும்.
சேரமான், மலையமான். கோமான், சீமான்.

குறிப்பு : சேரமானே, மலையமானே, கோமானே, சீமானே, பெருமானே என ஏகாரம் பெற்று விளியாதல் கவனிக்கத் தக்கது.

ஆன் இறுதி—வினையாலணையும் பெயர்.

130. தொழிலிற் கூறு மானென் னிறுதி
யாயா கும்மே விளிவயி னான (16)

(தொழிலில்கூறும் ஆன்என் இறுதி
ஆய் ஆகுமே விளிவயின் ஆன.)

ஆ. மொ: இல.

The 'ān' ending of verb used as noun, may change into 'āy' in the vocative.

பி. இ. நூ:

நேமி. சொ.25

......ஆனீற்று......தொழில்
மான்விழியாய் ஆய்வரும்.

நன்.307.

ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
......இறுதி யவ்வாதல்......ஆகும்.

---

1. உணர்த்தல்நுதலிற்று—பாடம்.

இல.வி.209

ஷெ. ஷெ. ஷெ.

தொன்.வி.72

ஷெ. ஷெ. ஷெ.

முத்து.பெ. 114

தொழிற்பெயர்க் கிளவி அவற்றோ ரற்றே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

உரை : ஆன்என் இறுதி [1]தொழிற்பெயராயின் ஆயாய் விளியேற்கும், எ-று.

வ—று : உண்டான்—உண்டாய் எனவரும்.

இனி,'விளிவயினான' என்றதனான் [2]வாயிலான்—வாயிலாய், பூயிலான்—பூயிலாய் என இவ்வாறு பெயரினாகிய பெயரும் ஆயாய் விளியேற்கும் என்பாரும் உளர்.

சேனா.

இ-ள்: தொழிலான் ஒரு பொருளைச் சொல்லும் ஆன் ஈற்றுப்பெயர் விளிக்கண் ஆயாம், எ-று.

உ-ம்: வந்தான்—வந்தாய், சென்றான்—சென்றாய் என வரும்.

விளியதிகாரம் ஆதலான் 'விளிவயினான' எனல் வேண்டா வெனின், சொல் இல்வழி உய்த்துணர்வது என்று மறுக்க.

தெய்.

ஆனீற்றுப் பெயர்க்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: தொழிலாற் கூறப்படும் ஆன் ஈற்றுப்பெயர் ஆய் என வரும் விளித்தற்கண்ணும், எ-று.

உ-ம்: உண்டான், வந்தான் என்னும் தொழிற் பெயர் உண்டாய், வந்தாய் என விளியேற்கும். தொழில் என்றதனால் குறிப்புவினைப் பெயரும் கொள்க. உடையான், கழலான் என்பன் உடையாய், கழலாய் எனவரும்.

---

1. தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்.
2. வாயில் என்னும் பெயரடியாக வாயிலான் வந்தது ஆதலின் பெயரினாகிய பெயராயிற்று. பூயில் என்பது ஓர் இடம். பூயிலான் என்பதும் அது போன்றதே.

ஈண்டு 'விளிவயினான' என விதந்தோதினமையான் தொழிலால் வருஞ் சொல் முன்னிலை வினையாகிய வழியும், [1] உண்டாய் என வரும்; அஃதன்று இது என் பதூஉம், அதனொடு இதனிடை ஓசைவேறுபாடு உளது என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தது.

இ-ள்: தொழிலிற் கூறும் ஆன் என் இறுதி விளிவயினான—தொழிலினான் ஒருபொருள் அறியச் சொல்லும் ஆன் ஈற்றுப் பெயர் விளியேற்குமிடத்து ஆய் ஆகும்—ஆய் ஆம், எ—று.

உ-ம்: வந்தான்—வந்தாய், சென்றான்—சென்றாய் என வரும். 'தொழிலின்' என்றதனால் கழலாய், இடையாய் எனக் குறிப்பினும் கொள்க.

கல்.

என்—எனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: ஒருவன் செய்யும் தொழில் ஏதுவாகக் கூறப்படுகின்ற ஆன் என் இறுதிப்பெயர் விளியேற்குமிடத்து ஆய் ஆகும், எ—று.

உ-ம்: உண்டான்—உண்டாய், நின்றான்—நின்றாய், வந்தான்—வந்தாய், சென்றான்—சென்றாய் என வரும்.

ஆதி.

வினையாலணையும் பெயர்களில் தோன்றும் ஆன் ஈறு விளியில் ஆய் ஆகும்.

வந்தான் இவ்வாறு கூறினான் — வினையாலணையும் பெயர்
வந்தாய், யாது கூறினை? — வினையாலணையும் பெயர் —விளி.
பணத்தைப் பெற்றான் யாது செய்தான் — வினையாலணையும் பெயர்
பணத்தைப் பெற்றாய் யாது செய்தனை? — வினையாலணையும் பெயர்—விளி

குறிப்பு: வந்தோய் பெற்றோய் என வருவது இலக்கிய மரபு.

---

1. முன்னிலை வினையாகிய (நீ) உண்டாய் என்பது முன்னிலை வினையாலணையும் பெயராயவழி ''உண்டாய் வா'' என இருந்தவாறே விளியேற்கும் என்க-சிவ.

சிவ.

*இச்சூத்திரம் எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று என்றார் இளம்பூரணர். ஆன் என்னும் இறுதி இயற்கையாகும் என மேல் கூறப்படினும், அது வினையாலணையும் பெயரிடத்து அவ்வாறாகாது என மறுத்தலின் பெயர், வினையாலணையும் பெயர் என்னும் இருமருங்கில் வினையாலணையும் பெயராகிய ஒரு மருங்கு மறுக்கப்பட்டதாம். தொழிலிற் கூறும் ஆன் என் இறுதி இயற்கையாகாது எனின் இளம்பூரணர் கூறியது பொருந்தும். ஆன் என் இறுதி ஆய் ஆகும் என்ற ஓர் விதியும் வகுக்கப் பட்டிருத்தலின் 'எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது' என்றலே சிறப்புடையதாம்.*

**ஆன்இறுதி—பண்புப் பெயர்**

**131. பண்பு கொள் பெயரு மதனோ ரற்றே (17)**

*(பண்பு கொள் பெயரும் அதன் ஓர் அற்று ஏ)*

ஆ. மொ: இல.

The noun of quality of the same
ending is of similar nature.

பி. இ. நூ:

**நேமி. சொ.** 25

*ஆனீற்றுப் பண்பு...மான் விழியாய்*
*ஆய் வரும்.*

**நன்.** 307.

*ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்*
*.........இறுதி யவ்வாதல்...ஆகும்.*

| | | | |
|---|---|---|---|
| **இல. வி.** 209. | ஷ | ஷ | ஷ |
| **தொன். வி.** 72 | ஷ | ஷ | ஷ |

**முத்து. பெ.** 113.

*பண்பு கொள் பெயர் ஆன் ஆயா கும்மே.*

**இளம்.**

*இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.*

*உரை : அவ் வானிறுதி பண்புகொள் பெயராயின் ஆயாய் விளியேற்கும், எ—று.*

வ-று : கரியான்—கரியாய், செய்யான்-செய்யாய் எனவரும் பிறவும் அன்ன.

சேனா.

இ-ள் : ஆன் ஈற்றுப் பண்பு கொள் பெயரும் அவ்வீற்றுத் தொழிற் பெயர் போல ஆயாய் விளியேற்கும், எ-று.
உ-ம் : கரியான்—கரியாய், செய்யான்—செய்யாய் என வரும்.

தெய்.

ஆனீற்றுப் பெயருள் பண்புப் பெயர்க்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.
இ-ள் : பண்பினால் பெற்ற ஆன் ஈற்றுப் பெயரும் ஆய் என விளி ஏற்கும், எ-று.

உ-ம் : கரியான், கொடியான் என்பன காரியாய், கொடியாய் என வரும். [1]கரியான் எனவும் விளியேற்குமாலெனின், அவ்வாறு வருவது பண்பு குறியாது அப்பொருட்கு இடுகுறியாகி வந்தது என்க.

நச்.

இதுவுமது.
இ-ள் : பண்பு கொள் பெயரும் அதனோர் அற்றே —ஆன் ஈற்றுப் பண்பு கொண்டு நின்ற பெயரும் அவ்வீற்றுத் தொழிற் பெயர் போல ஆயாய் விளியேற்கும், எ-று.
உ-ம் : கரியான்—கரியாய், தீயான்—தீயாய் என வரும்.

கல்.

என்-எனின், இதுவும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் : அவற்றுள் பண்பு தனக்குப் பொருண்மையாக் கொண்ட பெயரும் மேற்கூறிய தொழிற்பெயரோடு ஒரு தன்மைத்து, எ-று.

உ-ம் : கரியான்—காரியாய், செய்யான்—செய்யாய் என வரும்.

---

1. கரியான் என்பது ஒருவனுக்குக் காரணம் இன்றி இடப் பட்ட (இடுகுறி) பெயராயின் அதுவே இயல்பு நிலையில் விளியேற்கும்.

ஆதி.

பண்பில் வரும் குறிப்பு வினையாலணையும் பெயரும் அதைப் போலவே (தெரிநிலை வினையாலணையும் பெயர் போல) ஆய் எனத் திரியும்.

கரியான்—கரியாய், நல்லான்—நல்லாய்.

குறிப்பு

இச்சூத்திரம் நுதலுதல் பற்றி முன் சூத்திர இறுதியிற் கூறியவாறே கொள்க.

அளபெடைப்பெயர்

**132** அளபெடைப் பெயரே யளபெடை யியல. (18)

(அளபெடைப் பெயரே அளபெடை இயல)

ஆ.மொ:இல.

The noun of prolongation (which ends in 'an') is in the nature of the noun of prolongation (which ends in 'i')

பி. இ. நூ:

நேமி. சொ. 25

முன் இயல்பாம்...அளபெடை.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், னகர வீற்று அளபெடைக்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: னகர விறுதி அளபெடைப் பெயரும் மேல் (விளி. 8) இகரவீற்று அளபெடை யேற்றவாறு ஏற்க, எ-று.

வ—று: அழாஅன், புழாஅன் என வரும்.

சேனா.

இ-ள்: ஆன் ஈற்றளபெடைப் பெயர் இகரவீற்றளபெடைப் பெயரே போல மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம்: [1]உழாஅன், கிழாஅன் எனவரும்.

---

1 உழவன், கிழவன் என்னும் பொருளன. உழாஅன் கிழாஅன் என்பன அன் ஈற்றுப் பெயர்த்திரிபு என்றும், ஆன் ஈறாயின் உழவோன், கிழவோன் எனத் திரியும் என்றும் பெயரியலில் 'ஆவோவாகும்' (41) என்னும் சூத்திரத்தில் சேனாவரையர் கூறினார். அவர் ஆன் ஈறு கூறுமிடத்தில் உழாஅன், கிழாஅன் என்பனவற்றைக் காட்டியது முரணாகும்.

அளபெடை மூன்று மாத்திரையின் நீண்டு இசைத்தலாகிய விகாரமுடைமையான் 'ஆனென் இறுதி யியற்கை யாகும்' (விளி 15) என்புழி அடங்காமை யறிக.

தெய்.

னகரவீற் றளபெடைப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: னகார இறுதி அளபெடைப் பெயராயின் மேற் சொல்லப்பட்ட அளபெடைப் பெயர்போல இயல்பாகி விளி ஏற்கும் எ-று.

உ-ம்: கிழாஅன், கோஒன் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும்.

நச்.

இஃது எய்தாதது எய்துவித்தது.

இ-ள்: அளபெடைப் பெயரே அளபெடை இயல ஆன் ஈற்று அளபெடைப் பெயர் இகர ஈற்று அளபெடைப் பெயர் போல மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம்: உழாஅஅன், கிழாஆஅன் என வரும். இஃது அளபெடுத்தலின் 'ஆன்' ஈற்றின் அடங்காதாயிற்று.

கல்.

என்-எனின் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ—ள்: ஆன் ஈற்று அளபெடைப் பெயர் மேற்கூறிய இகர வீற்று அளபெடைப் பெயர் போல இயல்பாய் விளியேற்கும், எ—று.

உ-ம்: அழாஅஅன், புழாஅஅன் எனவரும்.

மற்றிஃது 'ஆனென் இறுதி யியற்கையாகும்' என்ற வழியே அடங்காதோ எனின், அளபெடுத்த ஆன் என் இறுதியாகலின் வேறு கூறிற்றுப் போலும்.

வெள்.

உ-ம்: பெருமா அஅன், எம்மா அஅன் எனவரும்.

ஆதி.

உ-ம்: கிழாஅன்—கிழாஅஅன்
சிறாஅன்—சிறாஅஅன்

ஆன் ஈறுபற்றிய இலக்கணம். கூறப்பட்ட இடங்களில் ஆன் ஈறு இயல்பான் அமைந்தது. இங்குக் கூறப்படுவது அளபெடுத்த

நிலையில் வரும் ஆன் என்பது. அதனால் முன்னதற்குரிய விதி பின்னதற்காகாது ஆதலின் முன்னைய விதி எய்தாததை வேறு விதியில் எய்துவித்தது இச்சூத்திரம். அதாவது அளபெடை மிகூஉம் இகர இறுபெயர் போல இயற்கையாகும் என்பது அவ்விதி ஆதலின், அளபெடைக்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று என்பது போல, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று என்பதும் பொருந்தும் என்க.

## முறைப் பெயர்

**133.** முறைப் பெயர்க் கிளவி ஏயொடு வருமே. (19)

ஆ. மொ: இல.

The noun of relation (which ends In 'ṉ') will have 'ē'

பி. இ. நூ:

நேமி சொ. 25

முறைப் பெயரேல் ஏயாகும்.

முத்து. பெ. 116

முறைப் பெயர்க் கிளவி ஏயொடு சிவணும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இறந்தது காத்தல் நுதலிற்று.

உரை : னகார வீற்று முறைப் பெயராமேயெனின் ஏகாரம் பெற்று விளியேற்க, எ-று.

வ-று : மகன்—மகனே, மருமகன்—மருமகனே என வரும்.

[1]மற்று இவை இருதிணைக்கும் உரியவாம்பிற வெனின், உரியவாயினும் முன்னர், 'விளம்பிய நெறியே விளிக்குங்காலை, (விளி. 33) என்னும் மாட்டேறு செல்லாமையான் னகரவீற்று ஒற்றுமை பற்றி வைத்துணர்த்தினார் என்பது.

1. னகர வீற்று உயர்திணை ஏயொடு வரும் எனக் கூறப் படாமையின் அஃறிணை விரவுப் பெயர் உயர்திணைப் பெயர் போல வரும் என்னும் மாட்டேறு (33) மகன் என்னும் விரவுப் பெயர்க்கு இயையாது. ஆதலின் விரவுப் பெயரை னகர வீறு ஒற்றுமைக் கருதியீண்டு கூறினார். அதனால் மகன் என்பதை ஈண்டு திணையாகக் கருதல் வேண்டும். அப்போது மாட் இயையும்.

சேனா.

இ-ள் : னகார வீற்று முறைப் பெயர் ஏகாரம் பெற்று விளி யேற்கும், எ-று.

உ-ம் : மகன்—மகனே, மருமகன்—மருமகனே என வரும்.

தெய்.

னகாரவீற்றுள் முறைப்பெயர் விளியேற்குமாறு உணர்த்து தல் நுதலிற்று.

இ-ள்: னகாரவீற்றுள் முறைமை குறித்த பெயர் ஏகாரத் தோடு விளியேற்கும், எ—று.

உ-ம்: மகன் என்பது மகனே என வரும்.

ஒப்பின் முடித்தல் என்பதனான் முறைமை சுட்டாத மகன் என்னும் பெயரும் ஏயொடு சிவணும் என்று கொள்க. 'பார்ப்பன மகனே பார்ப்பன மகனே' (குறுந். 156) என வரும். 'சான்றாள ரீன்ற தகாஅத் தகாஅ மகாஅ—ஈன்றாட் கொருபெண் இவள் (பரிபா. 8) என ஆகாரமாகியும் வரும்.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் பிற பெயர்க்கண்ணும் ஏயொடு வருதல் கொள்ளப்படும்.

[1]கூந்தல்மா வூர்ந்து குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லியஞான் றுண்டால்—யாங்
கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு. (முத்தொள்)

எனவும், கோன் என்பது கோனே எனவும் வரும்.

இவை 'செய்யுள் மருங்கினும்' (எச்சவியல். 61) என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்ளினும் அமையும்.

நச்.

இதுவும் அது.

இ-ள்: முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே—னகார வீற்று முறைப் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்கும், எ—று.

உ-ம்: மகன்—மகனே, மருமகன்—மருமகனே என வரும். [2]ஐகார வீற்று முறைப் பெயர்க்குக் கூறிய வுரையை யீண்டும் கூறிக் கொள்க.

---

1. இதனை நச்சினார்க்கினியர் 'ஏனைப்புள்ளி' (12) என்னும் சூத்திரத்திற் காட்டுவர்.
2. விளிமரபு சூ. 9

கல்.

என்—எனின், இதுவும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்: ளகாரவீற்று முறைப் பெயராகிய சொல் ஏகாரம் பெற்று விளியேற்கும், எ-று.

உ-ம்: மகன்—மகனே, மருமகன்—மருமகனே எனவரும்.

மற்று இது விரவுப் பெயரன்றோவெனின், மேல் ஐகார வீற்றுள் கூறியவாறே [1]கூறுக.

ஆதி.

முறைப்பெயர் ன்ஈறு ஏபெற்று விளியாகும்.

மகன்—மகனே, அம்மான்—அம்மானே.

ஆய்வு: அண்ணன்—அண்ணா
அப்பன்—அப்பா
மாமன்—மாமா

இங்கு முறைப் பெயர்கள் ஈறு கெட்டு அயல் நெடிலானது கவனிக்கத்தக்கது.

உ-ம்: 'அரனிருந்த மலையெடுத்த அண்ணா'.

சிவ.

இளம் பூரணர் இச்சூத்திரம் இறந்தது காத்தல் நுதலிற்று என்பது பொருந்தாது. எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று என்பதே பொருந்தும். னகர வீறு ஏயொடு வரும் எனஎங்கும் முன்னர்க் கூறப்படவில்லை. அதனால் அது இங்குக்காக்கப்படவும் இல்லை.

### னகரவீற்றுள் விளியேலாதன

134. தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரு
மன்றி யனைத்தும் விளிகோ ளிலவே. (20)

(தான் என் பெயரும் சுட்டுமுதல் பெயரும்
யான் என் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இல ஏ)

ஆ. மொ: இல.

The noun 'thān', demonstrative pronouns, the noun 'you' and the interrogative pronoun-all these will not have vocative case.

1. ஈண்டும் கூறுக—பாடம்

பி. இ. நூ:
முத்து பெ. 117. 118.

*யான் அவன் இவன் உவன் விளியேலாவே.*
*யாவனும் அவ்வியல் பிற்றாகும்.*

இளம்.

*இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ணகரவீற்றுள் விளி யேலாதன இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.*

*உரை : அவைதாம் தான் அவன் இவன் உவன் யான் யாவன் என்பன இவ்வாறு பெயரும் மேல் எவ் விளியும் ஏலா, எ-று.*

சேனா.

*இ-ள் : தான் என்னும் பெயரும் அவன் இவன் உவன் என்னும் சுட்டு முதற் பெயரும யாவன் என்னும் வினாப் பெயரு மாகிய அவ்வனைத்தும் ணகார வீறேயாயினும் விளிகொள்ளா, எ-று.*

தெய்.

*ணகார வீற்றுப் பெயருள் விளியேலாதன உணர்த்துதல் நுதலிற்று.*

*இ-ள் : தான், அவன், இவன், உவன் ; அத்தன்மையன், அத் தன்மையான் ; அன்னான், அனையான்; யான் யாவன் என வருவன விளியேலா, எ-று.*

நச்.

*இது ணகார வீற்றுள் விளியேலாதன கூறுகின்றது.*

*இ-ள் : தான் என் பெயரும் சுட்டு முதற் பெயரும் யான் என் பெயரும் வினாவின் பெயரும் அன்றி அனைத்தும் விளிகோள் இலவே—தான் என்னும் ஆன்ஈற்று விரவுப் பெயரும் அவன் இவன் உவன் என்னும் அன் ஈற்றுச் சுட்டு முதற்பெயரும் யான் என்னும் ஆன் ஈற்றுப் பெயரும் யான் என்னும் பெயரும், யாவன் என்னும் வினாப் பொருளையுணர்த்தும் அன்ஈற்றுப் பெயருமாகிய அவ்வனைத்தும் ணகார வீறேயாயினும் விளி கொள்ளா, எ-று.*

கல்.

*என்-எனின், ணகார வீற்றுள் விளி ஏற்பன எல்லாம்உணர்த்தி இனி விளியேலாதன [1]கூறுகின்றது.*

---

1. *உணர்த்தல் நுதலிற்று—பாடம்.*

இ-ள் : தான் என்னும் ஆனீற்றுப் பெயரும் சுட்டெழுத்தை முதலாகவுடைய ஆன் ஈற்றுப் பெயர்களும் யான் [1]யாவன் என்ற அவ்வனைத்துப் பெயர்களும் மேற் கூறியவற்றான் ஆயினும் பிறவாற்றானாயினும் விளிகோடல் இல, எ-று.

தான் யான் என்பன ஆன் ஈறே எனினும் விளியேலா எனக் கொள்க. அவன் இவன் உவன் என்னும் சுட்டுப் பெயரும் யாவன் என்னும் வினாப் பெயரும் அன்னீறே யெனினும் விளியேலா என்றவாறு.

மற்றுத் [2]தான் என்பதன்றோ வெனின், விரவுப் பெயர்களை உயர்திணைப் பெயர்களோடு மாட்டெறியும் வழி விலக்கற்பாடு மாட்டெறிதற் கொப்பன இன்மையின் ஈண்டே கூறினார் என்பது.

ஆதி.

தான் எனும் பெயரும் (அவன் இவன் போன்ற) சுட்டுப் பெயர்களும், யான் என் பெயரும் (எவன் ஏவன் போன்ற) வினாப் பெயர்களும் இவை போன்றவைகள் விளிக்கப் பெறா.

அன்றி அனைத்தும்—அன்ன பிறவும். அவை; தாம், தாங்கள், அவர், அவள், அவர்கள் நாம், நாங்கள், யாவன், யாவர் விளி பெறா.

ரகார வீறு—ஆர், அர்

135. ஆரு மருவு மீரொடு சிவணும் (21)

(ஆரும் அருவும் ஈரொடு சிவணும்)

ஆ. மொ: இல.

'Ār' and 'ar' will change into 'Īr',

---

ஈர் ஆகும் அர் ஆர்

1. "யான் என்னும் ஆனீற்றுப் பெயரும் வினாப் பொருண்மையுணர்த்தும் அன் ஈற்றுப் பெயரும் அவ் வனைத்துப் பெயரும்"—பாடம்.
2. தான் என்பது விரவுப் பெயரன்றோவெனின்—பாடம். நன்று

பி. இ. நூ:

நேமி. சொ. 26.

நன். 309

ரவ்வீற் றுயர்பெயர்க்கு......
அகரம் இயாதல் ஆண்டை ஆ
ஈயாதல்

இல. வி. 211 ஷை ஷை

தொன். வி. 74. ஷை ஷை

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், நிறுத்தமுறையானே ரகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: ஆர் என்னும் ஈறும் அர் என்னும் ஈறும் திரிந்து ஈர் ஆகும், எ-று.

வ-று: பார்ப்பார்-பார்ப்பீர், கூத்தர்-கூத்தீர் எனவரும்.

சேனா.

நிறுத்த முறையானே ரகாரவீறு விளியேற்குமாறு உணர்த்துகின்றார்.

இ-ள்: ரகார வீற்றுள் ஆர் அர் என நின்ற இரண்டும் ஈராய் விளியேற்கும், எ-று.

உ-ம்: பார்ப்பார்—பார்ப்பீர், கூத்தர்—கூத்தீர் என வரும்.

தெய்.

நிறுத்த முறையானே உயர்திணைக்கண் [1]ரகர வீற்றுப்பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஆர் அர் என்னும் ஈற்றுப் பெயர்கள் ஈர் என்பதனோடு சிவணும், எ-று.

உ-ம்: பார்ப்பார், கூத்தர், உடையர் என்பன பார்ப்பீர் கூத்தீர், உடையீர் எனவரும். வந்தது கொண்டு வராதது முடித்தல் என்பதனால் பெண்டிர்—பெண்டீர் எனவும் வரும்.

நச்.

இது முறையானே ரகாரவீறு விளியேற்குமாறு கூறுகின்றது

1. ரகரம் விளியேற்குமாறு—பாடம்

இ-ள்: ஆரும் அருவும் ஈரொடு சிவணும்—ரகார வீற்றுப் பெயருள் ஆர் அர் என நின்ற இரண்டீற்றுப் பெயரும் ஈர் ஆய் இறுதி திரிந்து விளியேற்கும், எ-று.

உ-ம்: பார்ப்பார்—பார்ப்பீர், கூத்தர்—கூத்தீர் எனவரும்.

கல்.

என்—எனின், நிறுத்த முறையானே ரகாரவீறு விளியேற்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஆர் என்னும் ஈறும் அர் என்னும் ஈறும் ஈர் என்னும் வாய்பாட்டோடு பொருந்தி விளியேற்கும், எ-று.

உ-ம்: பார்ப்பார்—பார்ப்பீர், கூத்தர்—கூத்தீர் என வரும், [2] இஃது ஈற்றயல் நீண்டது.

ரகாரவீறு—வினையாலணையும் பெயர்

136. தொழிற்பெய ராயி னேகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே (22)

(தொழிற்பெயர் ஆயின் ஏகாரம் வருதலும்
வழுக்கு இன்று என்மனார் வயங்கியோர்ஏ)

ஆ. மொ: இல.

In verbal nouns, the joining of 'ē' is not wrong.

பி. இ. நூ:

நேமி. சொ. 26

ஏகாரம் ஓரோவிடத் துளதாம்.

நன். 309

ரவ்வீற் றுயர்பெயர்க்கு...ஏயுறல்.

இல. வி. 211 ஷை ஷை ஷை

தொன். வி 74 ஷை ஷை ஷை

முத்து. பெ. 120

தொழிற்பெயர்க் கிளவி ஏயொடு சிவணும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் எய்தியதன்மேற் சிறப்பு விதி யுணர்த்துதல் நுதலிற்று.

---

2. இத்தொடர் கழகப்பதிப்பில் இல்லை.

உரை: ரகரவீறு தொழிற்பெயராமேயெனின் மேல் எய்திய ஈறேயன்றி அதனொடு ஏகாரம் பற்றியேற்க, எ—று.

உ-ம்: உண்டார்—உண்டீரே, சான்றார்—சான்றீரே என வரும்.

'வழுக்கின்று' என்பதனால் நம்பியார்—நம்பியீரே, கணியார் —கணியீரே என்பன போல்வன கொள்க.

சேனா.

இ-ள்: மேற்கூறிய இரண்டீற்றுத் தொழிற் பெயர்க்கும் ஈரோடு ஏகாரம் வருதலும் குற்றமன்று, எ-று.

உ-ம்: வந்தார்—வந்தீரே, சென்றார்—சென்றீரே என வரும்.

அர் ஈற்றுத் தொழிற்பெயர் வந்தவழிக் கண்டு கொள்க. ஏகாரம் வருதலும் வழுக்கின் றென்றதனான், ஏகாரம் பெறாது ஈரோடு சிவணலே பெரும்பான்மை என்பதாம்.

தெய்.

இ-ள்: மேற் சொல்லப்பட்ட ஈறுகள் தொழிற் பெயராயின் ஏகாரம் வருதலும் குற்றம் இல்லையென்பர் அறிந்தோர், எ-று.

உம்மை யிறந்தது தழீஇயிற்று.

உ-ம்: வந்தார் வந்தவர் என்பன வந்தீர் என வருதலேயன்றி வந்தாரே, வந்தவரே எனவும் வரும்.

ஈரோடு சிவணும் என்றோதி, ஏகாரம் வருதலும் குற்றம் இல்லை என்றதனான் அதனோடு அடுத்து வருதலும் கொள்க. வந்தீரே எனவும் வரும்.

நச்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ-ள்: தொழிற்பெயராயின்—மேற்கூறிய இரண்டு ஈறும் தொழிற்பெயர்க்கு ஈறாய் வருமாயின், ஏகாரம்வருதலும்வழுக்கு இன்று என்மனார் வயங்கியோரே—[1]மேற்கூறிய ஈரோடு ஏகாரம் வருதலும் குற்றம் இன்று என்று கூறுவர் விளங்கிய அறிவினை யுடையார், எ-று.

உ-ம்: வந்தார்—வந்தீரே, சென்றார்—சென்றீரே என வரும். அர் வந்துழிக் காண்க.

---

1. முற்கூறிய—பாடம்

'வழுக்கின்று' என்றதனால் தொழிற் பெயரல்லா ஆர் ஈறுகளும் ஈரோடு ஏகாரம் பெறுதல் கொள்க.

உ-ம் : நம்பியார்—நம்பியீரே, கணியார்—கணியீரே என வரும்.

இன்னும் அதனானே அர் ஈறு வந்தவரே, சென்றவரே என ஈர் பெறாது ஏகாரம் பெற்று வருதலும் சிறுபான்மை கொள்க.

கல்.

என்-எனின், இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள் : மேற் கூறிய இரண்டு ஈறும் தொழிற் பெயர்க்கு ஈறாய்வரின் மேற்கூறிய ஈரோடு ஏகாரம்பெற்று வருதலும் குற்றமின்றுஎன்று[1] சொல்லுவர் விளங்கிய அறிவினையுடையார், எ-று.

உ-ம் : உண்டார்—உண்டீரே, தின்றார்—தின்றீரே என வரும். அர் ஈறு வந்த வழிக் கண்டு கொள்க.

வழக்கின்று என்றதனால் தொழிற் பெயரல்லனவும் ஈரோடு ஏகாரம் பெறுதல் கொள்க.

உ-ம் : நம்பீரே, கணியீரே என வரும்.

ஆதி.

வினையாலணையும் பெயரின் ஈற்றில் ஆர் ஏகாரம் சேர்ந்து விளி ஆதலும் குற்றமன்று.

உடையார்—உடையாரே, கூத்தர்—கூத்தரே, கொண்டார்—கொண்டாரே.

உடையீர் கொண்டீர் என ஈர் ஆவது முறையாயினும் ஏவரினும் குற்றம் இலதாம்.

என்மனார் வயங்கியோர்—கவிமரபு இசை நிறை.

ரகாரவீறு—பண்புப் பெயர்

137. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே (23)

(பண்புகொள் பெயரும் அதன் ஓர் அற்றுஏ)

ஆ. மொ: இல.

The noun of quality of the same ending is of similar nature

---

1. கூறுவர்—பாடம்

பி. இ. நூ:
முத்து. பெ. 121.

பண்புகொள் பெயரும் அவ்வியல் பாகும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இதுவும் எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

உரை: பண்பு கொள வந்த ஆர் ஈரோடு ஏகாரம் பெற்று விளியேற்கும், எ-று.

வ-று: செய்யார்—செய்யீரே என வரும்.

சேனா.

இ-ள்: அவ்விரண்டீற்றுப் பண்புகொள் பெயரும் அவ் வீற்றுத் தொழிற்பெயர்போல, ஈரோடு, சிவணியும் சிறுபான்மை ஈரோடு ஏகாரம் பெற்றும் விளியேற்கும், எ-று.

உ-ம்: கரியார்—கரியீர், இளையர்—இளையீர் எனவும்; கரி யீரே, இளையீரே எனவும் வரும்.

தெய்.

ரகார வீற்றுப் பண்புகொள்பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ரகார வீற்றுப் பண்பினான் வரும் பெயரும் தொழிற் பெயர் போல விளியேற்கும், எ-று.

உ-ம்: கரியார் கரியவர் என்பன கரியீர் என வருதலேயன்றிக் கரியாரே, கரியவரே, கரியீரே எனவும் வரும்.

நச்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி வகுத்தது.

இ-ள்: பண்பு கொள் பெயரும் அதன் ஓர் அற்றே—அவ் விரண்டீற்றுப் பண்பு கொள் பெயரும் அவ்வீற்றுத் தொழிற் பெயர் போல ஈரோடு சிவணியும், சிறுபான்மை ஈரோடு ஏகாரம் பெற்றும் ஈர் பெறாது ஏகாரம் பெற்றும் விளியேற்கும், எ-று.

உ-ம்: கரியர்—கரியீர், இளையார்—இளையீர் எனவும், கரியீரே, இளையீரே எனவும்; கரியவரே இளையவரே எனவும் வரும்.

இனித் தன்னின முடித்தல் என்பதனால், 'சீவகசாமி' (சீவக. 665) என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை, 'சீவக சாமி யார்' என 'ஆர் ஈறாய்ச் 'சீவக சாமியீரே' (சீவக. 1913) என ஈரோடு ஏகாரம் பெறுதல் கொள்க.

கல்.

என்-எனின், இதுவும் எய்தியதன் மேற் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் : அவ்விரண்டூற்றுப் பண்பு கொள் பெயரும் அத் தொழிற் பெயரோடு ஒருதன்மைத்து, எ-று.

உ-ம் : கரியீரே, செய்யீரே என வரும். ஈண்டும் ஆர் ஈறு வந்தவழிக் கண்டு கொள்க.

ஆதி.

குறிப்பு வினையாலணையும் பெயரும் அவ்வாறே ஏகாரம் சேர்ந்து விளி ஆகலாம்.

கணிதர்—கணிதரே, நல்லார்—நல்லாரே.

## அளபெடைப் பெயர்

**138.** அளபெடைப் பெயரே யளபெடை யியல (24)

(அளபெடைப் பெயர் ஏ அளபெடை இயல)

ஆ. மொ: இல.

The noun of prolongation (aḷapedaippeyar) (which ending 'r') is in the nature of prolongation (which ends in 'an')

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், ரகரவீற்று அள பெடைக்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை : ரகரவீற்று அளபெடைப் பெயர்-இகரவீற்று அள பெடைப் பெயர்போல் விளியேற்கும், இயல்பாய், எ-று.

வ—று : மகாஅர், சிறாஅர் எனவரும்.

சேனா.

இ—ள் : ரகார வீற்றளபெடைப் பெயர் முற்கூறிய அள பெடைப் பெயர்போல, மூன்று மாத்திரையின் மிக்கு இயல்பாய் விளியேற்கும், எ—று.

உ-ம் : சிறா அஅர் (புறம் 291) மகாஅஅஅர் எனவரும்.

தெய்.

ரகாரவீற்றுள் அளபெடைப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : ரகார வீற்றுள் அளபெடைப் பெயர் மேற்சொல்லப் பட்ட அளபெடைப் பெயர் போல இயல்பாகி விளியேற்கும், எ—று.

உ-ம் : மகாஅர், சிறாஅர் என்பன விளிக்கண்ணும் அவ் வாறே வரும்.

நச்.

இஃது எய்தாதது எய்துவித்தது.

இ—ள் : அளபெடைப் பெயரே அளபெடை இயல—ரகார வீற்று அளபெடைப் பெயர் ணகாரவீற்று அளபெடைப் பெயர் போல மாத்திரைமிக்கு இயல்பாய் விளியேற்கும், எ—று.

உ-ம் : 'சிறாஅஅர் துடியர் பாடுவல் மகா அஅர்' (புறம் 291) என வரும். அவ்வளபெடைகள் செய்யுளுள் குறைந்து வந்தன, சந்த இன்பம் நோக்கி விகாரத்தாற் குறைந்து வந்தன என்று கொள்க.

கல்.

என்-எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் : ரகார வீற்று அளபெடைப் பெயர் ணகார வீற்று அள பெடைப் பெயர்போல இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம் : மகாஅர், சிறாஅர் எனவரும்.

குறிப்பு: இச்சூத்திரம் நுதலுதல் பற்றி. "அளபெடைமிகூஉம்" (விளி. 8) என்னும் சூத்திர உரையில் சிவ. கூறியாங்குக் கூறிக் கொள்க.

ரகாரவீறு—விளியேலாதன

**139. சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன (25)**

(சுட்டுமுதல் பெயர்ஏ முன்கிளந்த அன்ன)

---

1. பாடுவல் மகாஅர்=பாடுதலில் வல்ல மக்களே!

ஆ. மொ: இல.

The demonstrative pronouns (of 'r' ending) are of the same nature as already mentioned (of 'n' ending)

பி இ நூ:

முத்து. பெ. 123, 124

அவர் இவர் உவர் விளியடையா வாகும்
யாவரும்...அவற்றோ ரற்றே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

உரை: மேல் னகர வீற்றுச் சுட்டுப் பெயர் விளியேலா என்றான், அவையே போல ரகரவீற்றுச் சுட்டுப் பெயரும் விளியேலா என மாட்டெறிந்தவாறு.

அவையாவன: அவர் இவர் உவர் என்பன.

சேனா.

இ-ள்: அவர் இவர் உவர் என வரும் ரகாரவீற்றுச் சுட்டு முதற்பெயர் னகாரவீற்றுச் சுட்டு முதற்பெயர் போல விளி கொள்ளா, எ—று.

தெய்.

ரகாரவீற்றுள் விளியேலாதன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டு முதலாகிய பெயர் மேற் சொல்லப்பட்ட சுட்டு முதற் பெயர் போல விளியேலா, எ-று.

உ-ம்: அவர், இவர், உவர், அத்தன்மையர், அத்தன்மையார் என்பன விளியேலா.

நச்.

இது விளியேலாதன கூறுகின்றது.

இ-ள்: சுட்டு முதற்பெயரே முன் கிளந்தன்ன—அவர் இவர் உவர் என்னும் ரகாரவீற்றுச் சுட்டு முதற் பெயர் னகார வீற்றுச் சுட்டு முதற் பெயர் போல விளி கொள்ளா, எ-று.

கல்.

என்—எனின், ரகாரவீற்றுப் பெயர் விளியேலாதன கூறு இன்றது.

இ-ள்: ரகாரவீற்றுச் சுட்டெழுத்தினை முதலாகவுடைய பெயர்கள் னகாரவீற்றுச் சுட்டு முதற் பெயர்போல விளியேலாது என்னுதல் நுதலிற்று.

அவர் இவர் உவர் என்பன அர்ஈறே எனினும் விளியேலா என்னுதலாயிற்று.

குறிப்பு: இச்சூத்திரம் விளியேலாதன கூறுகின்றது என்பதே நன்று. எய்தியது விலக்குதல் நுதலியதாகக் கொள்வது அத்துணைச் சிறப்பின்று. சுட்டுமுதற் பெயர்களை னகர வீறு என்று கொண்டு னகர வீற்றுக்குக் கூறிய விளிநிலை பெறாமையின் எய்தியது விலக்கிற் றாகக்கொண்டார் இளம் பூரணர்.

**140.** நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை யிரண்டு மவற்றியல் பியலும் (76)

(நும்மின் திரிபெயர் வினாவின் பெயர் என்று
அம்முறை இரண்டும் அவற்று இயல்பு இயலும்)

ஆ. மொ: இல.

The changed form of noun ('nīyir') and interrogative noun —these two are of the same nature of above said pronouns.

பி. இ. நூ:

முத்து. பெ. 124

நீவிரும் அவற்றோ ரற்றே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேல் எய்தியது விலக்கல் நுதலிற்று.

உரை: நும்மின்திரிபெயர்—நீயிர் என்பது, வினாவின் திரிபெயர்—யாவர் என்பது. இவையிரண்டு பெயரும் விளியேலா, எ—று.

மற்று, இர் ஈறு விளியேற்கும் என்ற தின்மையின் நும்மின் திரிபெயர் விளியேலாது என்று விலக்கியது என்னையெனின், அற்றன்று; பெண்டிர்—பெண்டீரேயென இர் ஈறும் விளியேற்கும் என்று மேல் இலேசினால் எய்துவித்துப் போந்தாமாகலின் (விளி. 12) விலக்க வேண்டும் என்பது.

சேனா.

இ-ள்: நும்மின் திரிபாகிய நீயிரும் வினாவின் பெயராகிய யாவரும் இரண்டும் மேற் கூறிய சுட்டுப் பெயர்போல விளி யேலா, எ-று.

நீயிர் என்பதனை நும் எனத்திரியாது நும் என்பதனை நீயிர் எனத் திரிப்பினும் இழுக்காது என்னும் கருத்தான் எழுத்தோத்தி னுள் (325) நும் என நிறுத்தித் திரித்தாராகலான் அதுபற்றி நீயிர் என்பதனை 'நும்மின் திரி பெயர்' என்றார்.

தெய்.

இதுவுமது.

இ-ள்: நும்மின் திரிபெயராவது நீயிர். வினாவின் பெயரா வது வினாவானாகிய பெயர்; அது யார், யாவர் என்பது. அம் முறையாகிய இரண்டு பெயரும் விளியேலா, எ-று.

இவ்வீற்றினுள் முறைப்பெயர் கூறாதது என்னையெனின் அது பொது விதியான் அடங்குதலின் என்க.

நச்.

இதுவுமது.

இ—ள்: நும்மின் திரிபெயர்—நும் என்னும் சொல்லினது திரிபாகிய நீயிர் என்னும் சொல்லும், வினாவின் பெயர்—வினாப் பொருளை யுணர நின்ற யாவர் என்னுஞ் சொல்லும் என்று அம் முறை இரண்டும் அவற்று இயல்பு இயலும்—என்று சொல்லப் பட்ட அம்முறைமையினையுடைய இரண்டு சொல்லும் முற் கூறிய சுட்டுப்பெயர்போல விளியேலா, எ—று.

'ஏனைப் புள்ளி' (விளி. 12) யென்பதனுள் 'இர்' ஈறு கோட லின் ஈண்டு நீயிர் என்பதனை எடுத்தோதி விலக்கினார்.

கல்.

என்-எனின், இதுவும் விளியேலாதன கூறுதல் நுதலிற்று.

இ-ள்: நும் என்னும் சொல்லினது திரிபாகிய நீயிர் என்னும் சொல்லும், வினாப் பொருளையுணர நின்ற சொல்லாகிய யாவர் என்னும் சொல்லும் என்று சொல்லப்பட்ட அம்முறையினை யுடைய சொல் இரண்டும் மேல் விளியேலாது என்று சொல்லப் பட்ட சுட்டுப் பெயர் போலத் தாமும் விளியேலா, எ-று.

நீயிர் என்பது †இர் ஈறாகலின், ஈண்டு எய்தியதுஇன்மையின் விலக்கல் வேண்டா எனின், 'ஏனைப் புள்ளி' (விளி. 12) என்பதனுள் இர் ஈறும் கொள்ளப்பட்டமையின் வேண்டும் என்பது.

வெள்.

நீயிர் என்பது நும்மெனத் திரிந்தது என்னுங் கருத்தினை யுடன்படாது நும் என்பதே நீயிர் எனத் திரிந்தது எனத்தாம் எழுத்ததிகாரத்துக் கூறியதனை (புள்ளி ம. 31) மீண்டும் வற்புறுத்தும் நோக்கத்துடன் ஈண்டு நீயிர் என்பதனை 'நும்மின் திரி பெயர்' எனக் குறித்தார் தொல்காப்பியனார்.

ஆதி.

நும் திரி பெயர்கள் வினாப் பெயர்கள் இவை சுட்டுப் பெய ரியல்பே கொள்ளும் (விளி பெறா).

நுமர் நுமன் நுமள் எவன் எவர் யாவர் விளியேறா.

குறிப்பு : இச்சூத்திரம் நுதலுதல் பற்றி முன் சூத்திரவுரை யிறுதியில் கூறிய குறிப்பு போலவே கூறிக் கொள்க.

லகர ளகர வீற்றுப் பெயர்

141. எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற வீற்றய னீட்டம் வேண்டும் (27)

(எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயர்ஏ
நின்ற ஈற்று அயல் நீட்டம் வேண்டும்)

ஆ. மொ: இல.

The remaining two nouns which end in 'l' and 'ḷ' will have their last but one vowel (or syllable) lengthened.

பி. இ. நூ:

நேமி. சொ. 27

சற்றயல் நீடும் லளக்கள்தாம்

முத்து. பெ. 125

லளக்களின் ஈற்றயல் நீண்டு விளிக்கும்.

---

† கூற்றாகலின், ஈண்டு—பாடம்.

நன். 310, 308

லகார வீற்றுப் பெயர்க்கு அயல் நீட்சியும்

ளஃகான் உயர்பெயர்க்கு...அயல் நீட்சி

இல வி. 212, 210

லகார வீற்றுப் பெயர்க்கு அயல் நீடுதலும்

ளஃகான் உயர் பெயர்க்கு...அயல் நீட்சி

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேல் நிறுத்த முறை யானே ஒழிந்த இரண்டு புள்ளியீறும் விளியேற்குமாறு உணர்த் துதல் நுதலிற்று.

உரை; ஒழிந்து நின்ற புள்ளிகளை யீறாகவுடைய தம் இறுதி யெழுத்தின் அயலெழுத்து நீண்டு விளியேற்க, எ-று.

வ-று: குரிசில்—குரிசீல், தோன்றல்—தோன்றால், மக்கள்—மக்காள் என வரும்.

சேனா.

நிறுத்தமுறையானே லகார ளகார வீற்றுப் பெயர் விளியேற் குமா றுணர்த்திய எடுத்துக்கொண்டார்.

இ-ள்: உணர்த்தாது நின்ற லகார ளகாரம் என்னும் இரண்டு புள்ளியை யிறுதியாகவுடைய பெயர், ஈற்றயல் எழுத்து நீண்டு விளியேற்கும், எ-று.

உ-ம்: குரிசில்—குரிசீல், மக்கள்—மக்காள் எனவரும்.

தெய்.

லகார ளகார வீற்றுப்பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: லகார ளகார வீற்றுப்பெயர் விளியேற்புழி ஈற்றயல் நீட்டம் கொடுத்தல் வேண்டும், எ-று.

உ-ம்: குருசில், தோன்றல், மக்கள் என்பன குருசீல், தோன் றால், மக்காள் எனவரும்.

நச்.

லகார ளகார வீறு விளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள்: எஞ்சிய இரண்டின் இறுதிப்பெயரே—உணர்த்தாது நின்ற லகார ளகாரம் என்னும் இரண்டு புள்ளியை யிறுதியாக

வுடைய பெயர், ஈற்று அயல் நின்ற நீட்டம் வேண்டும்—ஈற்றெழுத்துக்கு அயல் நின்ற எழுத்து நீண்டு விளியேற்றல் வேண்டும், எ-று.

உ-ம்: குரிசில்—குரிசீல், ஏந்தல்—ஏந்தால், தோன்றல்—தோன்றால், குழையள்—குழையாள், அணியள்—அணியாள், மக்கள்—மக்காள் என வரும்.

கல்.

என்—எனின். நிறுத்தமுறையானே லகார ஈறும் ளகார ஈறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: லகார ளகாரம் என எஞ்சிய இரண்டெழுத்தினையும் இறுதியாகவுடைய பெயர்கள் ஈற்றினின்ற எழுத்திற்கு அயலெழுத்து நீண்டு விளியேற்றல் வேண்டும், எ-று.

உ-ம்: குரிசில்—குரிசீல், தோன்றல்—தோன்றால், மக்கள்—மக்காள் எனவரும்.

ஆதி.

நமர்கள் என்பது அம் சாரியை பெற்று விளி ஆகிறது. நமரங்காள்.

**142.** அயனெடி தாயி னியற்கை யாகும். (28)

(அயல் நெடிது ஆயின் இயற்கை ஆகும்)

ஆ. மொ: இல.

If the last but one syllable is long it remains unchanged.

பி. இ. நூ:

நேமி. சொ. 27

அயல் நெடிதாம் பேரும்...இயல்பாம் விளிக்குமிடத்து.

முத்து. பெ. 126

அயல் நெடிதாயின் இயல்பா கும்மே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

உரை: அவ்விரண்டு ஈறும் ஈற்றெழுத்தின் அயல் எழுத்து நீண்டு நிற்பின் இயற்கையாய் விளியேற்கும், எ—று.

வ-று: பெண்பால், ஆண்பால், எம்மாள், கோமாள் கடியாள், பெரியாள் என வரும்,

சேனா.

இ-ள்: ஈற்றயலெழுத்து நெட்டெழுத்தாயின் இயல்பாய் விளியேற்கும், எ—று.

உ-ம்: பெண் பால், கோமாள் என வரும்.

தெய்.

இ-ள்: லகார ளகார வீற்றுப் பெயர் விளியேற்புழி ஈற்றயல் நெடிதாயின் இயல்பாகி விளியேற்கும், எ—று.

உ-ம்: பெண்பால், கோமாள் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும்.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள்: அயல் நெடிது ஆயின் இயற்கை ஆகும்—அவ்விரண்டீற்றுப் பெயரும் ஈற்றயல் எழுத்து நெட்டெழுத்து ஆயின் இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம்: ஆண்பால், பெண்பால், ஏமாள், கோமாள், கடியான் என வரும். நமர்காள் என்பதும் அது நமரங்காள் அறிமின் எனப் பெயர்த் திரி சொல்லாய்த் திரிந்து நின்று விளியேற்றலும் கொள்க.

கல்.

என்-எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: அவ்விரண்டீற்றுப் பெயரும் அயல் எழுத்து நீண்ட நிலைமைய வாயின் இயல்பாய் விளியேற்கும், எ-று.

உ-ம்: ஆண்பால், பெண்பால், ஏமாள், கோமான் என வரும்.

ஆதி.

உம்-: திருமால், பெருமாள் இயற்கை.

ஆய்வு! திருமாலே, பெருமாளே—ஈற்றில் ஏகாரம் பெற்றன.

சிவ.

முன் சூத்திரத்தில் (27) லகர ளகர வீற்றுப் பெயர்கள் விளியேற்கும் போது அவூற்றின் அயல் குறிலாயின் நீண்டு விளி

யேற்கும் என்பது கூறப்பட்டது. இச்சூத்திரத்தில் அவற்றின் அயல் நெடிதாயின் இயற்கையாகும் என்பது கூறப்பட்டது. எனவே முன்னது ஒன்றற்கும் பின்னது ஒன்றற்கும் விதி கூறப் பட்டமையின் எய்தியது விலக்கல் என்பது இல்லை. அதனால் பிறிது விதி வகுத்தலும் இல்லை. எனவே முன்சூத்திரம் சொல் லாத ஒன்றை இச்சூத்திரம் சொல்லுதலின் எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று என்பதே நன்று.

ளகர வீற்று வினையாலணையும் பெயரும் பண்புப் பெயரும்

**143.** வினையினும் பண்பினும்
நினையத் தோன்று மாளென் னிறுதி
யாயா கும்மே விளிவயி னான (129)

(வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆள்என் இறுதி
ஆய் ஆகும்ஏ விளிவயின் ஆன)

ஆ: மொ: இல.

The ending of 'āḷ' which appears in the nouns of
verbe and quality will change into
'āy' inthe vocative case

பி. இ. நூ:

நன். 308

ளஃகான் உயர்பெயர்க்கு......
இறுதியவ் வொற் றாதல்

இல. வி. 210

ளஃகான் உயர்பெயர்க்கு......
இறுதி ளகரம் யவ்வொற்றாதல்

தொன். வி. 73 ஷை ஷை

முத்து. பெ. 127

ஆள்என் இறுதி பண்புப் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் ஆயொடு விளிக்கும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

உரை : ஆள் என் இறுதி வினைப்பெயரும் பண்புப் பெயரு மாயின் ஆயாய் விளியேற்கும், எ-று.

வ-று: உண்டாள்—உண்டாய் எனவும், கரியாள்—கரியாய் எனவும் வரும்.

சேனா.

இ-ள்: வினையின் கண்ணும் பண்பின் கண்ணும் வரும் ஆள் ஈற்றுப் பெயர் இயல்பாகாது ஆயாய் விளியேற்கும், எ—று.

உ-ம்: நின்றாள்—நின்றாய் எனவும், கரியாள்—கரியாய் எனவும் வரும்.

'விளிவயினான' என்பதனை முன்னும் பின்னும் தகுவனவற் றோடு கூட்டுக.

தெய்.

ளகார வீற்றுள் ஒருசாரன விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: தொழிற்பெயர்க் கண்ணும் பண்புப்பெயர்க் கண்ணும் வரும் ஆள் என் இறுதி ஆய் ஆகும் விளித்தற்கண், எ—று.

'பெயர்' என்றது அதிகாரத்தான் வந்தது. 'ஈண்டு விளி வயினான' என்பதற்கு மேல் உரைத்தவாறே கொள்க.

உ-ம்: உண்டாள், கரியாள் என்பன உண்டாய், கரியாய் என வரும்.

நச்.

இஃது அவ்விரண்டனுள் ளகார வீற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ-ள்: வினையினும் பண்பினும் நினையத் தோன்றும் ஆள் என் இறுதி—வினைச் சொல்லின்கண்ணும் பண்புச் சொல்லின் கண்ணும் ஆராயத் தோன்றும் ஆள் ஈற்றுப் பெயர், விளிவயி னான ஆய் ஆகும்மே—விளிக்குமிடத்து இயல்பாகாது ஆயாய் விளியேற்கும், எ—று.

உ-ம்: உண்டாள்—உண்டாய், கரியாள்—கரியாய் எனவரும்.

'விளிவயினான' என்பதனை யாண்டும் கூட்டுக.

கல்.

என்-எனின், அவ்விரண்டற்றுள் ளகார வீற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: வினையினானும் பண்பினானும் ஆராயத் தோன்றும் ஆள் என்னும் இறுதி விளிக்குமிடத்து ஆயாய் விளியேற்கும், எ-று.

உ-ம்: உண்டாள்—உண்டாய் எனவும், கரியாள்—கரியாய் எனவும் வரும்.

ஆதி.

தெரிநிலைவினை குறிப்பு வினையாலணையும் பெயர்களின் ஈற்றிலுள்ள ஆள் விளியில் ஆய் ஆகும்.

உண்டாள் வந்தனள்—உண்டாள் வினையாலணையும் பெயர்
உண்டாய் வயிறு நிரம்பியதோ—விளி
நல்லாள் வந்தனள்—நல்லாள்—வினையாலணையும் பெயர்.
நல்லாய் வந்தனையா—விளி.

சிவ.

முன்சூத்திரம் (28) லகர ளகர வீற்றுப் பெயர்கள் விளி கொள்ளுமாறு கூறியது. இச்சூத்திரம் அவற்றுள் ளகரவீறு ஒன்று விளி கொள்ளுமாறு கூறுகின்றது. அதாவது வினையினும் பண்பினும் தோன்றும் ஆள் என்பது மட்டில் முன்கூறிய விதியை பெறாது ஆய் எனத் திரியும் என்பதாம் லகர ளகர வீறுகளாகிய இருமருங்கில் ஆள் என ளகரவீறாகிய ஒருமருங்குக்கு மட்டில் முன் சூத்திரவிதி மறுக்கப்பட்டமையின் எய்தியது ஒருமருங்கு மறுத்ததாக இளம்பூரணர் கூறினார். எய்தியது மறுத்தது மட்டு மன்றி ஆய் ஆகும் என ஓர் விதியும் வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது இச்சூத்திரம் என நச்சினார்க் கினியர், கல்லாடனார் கூறியதே பொருந்தும்.

### ளகர வீற்று முறைப் பெயர்

**144.** முறைப் பெயர்க் கிளவி முறைப் பெய ரியல (30)

(முறைப் பெயர்க்கிளவி முறைப் பெயர் இயல்)

ஆ. மொ: இல.

The nouns of relation are of the nature of other nouns of relation.

**பி. இ. நூ:**

**நேமி. சொ. 27.**

*ஏகாரம் தோற்றும் முறைப் பெயர்கள்.*

**முத்து. பெ. 128**

*முறைப் பெயர்க் கிளவி முறைப் பெய ரியல.*

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

*உரை:* மேல் னகர வீற்று முறைப் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்றது; இதுவும் ஏகாரம் பெற்று விளியேற்க, எ-று.

*உ-ம்:* மகள்—மகளே, மருமகள்—மருமகளே என வரும்.

மற்று இவை இருதிணைக்கும் உரிய பெயர் பிற வெனின் முன்னர் (விளி–19) விடுத்தாங்கே விடுக்க.

**சேனா.**

*இ-ள்:* ளகாரவீற்று முறைப் பெயர் னகாரவீற்று முறைப் பெயர் போல, ஏகாரம் பெற்று விளியேற்கும், எ—று.

*உ-ம்:* மகள்—மகளே, மருமகள்—மருமகளே எனவரும்.

**தெய்.**

*ளகாரவீற்றுள் முறைப்பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

*இ—ள்:* ளகார வீற்றுள் முறைப் பெயர்ச்சொல் னகார வீற்றுள் முறைப் பெயர் போல விளியேற்கும், எ—று.

*உ—ம்:* மகள்—மகளே என வரும்.

ஒப்பின் முடித்தல் என்பதனால் முறைமை சுட்டாத மகள் என்பதும் ஏகாரம் பெற்று விளியேற்கும்.

*உ—ம்:* "அகவன் மகளே அகவன் மகளே" (குறுந். 23) என வரும்.

**நச்.**

*இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.*

*இ—ள்:* முறைப் பெயர்க்கிளவி முறைப்பெயர் இயல—ளகார வீற்று முறைப்பெயர் னகார வீற்று முறைப் பெயர் போல ஏகாரம் பெற்று விளியேற்கும், எ—று.

*உ—ம்:* மகள்—மகளே, மருமகள்—மருமகளே என வரும்.

கல்.

என்—எனின், இதுவும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள் : ளகார வீற்றுப் பெயர் னகார வீற்று முறைப் பெயர்போல ஏகாரம் பெற்று விளியேற்கும், எ—று.

உ—ம் : மகள்—மகளே, மருமகள்—மருமகளே என வரும்.

மற்றிதுவும் விரவுப் பெயரன்றோ வெனின் மேற் கூறிய வாறே கொள்க.

குறிப்பு

இச்சூத்திரம் நுதலுதல் பற்றி 'முறைப்பெயர் மருங்கின்' (9) என்னும் சூத்திரவுரையிறுதியில் சிவ. குறிப்பில் உள்ளவாறு கூறிக்கொள்க.

ளகரவீற்றுள் விளியேலாதவை

145. சுட்டு முதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர் (31)

(சுட்டுமுதல் பெயரும் வினாவின் பெயரும்
முன்கிளந்த அன்ன என்மனார் புலவர்).

ஆ. மொ: இல.

The demonstrative pronouns and interrogative pronouns are of the same as said above, so say the poets.

பி·இ.நூ:

முத்து. பெ. 129.

யாவன் அவள் இவள் உவள் விளியாவே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், எய்தியது விலக்கல் நுதலிற்று.

உரை: மேல் னகரவீற்றுச் சுட்டுப்பெயரும் வினாவின் பெயரும் விளியேலா என்றார்; அவை போல இவையும் விளி யேலா என்பது உணர்த்துதல் ஆயிற்று.

அவையாவன: அவள் இவள் உவள் யாவள் என்பன.

சேனா.

இ-ள்: அவள் இவள் உவள் என்னும் ளகார வீற்றுச் சுட்டு முதற்பெயரும் யாவள் என்னும் வினாப்பெயரும், மேற் கூறிய சுட்டுமுதற் பெயரும் வினாப் பெருயம் போல விளி கொள்ளா, எ-று.

தெய்.

ளகார இறுதிப் பெயருள் விளி ஏலாதன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : சுட்டெழுத்தை முதலாகவுடைய பெயரும், வினா வாகிய பெயரும் மேற் சொல்லியவாறு போல விளியேலா, எ-று.

உ-ம் : அவள், இவள், உவள், அத்தன்மையள், அத்தன்மை யாள், யாவள் என்பன விளியேலா என்றவாறு.

நச்.

இது ளகார வீற்றுள் விளியேலாதன கூறுகின்றது.

இ-ள் : சுட்டு முதற் பெயரும் வினாவின் பெயரும் முற் கிளந்தன்ன என்மனார் புலவர் — அவள் இவள் உவள் என்னும் ளகார வீற்றுச் சுட்டு முதற் பெயரும யாவள் என்னும் வினாப் பெயரும் முற்கூறிய சுட்டு முதற் பெயரும் வினாப் பெயரும் போல (விளி. 20) விளி கொள்ளா, எ-று.

கல்.

என்-எனின், இஃது ளகார வீற்றுள் விளியேலாதன உணர்த் துதல் நுதலிற்று.

இ-ள் : ளகார வீற்றுச் சுட்டெழுத்தினை முதலாக வுடைய அவள் இவள் உவள் என்னும் பெயர்களும், வினாப் பொருண்மை யுடைய யாவள் என்னும் பெயரும் னகார வீற்றுச் சுட்டெழுத்து முதற் பெயரும் வினாவின் பெயரும் போல விளியேலாவென்று சொல்லுவர் புலவர், எ-று.

குறிப்பு :

இச்சூத்திரம் விளியேலாதன கூறுகின்றது என்றலே நன்று.

லகர ளகர வீற்று அளபெடைப் பெயர்

146. அளபெடைப் பெயரே யளபெடை யியல (32)

(அளபெடைப் பெயர்ஏ அளபெடை இயல)

ஆ. மொ: இல.

The noun of prolongation is in the nature of the noun of prolongation of other endings.

பி. இ. நூ:

நேமி. சொ. 27

அளபெடையாம் பேரும் இயல்பாம்

முத்து. பெ. 130

அளபெடைப் பெயரும் அளபெடை யியல.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அளபெடைக்கு உரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: மாட்டேற்று வகையான் உயர்திணை னகர ஈற்று அளபெடை விளியேற்றவாறே இவையும் விளியேற்க என்பது உணர்த்தியவாறு.

வ-று: மாஅ னின்னிறம் போல் மழை யிருளிற் பட்டதே
கோஒள் குளக்கோடு கொண்டு

என்பதனுள் மாஅல், கோஒள் என விளிநிலைக் கண்ணும் நின்றாங்கே நிற்கும் என்பது.

சேனா.

இ-ள்: லகார ளகாரவீற் றளபெடைப் பெயர் மேற்கூறிய அளபெடைப் பெயரேபோல அளபு நீண்டு இயல்பாய் விளி யேற்கும், எ-று.

உ-ம்: மாஅல், கோஒள் எனவரும்.

‡[1] இவை அளபெடைப் பெயராயின் மால், கோள் என அளபெடையின்றி வருவன செய்யுள் நோக்கி அளபு சுருங்கி வந்தனவாம்; இவை அளபெடைப்பெயரல்லவாயின் அளபெடைப் பெயர் வந்தவழிக் கண்டு கொள்க.

‡1. மாஅல், கோஒள் என்பன அளபெடைவடிவில் உள்ள இயற்பெயர்கள் இவை மால், கோள் எனவரின் செய்யுள் நோக்கி அளபெடை சுருங்கி வந்தனவாகக் கொள்க. இவை அளபெடையியற் பெயரல்ல என்றால் அளபெடையியற் பெயர்க்கு வேறு உதாரணம் வந்தவழிக் கொள்க.

தெய்.

லகார ளகார வீறுகள் அளபெடைக்கண் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: லகார ளகார வீற்றுள் அளபெடைப் பெயர் மேற் சொல்லப்பட்ட அளபெடைபோல இயல்பாகும், எ-று.

உ-ம்: [2]"வலம்புரித் தடக்கை மாஅல்" [3]"மேவார்த் தொலைத்த விறல்மிகுவேஎள்" எனவரும்.

நச்.

இஃது எய்தாதது எய்துவித்தது.

இ-ள்; அளபெடைப் பெயரே அளபெடை இயல—லகார ளகார ஈற்று அளபெடைப் பெயர் முற்கூறிய ணகார வீற்று அளபெடைப் பெயர்போல அளவு நீண்டு இயல்பாய் விளி யேற்கும், எ-று.

உ-ம்: 'மாஅல் நின்னிறம்போல் மழையிருட் பட்டதே"
"கோஒஒள் கொளக்கோடு கொண்டு"

என்பதனுள் மாஅஅல், கோஒஒள் என வந்தவாறு காண்க.

கல்.

என்-எனின், லகார ளகார வீற்றுப்பெயர் இரண்டற்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: லகாரவீற் றளபெடைப் பெயரும் ளகாரவீற்றள பெடைப் பெயரும் ணகாரவீற்றுப் பெயர்போல இயல்பாய் விளி யேற்கும், எ-று.

உ-ம்: மாஅல் கோஒஒள் எனவரும். அதிகாரத்தான் இவ் விதி ளகார வீற்றின்மேல் ஆகாதோ எனின் ளகார வீற்று விளி யேலாதனவும்கூறி, இது கூறுகின்றமையின் அதிகாரமாற்றெ றென வுணர்க.

குறிப்பு : இச்சூத்திரம் நுதலுதல் பற்றி அளபெடைமிகூஉம் என்னுஞ் சூத்திரவுரையிறுதியில் கூறியவாறு கூறிக்கொள்க.

---

2. பொருள்: வலம்புரிச் சங்கையுடைய பெரிய கையை யுடைய திருமாலே!
3. பொருள் : பகைவரை அழித்த வெற்றிமிக்க வேளே!

### 3. விரவுப்பெயர் விளியேற்குமாறு

**147.** **கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்**
**விளம்பிய நெறிய விளிக்குங் காலை** (33)

(கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்
விளம்பிய நெறிய விளிக்கும் காலை)

**ஆ. மொ. இல.**

The common nouns of non-class (a ஃṛiṇai) which end in the above said letters, are of the said nature when they are used in the vocative case.

**பி.இ நூ.**

**நேமி. சொ 28.**

விரவுப் பெயரெல்லாம் விளிக்குங்கால் முன்னை மரபிற் றாம்.

**முத்து. பெ. 131.**

மெய்யுயிர் இறுதி விரவுப் பெயர்ச்சொல்
உயர்திணைப் பெயரொடும் ஒத்து நடக்கும்.

**இளம்.**

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அஃறிணை விரவுப் பெயருக்குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: கிளந்த இறுதியாவன: உயிரீறு நான்கும் புள்ளி யீறு நான்கு மாயவற்றை யிறுதியாகவுடைய அஃறிணைக்கண் வரும் விரவுப் பெயர், மேற்கூறிய நெறியான் விளியேற்கும், எ-று.

வ-று : சாத்தி—சாத்தீ, பூண்டு—பூண்டே, தந்தை-தந்தாய் எனவும், சாத்தன்—சாத்தா, [1]கூந்தல்—கூந்தால், மகள்—மகளே எனவும் வரும்.

ஓகார வீறும் ரகார வீறுமாய் வருவன விரவுப் பெயர் உளவேற் கண்டு கொள்க. பிறவும் அன்ன.

**சேனா.**

உயர்திணைப் பெயரும் உயர்திணை விரவுப் பெயரும் விளி கொள்ளுமாறு உணர்த்தி இனி அஃறிணை விரவுப் பெயர் விளி கொள்ளுமாறு உணர்த்துகின்றார்.

இ-ள் : கிளந்த இறுதியாவன : உயிரீறு நான்கும் புள்ளியீறு நான்குமாம். அவற்றை இறுதியாக வுடைய அஃறிணைக்கண் வரும் விரவுப் பெயர் மேற்கூறிய நெறியான் விளியேற்கும், எ-று.

உ-ம் : சாத்தி—சாத்தீ. பூண்டு—பூண்டே, தந்தை—தந்தாய் எனவும்; சாத்தன்—சாத்தா, கூந்தல்—கூந்தால், மக்கள்—மக்காள் எனவும் வரும். சாத்தி, பூண்டு, தந்தை, சாத்த என அண்மை விளியாய் வருவனவும் கொள்க.

ஓகார வீறும் ரகார வீறுமாய் வருவன விரவுப் பெயர் உள வேற் கொள்க. பிறவும் அன்ன.

தெய்.

அஃறிணைப் பொருள் உணர வரும் விரவுப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட ஈற்றினையுடையவாகிய அஃறிணைப் பொருண்மேல் வரும் விரவுப்பெயர் சொல்லப்பட்ட நெறியவாம் விளிக்குங் காலத்து, எ—று.

உ-ம்: சாத்தன்—சாத்தா, சாத்தி—சாத்தீ, [1]குருடன்—குருடா, குருடி—குருடீ என வரும். பிறவும் வந்த வழிக் கண்டு கொள்க.

நச்.

இது விரவுப் பெயர் விளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள்: கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்—மேல் உயர் திணைக்கண் விளியேற்கும் என்ற எட்டு ஈற்றினையும் உடைய உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப் பெயர், விளம்பிய நெறிய விளிக்கும் காலை—அவ்வீறுகளின் எடுத்து ஓதிய முறைமையினையுடைய விளிக்குமிடத்து, எ—று.

உ-ம்: சாத்தீ, பூண்டே, தந்தாய் எனவும்; சாத்தா, கூந்தால், மக்காள் எனவும் வரும்.

சாத்தி, பூண்டு, தந்தை, சாத்த என அண்மை விளியும் கொள்க.

---

1. கூந்தல்—ஒரு பெண்ணின் பெயராகவும் மயிர்க் கூந்தலின் பெயராகவும் வரும்.
1. குருடன் குருடி என்பன விலங்குகளுக்கும் மக்களுக்கும் இடப்படும் காரணப் பெயர்கள் ஆதலின் விரவுப் பெயர்களாயின.

இனி 'விளிக்குங்காலை' என்றதனால் [2]பிணாவாராய், அழிதூ உவாராய் என எடுத்து ஓதாத ஆகார ஊகார வீற்று விரவுப் பெயர் இயல்பாய் விளியேற்றலும்; சாத்தன் வாராய், மகன் வாராய், தூங்கல் வாராய் என எடுத்தோதிய ஈறுகள் கூறியவாறன்றி இயல்பாய் விளியேற்றலும், இப்பெயர்கள் ஏகாரம் பெற்று விளியேற்றலும் கொள்க.

[3]உயர்திணையோடு அஃறிணை விரவுமாறு, 'அஃறிணை விரவுப் பெயர் இயல்புமாருளவே' (எழுத் தொகை.13) என்புழிக் கூறினாம்.

---

2. பிணா—பெண், அழிதூஉ—அலி
3. உயர்திணைப் பெயரோடு அஃறிணை சென்று விரவிற்று என்றது என்னை? சொல்லதிகாரத்து 'இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய' (சொல். 179) என்று சூத்திரம் செய்வரால் எனின், அதுவும் பொருந்துமாறு கூறுதும். சாத்தன் சாத்தி முடவன் முடத்தி எனவரும் விரவுப்பெயர்க்கண் உயர்திணைக்கு உரித்தாக ஓதிய ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தி நின்ற ஈற்றெழுத்துக்களே அஃறிணை ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்திற்றென்னல்வேண்டும். என்னை? அஃறிணைக்கு ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறன்றி ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின், அங்ஙனம் உயர்திணையிருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை யாண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துதலின், அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்றென்று அவற்றின் உண்மைத்தன்மைத்தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார். இவ்வாறே விளிமரபின் கண் 'கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்' என்புழியும் ஆசிரியர் உயர்திணைவிரவிய விரவுப் பெயர் என ஆண்டும் உண்மைத்தன்மை தோற்றம் கூறுவர். மாணாக்கன் இனிது உணர்தற்கு இவ்வாறு விரவுப் பெயரினது உண்மைத் தன்மைத் தோற்றம் இரண்டு அதிகாரத்திலும் கூறி அவ்விரவுப் பெயர் வழக்கினகண் இருதிணைப் பொருளும் உணர்த்தி இரு திணைச் சொலலாய் நிற்றற்கும் ஒத்த உரிமையவாம் எனப் புலப்பட நிற்குமாறு கூறினார் என்று உணர்க. (தொகை மரபு 12).

கல்.

என்-எனின், உயர்திணைப் பெயர் விளியேற்குமாறு கூறி விரவுப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேல் உயர்திணைப் பெயர்க்கண் விளியேற்கும் எனப்பட்ட உயிரீறு நான்கினையும் புள்ளியீறு நான்கினையுமே தமக்கீறாகவுடைய உயர்திணைப் பெயரோடு அஃறிணை விரவி வரும் பெயர்கள் அவ்வீறுகளின் எடுத்தோதின முறைமையை யுடைய விளிக்குங் காலத் தென்றவாறு.

உ-ம்: சாத்தி—சாத்தி, தந்தை—தந்தாய், பூண்டு—பூண்டே என வரும்.

ஓகாரவீற்று விரவுப் பெயர் கண்டதில்லை.

இவை உயிரீறு.

இனிப் புள்ளியீறு: சாத்தன்—சாத்தா, கூந்தல்—கூந்தால் என வரும். ரகார ளகார வீறாய் வரும் விரவுப் பெயர் கண்டதில்லை.

4. அஃறிணைப்பெயர் விளியேற்குமாறு

148. புள்ளியு முயிரு மிறுதி யாகிய
வஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
றெளிநிலை யுடைய வேகாரம் வரலே. (34)

(புள்ளியும் உயிரும் இறுதி ஆகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉம் காலம் தோன்றின்
தெளிநிலை உடைய ஏகாரம் வரல்ஏ)

ஆ.மொ: இல.

When all the nouns of non-class
Which end in vowels and consonants, become vocatives,
it is clear and certain that the appearance of 'ē' takes place.

பி. இ. நூ:

நன். 304.

ஒ ர மொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

இல. வி. 206.

மெய்யுயிர் அனைத்தீற் றஃறிணை விளிப்பன.

முத்து. பெ. 132

ஆவியும் ஒற்றும் அந்த மாகிய
அஃறிணைப் பெயரெலாம் ஏயொடு சிவணும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப் பெயர்க்கு உரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை : புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப் பெயரெல்லாம் விளி கொள்ளுங் காலந் தோன்றின் ஏகாரம் பெறுதலைத் தெற்றெனவுடைய, எ—று.

வ-று : மரம்—மரமே, அணில்—அணிலே, நரி — நரியே, புலி—புலியே என வரும்.

'தெளிநிலையுடைய' என்று விதந்து ஓதினமையான் ஏகாரம் ஒழியச் சிறுபான்மை இயல்பாய் விளியேற்பனவும் உள.

வ-று : 'வருந்தினை வாழியென் நெஞ்சம்' (அகம். 19) எனவும் 'கருங்கால் வெண் குருகு' (நற் 54) எனவும், 'நெடுவெண் மதி' எனவும், காட்டுச் சார் ஓடும்' குறு[1]முயால்' எனவும், 'ஒண்டூவி' [2]நாராய்' (நன். மயிலை உரை) எனவும் வரும்.

சேனா.

இ-ள் : புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப் பெயரெல்லாம் விளி கொள்ளுங் காலந் தோன்றின் ஏகாரம் பெறுதலைத் தெற்றெனவுடைய, எ—று.

உ-ம் : மரம்—மரமே, அணில்—அணிலே, நரி—நரியே, புலி புலியே என வரும்.

---

1, 2 முயல், நாரை என்பன முயல் நாராய் எனத் திரிந்து விளியேற்றனவாதலின் அவை உதாரணம் ஆகா. உரையாளர் காட்டக் காரணம் ஏகாரம் பெறாமை கருதியதாகலாம்.

நெஞ்சம், குருகு, முயால், நாராய் என வருவனவற்றைச் செய்யுள் விகாரம் என்பர் கல்லாடனார்.

அஃறிணைப் பெயருள் விளி கேட்கும் ஒருசார் விலங்கின் பெயரும், விளிகேளாதனவற்றைக் கேட்பனவாகச் சொல்லுவார் கருதியவாற்றான் விளியேற்பனவுமல்லது, ஒழிந்தபெயரெல்லாம் விளியேலாமையின் 'விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்' என்றார். அதனானே சுட்டுப் பெயர் முதலாயின விளியேலாமை யும் கொள்க.

'தெளிநிலையுடைய ஏகாரம் வரலே' என ஏகாரம் பெற்று விளியேற்றலை யாப்புறுப்பவே, யாப்புறவின்றிச் சிறுபான்மை பிறவாற்றான் விளியேற்பனவும் உள என்பதாம். அவை: 'வருந்தினை வாழி என் நெஞ்சம்' (அகம் 16) 'கருங்கால் வெண் குருகு ஒன்று கேண்மதி' (நற். 24) 'காட்டுச் சார் ஓடும் குறு முயால்', 'ஒண்டுவிநாராய்' என்னுந் தொடக்கத்தன.

தெய்.

அஃறிணைக்கு உரியபெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்றி.

இ-ள்: புள்ளியும் உயிருமாகிய எழுத்தினை யீறாகவுடைய அஃறிணைப் பெயராகி வருவனவெல்லாம் விளியேற்குங் காலந் தோன்றின், ஏகாரம் வருதல் தெளிநிலையுடைய, எ—று.

எனவே பிறவாற்றான் வருவன இத்துணை விளக்கம் இல என்றவாறாம். என்பது என் சொன்னவாறோவெனின், அஃறி ணைப் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்றல் பெரும்பான்மை, [1]உயர்திணைக்கு ஓதிய வாய்பாட்டால் வருதல் சிறுபான்மை என்றவாறு.

'காலந்தோன்றின்' என்றது அஃறிணைப் பெயர் உயர் திணைபோல் விளியேற்பன சிலவுள என்பதூஉம், ஏலாதனவும் ஒரு காலம் பற்றி விலக்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க.

உ-ம்: புலியே, வண்டே, மரையே, மானே, மாவே, குயிலே, மரமே எனவரும், தும்பி—தும்பீ எனவும், யானை—யானாய் எனவும், வேங்கை—வேங்காய் எனவும், தென்றல்—தென்றால்

---

1. உயர்திணைக்கு ஓதிய வாய்பாட்டால் வருதலாவது இ உ ஐ ஓ ன ர ல ள என்னும் எழுத்துகளையுடைய உயர்திணைப் பெயர்களுக்குக் கூறப்பட்ட விளியேற்கும் விதிகளால் வருதல். நம்பி—நம்பீ என வருவதுபோலத் தும்பி—தும்பீ என வருவது முதலியவாகக் கொள்க.

எனவும், அரிமான்—அரிமானே எனவும் உயர்திணை வகையான் வருவ சிறுபான்மை.

நச்.

இஃது அஃறிணைப் பெயர் விளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள்: புள்ளியும் உயிரும் இறுதியாகிய—புள்ளியீறும் உயிரீறுமாகிய, அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்—அஃறிணையிடத்து வரும் எல்லாப் பெயர்களும், விளிநிலை பெறூஉம் காலம் தோன்றின்—விளிகொள்ளும்காலம்தோன்றின், ஏகாரம் வரல் தெளிநிலையுடைய—ஏகாரம் பெறுதலைத் தெற்றெனவுடைய எ-று.

உ-ம்: மரம்—மரமே, அணில்—அணிலே, புலி--புலியே, கிளி—கிளியே எனவரும்.

'தெளிநிலையுடைய' என்றதனான் 'வருந்தினை வாழியென் நெஞ்சம்' (அகம் 19), 'கருங்கால் வெண்குருகு ஒன்று கேண்மதி' (நற்.54) 'திங்களுள் தோன்றியிருந்த ஒண் குறுமுயால்' (கலி.144) என்றாற்போலப் பிறவாற்றான் விளியேற்பனவும் கொள்க.

இனி உயர்திணைப் பொருள் ஏகாரம் பெறாமல் விளி யேற்று நின்றனவற்றையும் வழக்குச்சொல்லால் தெரியப்பொருள் கூறவேண்டியக்கால் இவ் ஏகாரமே விரித்துக்கூறல் வேண்டுதலும் இதனால கொள்க.

[1]தொண்டையோர் மருக, மன்னர் மன்ன, மறவர் மறவ, செல்வர் செல்வ, செருமேம் படுந (பெரும். 454) 'பைம்பூண் சேஎய்' (பெரும். 458) என்றாற்போல்வன ஏகாரத்தால் பொருள் கூறுமாறு உணர்க.

'விளிநிலை பெறூஉங்காலந்தோன்றின்' என்றார் முன்னிலை யாக்கலும் சொல்வழிப் படுத்தலும் வேண்டுழியே விளியேற்கும் என்றற்கு.

கல்.

என்-எனின், உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரும் விளியேற்குமா றுணர்த்தி இனி, அஃறிணைப் பெயர் விளியேற் குமா றுணர்த்துதல் நுதலிற்று.

---

1. மருகனே, மறவனே, செல்வனே, மேம்படுநனே, சேயே என ஏகாரத்தால் பொருள் கூறுதல் காண்க.

இ-ள் : புள்ளியெழுத்தினையும் உயிரெழுத்தினையும் ஈறாக வுடைய அஃறிணையிடத் தெல்லாப் பெயர்களும் விளிக்கு நிலைமை பெறுங் காலம் உண்டாயின் அவ்விடத்து ஏகாரம் வருதலைத் தெளியப்படும் நிலையை யுடையன, எ-று.

உ-ம் : நரி—நரியே, புலி—புலியே, அணில்—அணிலே, மரம்—மரமே என வரும்.

'வருந்தினை வாழி என் நெஞ்சம்' எனவும், 'காட்டுச் சாரி ஓடும் குறுமுயால்' எனவும். பிறவாறும் விளியேற்று வந்தனவால் எனின், அவ்வாறு வருவன வழக்கினகத்தின்மையின் [1]அவை செய்யுள் விகாரம் எனக் கொள்க.

புள்ளி யீறாகலின் புள்ளியீறு முற்கூறினார் எனக் கொள்க.

'விளிநிலை பெறூஉம் காலந் தோன்றின்' என்றது அவை விளியேற்கு நிலைமை சிறுபான்மை யென்றது என வுணர்க. 'தெளிநிலையுடைய' என்றது அவ்வேகாரம் பற்றி......க் கூறிய தாகக் கொள்க.

## 5. புறனடை

**149.** உளவெனப் பட்ட வெல்லாப் பெயரு
மளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையி னிசைக்கும் வழக்கத் தான (35)

(உளஎனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபு இறந்தன ஏ விளிக்கும் காலை
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான் அ)

ஆ. மொ: இல.

All the nouns which are said to have vocation case will exceed their limit of sounds when used to address persons at a distance.

பி. இ. நூ:

நன். 313.

அண்மையின் இயல்பும் ஈறழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவும் ஆகும்.

---

1. 'நரிகாள் செய்யுள் விகாரம் எனக் கொள்க'—உரைக் கோவைப் பாடம். பொருத்தமின்று.

இல. வி. 215 ஷை ஷை ஷை

தொன். வி 78. ஷை ஷை ஷை

முத்து. பெ. 134

இருதிணை மருங்கினும் எல்லாச் சொற்களும்
சேய்மையின் அளவைக் கடந்துசென் றிசைக்கும்

இளம்.

இச்சூத்திரம் உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்டன எல்லாப் பெயரும் விளிக்குமிடத்துத் தத்தம் மாத்திரையின் இறந்து இசைத்தனவாம், சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கத்தின் கண், எ-று.

வ-று : [1]நம்பீ, சாத்தா என வரும்,

'அளபெடை மிகூஉம்' (விளி.8) என்றமையின் அளபெடைப் பெயர் ஒழித்துக் கொள்க.

சேனா.

இ-ள் : உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்ட எல்லாப் பெயரும் விளிக்குமிடத்து தத்தம் மாத்திரையின் இறந்து இசைத்தனவாம், சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கத்தின்கண், எ—று.

உ—ம் : நம்பீஇ, சாத்தாஅ எனவரும்.

'அளபெடைமிகூஉம்' என்றமையான், அளபெடைப் பெயர் ஒழித்து நின்ற பெயர் கொள்க.

'அளபிறந்தன' என்றது நெட்டெழுத்தளபெடையாயும் அளபெடை மூன்று மாத்திரையின் இறந்தும் சேய்மைக்குத் தக்கவாறு நீண்டிசைக்கும் என்றவாறு.

சேரமான். மலையமான் என்னும் ஈற்றயல் அளபிறந்தவழி, இயல்புவிளியென்னாது ஈற்றயல் நீண்டதாகக் கொள்க. அளபிறப்பன எழுத்தாகலின் ஒற்றுமை நயத்தாற் 'பெயரளபிறந்தன' என்றார்.

---

1. பிற உரையாளர் போலவே நம்பீஇ, சாத்தாஅ என அளபெடை வடிவில் உதாரணம்காட்டலே பொருந்தும்.

தெய்.

இருதிணைக்கண்ணும் வரும் விளிவேற்றுமைக் கெல்லாம் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : இருதிணைக்கண்ணும் விளியேற்றுள எனப்பட்ட எல்லாப் பெயரும் ஓதிய அளவையினான் அன்றி மாத்திரை நீண்டு ஒலிக்கும், சேய்மைக்கண் நின்ற பொருளை விளிக்கும் வழக்கின்கண், எ—று.

எனவே மேற்சொல்லப்பட்டவற்றுள் நெட்டெழுத்துப் பெற்றன விடைநிலைப் பொருட்கண் என்று கொள்ளப்படும்.

அளவிறந்தன என்றமையான் மூன்று மாத்திரையின் நீண்டு ஒலித்தலும் கொள்க.

உ—ம் : சாத்தாஅ, கொற்றாஅ எனவும்; சாத்தாஅஅ கொற்றாஅஅ எனவும் வரும்.

நச்.

இது முற்கூறிய மூவகைப் பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள் : உள எனப்பட்ட எல்லாப் பெயரும்—இருதிணைக் கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்ட எல்லாப்பெயரும், விளிக்குங்காலை அளவு இறந்தன—விளிக்குமிடத்துத் தம்மாத் திரையின் இறந்து இசைத்தனவாம், சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான—சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கின்கண், எ-று.

உ—ம் : நம்பீஇ, சாத்தாஅ எனவரும்.

சேரமாஅன், மலையமாஅன் என்பன அளபிறந்து இசைக்கும் வழி இயல்பின்றி ஈற்றயல் நீண்டனவாம்.

கல்.

என்-எனின், மேற்கூறிய மூவகைப் பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்: மேல் விளியேற்றற்குரியன வென எடுத்தோதப்பட்ட எல்லாப் பெயர்களும் தத்தம் மாத்திரையின் மிக்கிசைக்கும் விளிக்குங்காலத்து; யாண்டுமோ வெனின், அற்றன்று; சேய்மைக் கண் இசைக்கும் வழக்கிடத் தென்றவாறு.

உ-ம் : நம்பீஇ, சாத்தாஅ என வரும்.

வரையறையின்மையின் வேண்டியவாறு அளபெழுந் தொலிக்கும் எனக் கொள்க. ஆயின், உயிர் பன்னிரண்டு மாத்திரையும் ஒற்று பதினொரு மாத்திரையும் எனக் கொள்க.

ஆதி.

சொல்லப்படும் எல்லாப் பெயர்களும் சேய்மை பற்றி ஒலித்து விளிக்கும் முறைமையில் தம் அளவு கடந்து நிற்பன.

இங்கு விளி என்பது சேய்மையில் உற்றதை அழைப்பது என்று காட்டி அவ்வொலி அளவு கடந்து நிற்பது என அறிவிக்கிறார்.

அளவிறந்தன : 1. விளிப்பின் ஒலி அளவு கடந்து நீள்வது.
2. விளிவிதிகள் அளவில் அடங்காதன.

நமரங்காள், சான்றீரே, பெண்டீரே—இவை விதி கடந்து நிற்பதை ஓர்க.

அம்ம விளியேற்குமாறு

150. அம்ம வென்னு மசைச்சொ னீட்ட
மம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே (36)

(அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணாது ஆயினும்
விளியொடு கொள்ப தெளியுமோர்ஏ)

ஆ. மொ: இல.

The lengthening of the word 'amma' used as explative, but not as a noun of relation, will be considered as of the vocative case by the people of clear understanding.

பி இ. நூ:

முத்து. பெ. 133

அம்ம அசைச்சொல் நீட்டமும் விளிக்கும்.

இளம்.

இச்சூத்திரம், அம்ம என்னும் அசைச் சொல்லினது நீட்டம் விளிகொள்ளும் பெயரொடு தோன்றாது; இடைச் சொல்லொடு தோன்றிற்றாயினும் விளியாகக் கொள்வர் தெளிவோர் எ-று.

வ-று : அம்மா சாத்தா என்பது.

சாத்தா என்பதே எதிர்முக மாக்கு மாயினும் அம்மா என்பதும் அவ்வெதிர்முகமே குறித்து நிற்றலின் விளியாகக் கொள்ளப்படும் என்பார் 'விளியொடு கொள்ப' என்றார்.

சேனா.

இ-ள்: அம்ம என்னும் அசைச் சொல்லினது நீட்டம் விளி கொள்ளும் பெயரொடு தோன்றாது; இடைச் சொல்லோடு தோன்றிற்றாயினும் விளியாகக் கொள்வர் தெளிவோர், எ—று.

உ-ம்: அம்மா சாத்தா என வரும்.

சாத்தா என்பதே எதிர்முக மாக்கு மாயினும் அம்மா என்பதும் அவ்வெதிர்முக மாக்குதலே குறித்து நிற்றலின் விளியாகக் கொள்ளப்படும் என்பார் 'விளியொடு கொள்ப' என்றார்.

தெய்.

இடைச் சொற்கள் விளிப்பொருண்மை உணர வருவன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அம்ம என்னும் அசைச் சொல் நீட்டமாகிய அம்மா என்னும் சொல் அம்முறைப் பெயரோடும் பொருந்தாதாயினும் அதனை விளிப்பொருண்மை யுணர்த்துஞ் சொல்லோடு கூட்டிக் கொள்ப அறிவர், எ—று.

உ-ம்: அம்மா கொற்றா என வரும்.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் [1]ஏடா, ஏடா, ஏடி, ஏடீ என வருவனவும் கொள்க.

நச்.

இஃது அம்ம என்னும் இடைச்சொல் விளியேற்குமாறு கூறுகின்றது.

இ-ள்: அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்—அம்ம என்று கூறப்படும் உரைப்பொருட் கிளவியினது நீட்டமாகிய அம்மா என்னுஞ் சொல், அம்முறைப் பெயரொடு சிவணாதாயினும்—முற்கூறிய விளியேற்கும் முறைமையினையுடைய பெயர்களோடு பொருந்தாது இடைச் சொல்லாய் நிற்பினும், விளியொடு கொள்ப தெளியு மோரே—விளியேற்கும் பெயர்களோடு இதனையும் விளி நிலைமைத்தாகக் கொள்வர் தெளிந்த அறிவினையுடையோர், எ-று.

1. இக்காலத்து ஏண்டா, ஏண்டீ என வழங்கும்.

உ-ம்: அம்மா கொற்றா எனவரும்.

கொற்றா என்பது எதிர்முகம் ஆக்குமாயினும், கேளாய் என்பதும் அதனோடு கூடி எதிர் முகமாக்கி நின்றவாறு காண்க.

[1] 'அம்மகேட்பிக்கும்' (இடை. 28) எனவும்,

'அம்ம என்னும் உரைப் பொருட் கிளவியும்' (உயிர் ம. 8) எனவும்,

'உரைப் பொருட் கிளவி நீட்டமும் வரையார்' (உயிர் ம. 10) எனவும் ஆசிரியர் இதனைப் பொருள்தந்து நிற்கும் என்றே சூத்திரம் செய்தலின், ஈண்டு 'அசைச் சொல் நீட்டம்' என்றதற்கு 'யாவென் சினை மிசை உரை யசைக் கிளவிக்கு' (மொழிமரபு 1) என்றாற்போல 'எதிர் முகமாக்கும் சொல்லின் நீட்டம்' என்று பொருள் உரைத்துக் கொள்க.

கல்.

என்—எனின், இதுவும் விளித்திறத்தோடு படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அம்ம என்று சொல்லப்படுகின்ற அகர வீற்றசைச் சொல் ஆகாரமாகி நீண்டு நிற்றல் அவ்விளியேற்கு முறைமையையுடைய பெயர்களோடு பொருந்தாதாயினும் பெயர்விளிகளோடு இதனையும் ஓர் விளிநிலைமைத்தாகக் கொள்வர் தெளிந்த அறிவினையுடையார், எ—று.

உ-ம்: அம்மா கொற்றா எனவரும்.

ஆதி.

அம்ம என்னும் அசைச்சொல் நீண்டு அம்மா ஆவது முறைப் பெயராகாது; எனினும் அதனை விளியாகக் கருதுவர்.

---

1. அம்ம என்பதை 'உரைப்பொருட்கிளவி' என்று பொருள் உடையது போலக் கூறுதலாலும் 'அம்மகேட்பிக்கும். என அப்பொருள் இன்னதெனக் கூறுதலாலும் (அதாவது யான் ஒன்றனைக் கூறுவேன் கேள் என்னும் பொருள் படக் கூறுதலாலும்) மொழிமரபு முதற் சூத்திரத்தில் உள்ள 'உரையசைக்கிளவி' என்பதற்கு யான், 'எதிர்முகமாக்கும் சொல்' எனப் பொருள் கூறியவாறே ஈண்டும் 'அசைச் சொல் நீட்டம்' என்பதற்கு 'எதிர்முகமாக்கும் சொல்லின் நீட்டம்' எனப்பொருள் உணர்ந்துகொள்க.

அடே அம்மா எத்துணை பெரிய பொய் பேசுகிறான்.
அம்மா, வியப்பு இடைச்சொல், அம்ம,நீண்டது.
அம்மம்மா யானை எத்துணை பெரியது! ஈங்
கெல்லாம் அம்மா வியப்பு விளி.
தெளியுமோரே கவிமரபு இசைநிறை.

†வை. தங்கமணி

முன்பு எழுத்ததிகாரத்தில் (213) "உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்'' என்றவர், விளிமரபில் (36) 'அம்மஎன்னும் அசைச் சொல் நீட்டம்' என்று மீண்டும் கூறியது 'கூறியது கூறல்' என்ற குற்றம் ஆகாதா? ஆகாது. என்னை? இடையியலிற் கூறப் பட்ட 'அம்ம' என்ற அசைச்சொல் விளியேற்கும்போது 'அம்மா' என்று நீண்டு நின்றாலும், புணரும்போது 'அம்ம' என்ற சொல் எவ்வாறு இயல்பாகப் புணருமோ அவ்வாறே விளியேற்ற பின்னும் இயல்பாகவே புணரும் என்று வெவ்வேறு விதியமைத்துக் கூறுவதால் கூறியது கூறல் என்ற குற்றத்தின் கண் படாவாம் என்றறிக.

உயர்திணைப் பெயருள் விளியேலாதன

151. தநநுவ் வெய்யென வவைமுத லாகித்
தன்மை குறித்த *னளர வென் னிறுதியு
மன்ன பிறவும் பெயர்நிலை வரினே
யின்மை வேண்டும் விளியொடு கொளலே (37)

(த நு நு எ என அவை முதல் ஆகித்
தன்மை குறித்த னளர என் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரின்ஏ
இன்மை வேண்டும் விளியொடு கொளலே)

---

† டாக்டர் ஏ. என். பெருமாள் மூலம் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'அம்ம என்னும் அசைச் சொல்' என்ற கட்டுரையில் கண்ட கருத்து இது. கூறியது கூறல் என்னும் குற்றமாகாதா என்னும் வினாவிற்கே இடமில்லை. 'அம்ம என்னும் அசைச் சொல் நீளும்' என இங்குக் கூறியிருந்தால் உயிர் மயங்கியலில் நீட்டமும் வரையார் என்றதை நோக்கக் கூறியது கூறலாகலாம். இங்கு அசைச் சொல் நீட்டம் என்றதற்கு, உயிர்மயங்கியலிற் கூறப்பட்ட நீட்டம் என்றே பொருளாதலின் அக்குற்றத்திற்கிடமின்று என்க.

* ஞரள எனப் பாடம் கொள்வர் சேனா., நச். ஆகியோர்.

ஆ. மொ: இல.

The words which express relationship having 'tha', 'na' 'nu' and 'e' as initial letters, 'n' 'r' and 'ḷ' as final letters, and such others do not have vocative case.

பி. இ. நூ:

நன். 314

நுவ்வொடு வினாச் சுட் டுற்ற னளர
வைதுத் தாந்தான் இன்னன விளியா.

இல. வி. 216

த ந நு எ என் அவைமுத லாகித்
தன்மை குறித்த னளரவென் இறுதியும்
வினாச்சுட் டெனும் அவைமுதல வாகி
ஐம்பால் குறித்த ஐவகை யிறுதியும்
அன்ன பிறவும் தாமும் தானும்
இன்மை வேண்டும விளியொடு கொளலே.

முத்து. பெ. 135

தமர் நுமர் தமன் நுமன் தமள் நமள் நுமள் விளி
ஏலா நமர் நமன் என்பதும் அற்றே.

இளம்.

இச்சூத்திரம் தநநு என்னும் உயிர் மெய்யையும் எ என்னும் உயிரையும் முதலாக வுடைவாய் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன,ள,ர என்னும் மூன்று புள்ளியையும் இறுதியாக வுடைய சொல்லும் அவை போல்வன பிறவுமாகிய பெயர்ச் சொல்லும் வருமாயின் விளியொடு பொருந்துதல் இல, எ—று.

வ—று : தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எம்மாள், எம்மார் எனவரும்.

அன்ன பிறவும் என்றதனான் மற்றையான், மற்றையாள் மற்றையார் எனவும் வருவன கொள்க.

(நான்காவது விளிமரபு முற்றிற்று)

சேனா.

இ—ள் : தநநு என்னும் உயிர்மெய்யையும், எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன ர ள என்னும் மூன்று புள்ளியை இறுதியாகவுடைய சொல்லும் அவைபோல்வன பிறவுமாகிய பெயர்ச்சொல் வருமாயின் விளியொடு பொருந்துதல் இல, எ-று.

உ—ம் : தமன், தமர், தமள்; நமன், நமர், நமள்; நுமன், நுமர், நுமள்; எமன், எமர், எமள், எனவும், தம்மான், தம்மார், தம்மாள்; நம்மான், நம்மார், நம்மாள்; நும்மான், நும்மார், நும்மாள்; எம்மான், எம்மார், எம்மாள் எனவும் வரும்.

அன்ன பிறவும் என்றதனான் மற்றையான், மற்றையார், மற்றையாள்; பிறன், பிறர், பிறள் என வருவன கொள்க.

அஃதேல், இவற்றைத் தத்தம் ஈற்றகத்துணர்த்தாது ஈண்டுக் கூறியது என்னையெனின், இவற்றை யீற்றகத் துணர்த்தின் [1]மூன்று சூத்திரத்தான் உணர்த்துதல் வேண்டுதலின் சூத்திரம் பல்கும்; அதனான் ஆண்டு உணர்த்தாராயினார். அஃதேல், உயர்திணையதிகாரத்துக்குப் பின் வைக்கவெனின், ஆண்டு வைப்பின் 'விளம்பிய நெறியே விளிக்குங் காலை' (விளி. 33) என்னும மாட்டேற்று இனிதுபொருள் கொள்ளாதாம். அதனால் பிறிதிடம் இன்மையின் ஈண்டு வைத்தாரென்பது.

(விளிமரபு முற்றிற்று)

தெய்.

எஞ்சிய உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : த ந நு எ என்பன முதலவாகிப் பொருண்மை குறித்த ன ர ள என்னும் ஈற்றினையுடைய சொற்களும் அத்தன்மைய பிறவும் வினைக் குறிப்பு நீர்மையன்றிப் பெயராகிவரின் விளியேற்றலின்மை வேண்டும் ஆசிரியன், எ-று.

அவையாவன : தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்.

---

1. ன், ள், ர் ஈற்றில் தனித்தனியாக மூன்று சூத்திரம். விளம்பிய நெறியே விளிக்குங்காலை' என்ற மாட்டேறு முன்னர் உள்ள சூத்திரங்களுக்கு ஏற்கும் போது இடையில் விளியேலாப் பெயர்களைப் பற்றிய சூத்திரம் அமையின் மாட்டேற்றுக்குத் தடைவரும். அதனால் உயர்திணையதிகாரத்துப் பின் வைக்கவில்லை.

அன்ன பிறவும் என்றதனால் பிறன், பிறள், பிறர் எனவரும் இவை விளியேலா.

'விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய் நின்னாட்டு
இளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ' (புறம். 130)

என்புழி யகரம் விளியேற்றதால் எனின், அவ்வாறு வருவன வழக்குப் பயிற்சியின்மையின் எடுத்து ஓதிற்றிலர். ஆயினும் 'செய்யுள் மருங்கின்' (எச்சவியல். 67) என்னும் அதிகாரப் புறனடையால் இந்நிகரவெல்லாம் அமைத்துக் கொள்க

இவ்விளி வேற்றுமையை முடிக்குஞ் சொல்யாதோவெனின், இஃது எழுவாய் வேற்றுமையது திரிபு ஆகலான், அதற்குப் பயனிலையாகி வருவன வற்றுள் இதற்கு ஏற்புடையன முடிக்குஞ் சொல்லாம் எனக் கொள்க. இவ்வாறு ஒற்றுமையுடைத்தாக லானே ஒருசார் ஆசிரியர் வேற்றுமை ஏழெனக் கொண்ட துணர்க.

இவ்வோத்தினுட் சூத்திரம் உட்பட உரையின் அளவு கிரந்த வகையான் நூற்று முப்பது.

(விளிமரபு முடிந்தது)

நச்.

இஃது உயர்திணைப் பெயருள் விளியேலாதன கூறுகின்றது.

இ-ள்: த ந நு எ என அவை முதலாகி— த ந நு என்னும் உயிர் மெய்யையும் எ என்னும் உயிரையும் முதலாகவுடைய வாய், தன்மை குறித்த ன ர ள என் இறுதியும்—ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன ர ள என்னும் மூன்று புள்ளியை இறுதியாகவுடைய சொல்லும், அன்ன பிறவும் பெயர்நிலை வரினே—அவை போல்வன பிறவும் ஆகிய பெய ராகிய நிலைமையையுடைய சொற்கள் வரின், விளியொடு கொளல் இன்மை வேண்டும்—மேல் விளியேற்கும் எனப்பட்ட பெயரோடு கோடலை இல்லாமை வேண்டும் ஆசிரியன், எ—று.

உ-ம்: தமன். தமர், தமள்; நமன், நமர், நமள்; நுமன், நுமர், நுமள்; எமன், எமர், எமள் எனவும், தம்மான, தமமார், தம்மாள்; நம்மான், நம்மார், நம்மான்; நும்மான், நும்மார், நும்மாள்; எம்மான், எம்மார், எம்மாள் எனவும வரும்.

பிறவும் என்றதனான் மற்றையான், மற்றையார், மற்றை யாள்; பிறன், பிறர், பிறள் என வரும்.

'வேண்டும்' என்றதனான் எம்பீ, 'எம்மானே தோன்றினாய் என்னை யொளித்தியோ' (சீவக. 1801) என்றாற் போலச் சிறு பான்மை விளியேற்பனவும், தமர் முதலியன கள் என்னும் இடைச் சொல்லோடு கூடியவழி னகார வீறுபோல ஈற்றயல் நீண்டு தமர் காள், நமர்காள் எனவும்; நமரங்காள் எனப் பெயர்த் திரிசொல் லாய்த் திரிந்து நின்று விளியேற்பனவும் கொள்க.

எம்பி என்னும் கிளைமுதற்பெயரைத் தன்னின முடித்தலாற் கொள்க.

(விளிமரபு முற்றும்)

கல்.

என்—எனின், இதுவும் உயர்திணைப் பெயருள் விளியேலா தன கூறுதல் நுதலிற்று.

இ-ள்: த ந நு எ என்று சொல்லப்பட்ட அவ்வெழுத்துகளை முதலாகவுடையவாகி ஓர் தொடர்ச்சித் தன்மையைக் குறித்த னளர வென்னும் ஈற்றெழுத்தினையுடைய பெயர்களும் அத்தன் மையான பிற பெயர்களுமாயுள்ள பெயராகிய நிலைமையை யுடைய சொற்கள் வரின், மேல் விளியேற்கும் எனப்பட்ட பெய ரோடு விளிகோடலை இல்லாமையை வேண்டும் ஆசிரியன், எ-று

உ-ம்: தமன் தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன் எமள், எமர் எனவும், பிறவும் என்றதனான் மற்றை யான், மற்றையாள், மற்றையார்; பிறன், பிறள், பிறர் எனவும் வரும்.

இவற்றை உயர்திணைப் பெயர்களோடு கூறாது ஈண்டுக் கூறியது என்னை யெனின், இவை [1]ஓரினத்துப்பட்டு இயைந்து வருதலான் ஈண்டுப் போந்து உடன் கூறினார் என்க.

(நான்காவது விளிமரபு முற்றும்)

ஆதி.

த ந நு எ என்னும் எழுத்தில் தொடங்கி, ன், ள், ர் ஈறு பெற்றுப் பொருள் குறித்து நிற்கின்ற பெயர்களும், அவை போன்ற பிறவும் விளி கொள்வது இல்லை.

தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்.

---

1. ஓரினம்—விளிகொள்ளாதன என்னும் இனம்.

பிற : எம்மாள், நம்மாள்; நும்மவர்; அவன், அவர்—இவை விளி பெறுவதில்லை.

குறிப்பு : ஆசிரியர் 37 சூத்திரங்களில் விளிமுறை பற்றிப் பாரித்து உரைத்தார். இவற்றை நன்னூலார் ஒரே சூத்திரத்தில் (363) சுருங்கிய முறையில் தெளிவாகத் தந்துள்ளார். ஆயினும் படிப்பார் உள்ளம் நிறைவு பெற 304-314 வரை விளக்கியுள்ளார்.

ஒரு வேடிக்கை : விளி எழுவாய் ஆதல் அவன் அவள் ஈற்று ன் ள் இழிவாகவும் ஆங்கு ர் உயர்வாகவும் உணர்வு பிறக்கின்றது. இதனால் அண்ணன், அப்பன், அம்மாள், அக்காள் ஈற்றெழுத்துக் கெட்டு அண்ணா, அப்பா, அம்மா, அக்கா என உரைக்கப்படுகின்றன. முதற் சொற்களின் விளி வடிவம் இப்போது முதல் வேற்றுமைப் பெயராக நிலைத்துள்ளது.

என் அண்ணா நல்லவர்.
என் அப்பா பணந் தந்தார்.
என் அம்மா அன்னமிட்டார்.
என் அக்கா பாடுகிறார். (இது புத்திலக்கணம்)

மக்களின் வாழ்க்கை முறை காலத்தை ஒட்டிமாறுவதுபோல மொழியும் மாறும் இயல்பிற்று.

(முற்றியது)

விளிமரபு உரைவளம் முற்றும்.

# பயன் படுத்தப்பெற்ற நூல்கள்


1. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-இளம்பூரணம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
1/140 பிரகாசம் சாலை, சென்னை (1973)

2. தொல்-சொல்-சேனாவரையம்
கு. சுந்தரமூர்த்தி (பதிப்பு) (1966)
தெற்குவீதி, திருப்பனந்தாள்

3. தொல்-சொல்-தெய்வச்சிலையார்
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை (1979)

4. தொல்-சொல்-நச்சினார்க்கினியம்
சை. சி. நூற்பதிப்புக்கழகம், சென்னை (1974)

5. தொல்-சொல்-கல்லாடம்+ஒருவர் உரை
சை. சி. நூற்பதிப்புக்கழகம், சென்னை (1964)

6. தொல்-சொல்-கல்லாடனார் விருத்தி
தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பதிப்பு
வெளியீடு: தமிழ்நாடு அரசினர் கீழ்திசைச் சுவடி
நூலகம், சென்னை (1971)

7. தொல்-சொல்-சேனாவரையம்
சி. கணேசய்யர் உரைவிளக்கக் குறிப்புகளுடன்
வட இலங்கைத்தமிழ் நூற்பதிப்பகம்
சுன்னாகம், இலங்கை (1955)

8. தொல்-சொல்-சேனாவரையம்
பூவராகம்பிள்ளை விளக்கத்துடன்
சை. சி. நூ. கழகம், சென்னை (1970)

9. தொல்-சொல்-குறிப்பு
பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்
வெளியீடு : கணேச சாஸ்திரி
38, பாண்டியன்சந்து, தெப்பகுளம், திருச்சி (1930)

10. தொல்-சொல்-உரைக்கோவை
ஆபிரகாம் அருளப்பன் + வி. அய். சுப்பிரமணியம்
அருள் அச்சகம், வடக்குக் கடைவீதி
திருநெல்வேலி (1963)

11. தொல்-நன்னூல்-சொல்லதிகாரம்
க. வெள்ளைவாரணனார்
கனகசபை நகர், சிதம்பரம் (1971)

12. தொல்-சொல்-ஆதித்யம்
C. L. S. கிறித்தவ இலக்கிய சங்கம்
பூங்காநகர், சென்னை (1971)

13. இலக்கணத் தொகை—சொல்.
ச. வே. சுப்பிரமணியன்
ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்
கோர்ட்டுரோடு, நாகர்கோயில் (1971)

14. Tolkappiyam with critical studies
S. Ilakkuvanar
Kuralneri Publishing house
Madurai-6. (1963)

# சொல், தொடர் அகராதி

**எண்—பக்க எண்**


அ—அவை 8
அகவல் மகளே 39 75
அடிகள்-அடிகேள் 39
அண்ணல் 37
அண்ணன் 55
அணில் 84
அணில் 84
அணில்-அணிலே 86 87
அத்தன்மையன் 56
அத்தன்மையார் 65
அத்தாய் 30 31
அத்தை 30 31
அப்பன் 55
அம்மா 6
அம்மா கொற்றா 91 92
அம்மா சாத்தா 90 91
அமுதா 24
அரசர் 37
அவர் 65 66
அன்னாய் 31 32
அன்னான் 56
அன்னை-அன்னா 30 31 32
அனையான் 56
ஆஅய் 38
ஆடூஉ 14 23 24
ஆண்பால் 70 71
ஆயே 39
ஆருமருவு 57
ஆவே 34
ஆன் 44 45 46
இசைநிறை 6
இடையாய் 48
இத்தன்மையன் 56
இவர் 65 66
இவள் 77
இளையவரே 62
இளையார் 62
இளையீர் 62
இளையீரே 62
ஈற்றயல் நீடல் 3 4 5
ஈறுதிரிதல் 3 4 5
உடையர் 58
உடையாய் 47
உடையான் 47
உண்டயீர் 58
உண்டாய் 47 73
உண்டாய் வா 48
உண்டார்-உண்டாரே 60
உண்டாள் 73
உண்டாள்-உண்டாய் 74
உண்டான் 47
உண்டான்-உண்டாய் 48
உம்மையெஞ்சிநின்றது 7
உவர் 65 66
உழவன் 51
உழாஅ அன் 51 52
ஊரன்-ஊர 43
ஊரன்-ஊரா 42
எதிர்முகமாக்குதல் 4
எந்தை-எந்தாய் 32
எம்பெருமா 39
எம்மா அ அன் 52
எம்மார் 94 95 96 97
எம்மாள் 70 71 94—97
எம்மான் 94—97
எமர் 94-97
எமள் 94-97
எல்லா 39
எல்லாரும் 38
எல்லீரும் 38
என் அக்கா பாடுகிறாள் 98
என் அண்ணன் நல்லவர் 98
என் அப்பா பணந் தந்தார் 98
என் அம்மா அன்னமிட்டார் 98
ஏடா 39
ஏடி 39
கடவுள் வாழி 39
கடியான் 70
கணி-கணியே 3 24
கணி-சோதிடன் 23
கணிதர்-கணிதரே 63
கணியார்-கணியீரே 61
கணியீரே 69
கரி-கரியே 23
கரியவர் 62
கரியவரே 62
கரியாய் 50
கரியார் 62
கரியாரே 62 63

கரியாள் 73
கரியாள்-கரியாய் 50 51
கரியீர் 61
கரியீரே 62 63
கருங்கால் வெண்குருகு 85
கவிமரபு இசைநிறை 6 61
கழலான் 47 48
கிழவன் 51
கிழவோயே 40
கிழா அ அன் 51 52
கிழவோயே 40
குயிலே 85
குரிசில்-குரிசல் 69 70
குரிசில் கூறாய் 39
குருடன் 81
குருடி 81
குழந்தை நன்றாகப்படி 81
குறையறப்பூத்த கொடி
முல்லாய் 11
கூத்தர்—கூத்திர் 58 59
கூந்தல்—கூந்தால் 80
கூந்தல் மா 54
கூந்தால் 81
கூடலார் மன்னவனே 39
கேகயன்மானே 37
கேளிர் 39 40
கேளீர் 39 40
கொடியாய் 50
கொடியான் 50
கொற்றாஅ 89
கொற்றாஅஅ 89
கொன்றாய் குருந்தே 14
கோ—கோவே 20 21
கோ ஒ ஒள் 79
கோஒன் 52
கோமான் 46
கோமாள் 70 71
சாத்த 43 81
சாத்தன்—சாத்தா 42 80 81
சாத்தா 24 81 88
சாத்தா அ 88 89
சாத்தா அஅ 89
சாத்தி 19
சாத்தி—சாத்தீ 80 81 83
சாத்தீ 12
சான்றார்—சான்றீரே 60
சான்றீரே 96
சிறாஅர் 63 64
சிமான் 46
சிலா 24
சுடர்த்தொடீகேளாய் 12 14
சுதா 25
சுந்தரமூர்த்தி 6 12
செங்கால்நாராய் 11
செந்தூவி நாராய் 14
செவிலீ இஇ 28
செய்யார்—செய்யீரே 62
செய்யான்—செய்யாய் 50
செய்யீரே 63
சென்றான்—சென்றாய் 47 48
சென்றார்—சென்றீரே 60
சென்றாரே 60
சேர்ப்பன்—சேர்ப்ப 41—44
சேரமான் 45 46 88
சோழ 43
சோழன்—சோழ 44
சோழன்—சோழா 41 42
தங்கை—தங்காய் 32
தந்தாய்—81
தந்திரவுத்தி 6 8
தந்தை 81
தந்தை—தந்தாய் 80 83
தம் இங்குவா 34
தம்பி—தம்பீ இஇஇஇ 28
தம்மார் 94—97
தம்மாள் 94—97
தம்மான் 94—97
தம்முன் 38 39
தம்முன்—தம்முன்னே 40
தமர் 94—97
தமள் 94—97
தமன் 94—97
தாங்கள் 57
தாம் 57
தாழ் குழல் 39
தான் 13 57
திணை மாலை நூற்றைம்பது
14
திருமகள் 37
திருமால் 71
திருமாலே 39
தமபி—தம்பீ 85
துறைவ 33
துறைவன் 33 34
துறைவன்—துறைவ 43 44 42
தும்பி 14
தென்றல்—தென்றால் 85
தென்னவனே 39
தேர்வேந்தே 39
தொடி 12
தொழிஇ 27 28
தொழி இஇ 26 27

தொழீ இஇஇ 26 27
தோழீ இ 27
தோழீ இஇஇ 23
தோன்றல் 37
தோன்றல்—தோன்றஅல் 69 70
நங்கை—நங்காய் 18 19
நங்கை வாழி 33 34
நம்பான் 39
நம்பி—நம்பீ 18
நம்பியார்—நம்பீரே 61
நம்பிவாழி 33
நம்பீ 88
நம்பீ இ 88 89
நம்பீரே 61
நம்மார் 94—97
நம்மாள் 94—97
நம்மான் 94—97
நம்முன்—நம்முன்னே 40
நமமுன்—நமமுனா 39
நமர் 94—97
நமரங்காள் 90
நமள் 94—97
நமன் 94—97
நரி 84 87
நல்லார்—நல்லாரே 63
நல்லான்—நல்லாய் 51
நாரை 84
நின்றான்—நின்றாய் 48
நீயிர் 13 66 67 68
நும்மார் 94—97
நும்மாள் 94—97
நும்மான் 94—97
நுமர் 68 94—97
நுமள் 68 94—97
நுமன் 68 94—97
பாண் 35
பாண 35
பாணன் 35
பார்ப்பாரீ—பார்ப்பீர் 58 59
பிறிது வந்தடைதல் 3 4 5 20
புலி—புலியே 85 86 87
புழாஅன் 51
பூண்டு—பூண்டே 80 81 83
பூயிலாய் 47
பூயிலான் 47
பெண்டிர்—பெண்டிரே 38 40
பெண்டிர்—பெண்டீர் 58
பெண்டீரே 96
பெண்பால் 70 71
பெருமாஅன் 52
பெருமாள் 71
பேய்ச்சி—பெய்ச்சீ இஇஇஇ 28
பொருந் 35
பொருநன் 35
மக்கள்—மக்காள் 69 70 81
மக 23 24
மகடூஉ 14 23 24
மகள்—மகளே 75 76 80
மகன்—மகனே 53 54
மகாஅர் 63 64
மரம்—மரமே 84 86 87
மருமகள் 75 76
மருமகன் 53 54
மறையே 85
மலையமான் 45 46 88
மாஅயோய் 40
மாட்டேறு 16
மாதா 15
யாந்தர்கூறீர் 39
மாமன்—மாமா 55
மானே 85
முத்தொள்ளாயிரம் 39
முயல் 89
யசோதா 37
யாவர் 57 66 67
யாவன 56 57
யானை—யானாய் 85
வண்டே 58
வந்தவர் 60
வந்தவரே 60
வந்தார் 60
வந்தார்—வந்திரே 60
வந்தாரே 60
வந்தான்—வந்தாய் 47 48
வல்லி—வல்லீ இஇஇ 28
வலம்புரித் தடக்கை 79
வள்ளி—வள்ளீ இஇ 28
வனிதா 25
வாயிலாய் 47
வாயிலான் 47
வாயிலோயே 39
விமலா 25
வெற்ப 43
வெற்பன்—வெற்பா 42
வேங்கை—வேங்காய் 85
வேந்து—வேந்தே 20 21
வேந்துவாழி 33 31
வேலன் 37

## சூத்திர முதற்குறிப்பகராதி

**எண்—பக்க எண்**


அம்மவென்னு 90
அயனெடிதாயி 70
அண்மைச் சொல்லிற் 42
அண்மைச் சொல்லே 32
அளபெடைப் பெயரே 51 63 77
அளபெடை மிகூஉ 25
அவ்வே, யிவ்வென 6
அற்று, ளன்னென் 41
அவற்று, ளிய்யீ 18
அவைதா மிவ்வு 10
ஆருமருவு 57
ஆனெனிறுதி 44
உகரந்தானே 21
உளவெனப்பட்ட 87
எஞ்சிய விரண்டி 58
ஏனைப்புள்ளி 37
ஏனையுயிரே 22
ஓவுமுவ்வு 19
கிளந்தவிறுதி 80
சுட்டுமுதற்றே 64
சுட்டுமுதற் பெயரு 76
தநநுஎன 93
தானென் பெயரு 55
தொழிலிற்கூறு 46
தொழிற் பெயராயி 59
நும்மின்றிரிபெயர் 66
பண்புகொள் பெயரு 49 61
புள்ளியுமுயிரு 84
முறைப்பெயர் 74
முறைப்பெயர்க் கிளிவி 53
முறைப்பெயர் மருங் 29
விளியெனப் 2
வினையினும் பண்பினு 72
ன ர ல ள வென் 35

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழர் தோற்கருவிகள் | ... ரூ. | 10-00 |
| 2. | தமிழும் தமிழரும் | ... ரூ. | 5-00 |
| 3. | தமிழர் எண்ணங்கள் | ... ரூ. | 16-00 |
| 4. | தமிழர் அளவைகள் | ... ரூ. | 8-00 |
| 5. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ... ரூ. | 6-00 |
| 6. | தமிழ் இலக்கியக் கொள்கை-7 | ... ரூ. | 15-00 |
| 7. | தமிழ் இலக்கியக் கொள்கை-8 | ... ரூ. | 20-00 |
| 8. | எண்பதில் தமிழ் | ... ரூ. | 45-00 |
| 9. | எண்பத்தொன்றில் தமிழ் | ... ரூ. | 65-00 |
| 10. | திவ்வியப்பிரபந்தத்தில் மனம் | ... ரூ. | 12-00 |
| 11. | பாரதியார் வாழ்க்கை கொள்கைகள் | ... ரூ. | 8-00 |
| 12. | ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு | ... ரூ. | 20-00 |
| 13. | தொல்காப்பியம் புணரியல் | ... ரூ. | 10-00 |
| 14. | தொல்காப்பியம் - தொகை மரபு | ... ரூ. | 8-00 |
| 15. | தொல்காப்பியம் - உயிர்மயங்கியல் | ... ரூ. | 12-00 |
| 16. | தொல்காப்பியம் - புள்ளிமயங்கியல் | ... ரூ. | 15-00 |
| 17. | தொல்காப்பியம் - குற்றியலுகரப்புணரியல் | ... ரூ. | 11-00 |
| 18. | தொல்காப்பியம் - கிளவியாக்கம் | ... ரூ. | 20-00 |
| 19. | தொல்காப்பியம் - வேற்றுமையியல் | ... ரூ. | 14-00 |
| 20. | தந்திவனப்புராணம் | ... ரூ. | 15-00 |
| 21. | திருமயிலை உலா | ... ரூ. | 7-00 |
| 22. | ஊஞ்சல் இலக்கியம் | ... ரூ. | 10-00 |
| 23. | மீனாட்சியம்மன் திருப்புகழ் | ... ரூ. | 10-00 |
| 24. | வெள்ளைக்காரன் கதை | ... ரூ. | 7-00 |
| 25. | சிந்து இலக்கியம் | ... ரூ. | 8-00 |
| 26. | மெய்க்கீர்த்திகள் | ... ரூ. | 20-00 |
| 27. | கண் மருத்துவம் | ... ரூ. | 50-00 |
| 28. | பிரபந்த தீபிகை | ... ரூ. | 12-00 |
| 29. | திராவிடமொழி இலக்கியங்கள் | ... ரூ. | 35-00 |
| 30. | தமிழில் விடுகதைகள் | ... ரூ. | 12-00 |
| 31. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... ரூ. | 15-00 |
| 32. | தஞ்சைமாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... ரூ. | 12-00 |
| 33. | சித்திரக்கவிகள் | ... ரூ. | 25-00 |
| 34. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் | ... ரூ. | 15-00 |
| 35. | Language and Grammar-Heritage of the Tamils | ... Rs. | 22-00 |
| 36. | Cultural Heritage of the Tamils | ... Rs. | 20-00 |
| 37. | Literary Heritage of the Tamils | ... Rs. | 50-00 |
| 38. | Philosophical Heritage of the Tamils | ... Rs. | 22-00 |
| 39. | Heritage of the Tamils - Art & Architecture | ... Rs. | 25-00 |
| 40. | Epigraphical Evidences for Tamil studies | ... Rs. | 10-00 |
| 41. | Papers on Tamil Studies | ... Rs. | 15.00 |
| 42. | Tamil Drama | ... Rs. | 20-00 |
| 43. | Folk Arts of the Tamils | ... Rs. | 10-00 |
| 44. | A Study of Perunkatai | ... Rs. | 12-00 |
| 45. | Thiru Murugan | ... Rs. | 5-00 |
| 46. | Dr. Mu. Va. | ... Rs. | 20-00 |
| 47. | Tamil Research through Journals | ... Rs. | 7 50 |
| 48. | Dissertations on Tamilology | ... Rs. | 10-00 |
| 49. | Tamil writers Directory | ... Rs. | 10-00 |
| 50. | Bibliography on Translations Tamil | ... Rs. | 35-00 |
| 51. | Tamil-Text | ... Rs. | 25-00 |
| 52. | Heritage of the Tamils-Siddha Medicine | ... Rs. | 45-00 |
| 53. | Siddha Medical Manuscripts in Tamil | ... Rs. | 8-00 |

Japonica Dial 441913